www.tamilarangam.net

ஜனவரி 1997

# எரிமலை



www.tamilarangam.net


# அக்கறைப் பூக்கள்




எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

எம் வணக்கங்களும் நன்றிகளும் சமர்ப்பணம்.

எம் தேசத்தின் விடுதலைக்கு உயிர் கொடுத்து, தமிழர் நெஞ்சில் நீங்காத இடம்பெற்ற எம் இதய தீபங்களின் நினைவாக மாவீரர்நாள் நிகழ்வுகள் மிகச் சிறப்பாக உலகெங்கும் கொண்டாடப்பட்டதை அறிந்து மகிழ்கின்றேன்.

விடுதலைக்காக எம் தேசம் பெரும் விலை கொடுத்துள்ளது. அளவிடமுடியாத துன்பங்களை எதிர்கொண்டு, தமிழீழம் அடைவதற்கு போராடிக் கொண்டே இருக்கிறார்கள். தமிழீழ விடுதலைக்கு எம் தமிழ் நாட்டின் சூடு சொரணை உள்ள தமிழனின் ஆதரவு என்றும் உண்டு. நம் தமிழீழ விடுதலைக்கு உயிர் கொடுத்து விதையாகி விட்ட தமிழர் நெஞ்சில் நீங்கா இடம் பெற்ற நமது தமிழீழ போராளிகளுக்கு எம் சோகத்தோடு வீர வணக்கம்.

'மாசுபடாத வீரமரணமாய் என் வாழ்வு முடிய வேண்டும். எமது வெற்றியை கேட்டு மகிழ்ந்த என் தலைவனின் நெஞ்சம் என் மரணத்தைக் கேட்டு கண்ணீர் கசிய வேண்டும் அவ்வுன்னத முடிவையே யான் வேண்டுகின்றேன்.' எனச் சொல்லி கடைசி வரைக்கும் வாழ்ந்து காட்டி காலிழந்தும் தமிழ்ஈழத்திற்கு பணி செய்து இந்திய பாசிச வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட எமது கிட்டு மாமா இன்று நம்முடன் இல்லை. ஆனால் உலகின் தமிழர் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டே இருப்பார். ஒவ்வொரு போராளியும் தமிழர் நெஞ்சில் வாழ்வாங்கு வாழ்வார்கள்.

என் தமிழ் தேசியத்தை தலைநிமிரச் செய்த தம்பி பிரபாகரன் பல்லாண்டு வாழ வேண்டும்.

என் நெஞ்சமே என்றும் நீங்கள் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இந்தியா மத்தியஸ்த்தம் செய்ய வேண்டும் என நினைக்க வேண்டாம். இந்தியா நம் மண்ணுக்கும், நம் விடுதலைக்கும், நம் மக்களுக்கும், நம் போராளிகளுக்கும் என்ன செய்தது என உங்களுக்கு தெரியும். அந்த சோகம் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். என்றும் இந்தியா நயவஞ்சகமாக நம் போராட்டத்தை நசுக்க நினைக்குமே தவிர, ஆதரவு தராது. நம் வளர்ச்சி இந்திய தேசியத்தை உடைத்து விடும் என்று இந்தியா கருதுகிறது.

அமெரிக்க போன்ற ஏகாதிபத்திய நாடுகள் நம் விடுதலைக்கு எவ்வளவோ இடையூறுகள் செய்து கொண்டிருக்கின்றன.

எமது தமிழ்நாட்டின் ஆதரவு என்றும் உண்டு. நம் தமிழ் ஈழம் விரைவில் மலரும்.

அன்புள்ள எரிமலையே நாங்கள் மாவீரர்நாளை கொண்டாடினோம். மிகச்சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று தான் இருந்தோம். ஒரு சிறு நிகழ்ச்சி மூலம் மக்களிடம் கருத்து சென்றடையாது என்ற காரணத்தால் விரைவில் மிகப்பெரிய அளவில் கருத்தரங்கு நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். அதில் இன்குலாப், அப்துல் காதர், குளத்தூர்மணி, பாவாணன் ஆகியோரை அழைத்து நடத்தினால் மக்களிடம் விரைவில் செய்தி செல்லும் என எதிர்பார்க்கின்றோம்.

மாவீரர் நாளை முன்னிட்டு எங்களால் முடிந்த வகையில் மாவீரர் நினைவை மீட்டும் சிறிய பிரசுரம் ஒன்றை வெளியிட்டோம்.

தமிழ் ஈழப் பிரச்சாரப்பணி செய்தால் 'மரணம்' வந்து வாசலில் நின்ற படி வாவென்று அழைத்தாலும், நம் மக்களையும், நமது போராளிகளையும் உன்னையும் நினைத்தபடியே மரணத்தை எதிர்கொள்வேன். இந்த அடிமை தேசத்தின் மண்ணில் நான் விழுகின்ற போதும் உன் நினைவோடு உனக்காக கடைசி புன்னகை சிந்திய படியே மரணிப்பேன்.

மே. வி. குமார்
சேலம்

அன்புள்ள தோழர் 'எரிமலை' ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

'எரிமலை' என்ற தங்களின் மாத இதழைப் பற்றி செவி வழியும் பிற செய்தித்தாள்கள் வழியும் கேட்டறிந்த நான் சென்னையைச் சார்ந்த ஒரு தோழரின் வழி அதனை கண்களால் காணவும், படிக்கவும் முடிந்தது. என்னுள் புதைந்து கிடந்த பல வினாக்களுக்கு அந்த ஒரே ஒரு இதழே விடை பகர்ந்தது. விடுதலைப்புலிகள் பற்றிய தவறான எண்ணங்களும், 'தனித் தமிழீழம்' உருவானால் இச்சிறு நிலப்பரப்பு பொருளாதாரத்தில் தன்னிறைவடைய முடியாது போன்ற எண்ணங்களும் மக்களின் மனதில் நிறைந்திருக்கின்றன.

என்னைச் சுற்றியுள்ள பலர் இது போன்ற வினாக்களை எழுப்புகின்றனர். ஆனால் அதற்குத் தகுந்த விளக்கங்களை என்னால் அளிக்க முடியவில்லை. அதற்கு காரணம் 'தமிழ் ஈழத்தைப் பற்றிய செய்திகள் அதிகம் அறிய முடியவில்லை. உள்நாட்டில் உள்ள செய்தித்தாள்கள் சிலவற்றின் வழியும் மற்ற வெளிநாட்டு வானொலி, தொலைக்காட்சி வழியும் மட்டுமே ஓரளவு மேலோட்டமான செய்திகளை தெரிந்து மற்றவர்களுக்கு விளக்கம் அளிக்க முடிகின்றது.

எங்கள் பகுதியின் அருகாமையில் உள்ள சொல்லாய்வு அறிஞர் அருள் ஐயா மற்றும் தமிழ் நெஞ்சன் ஐயா ஆகியவர்களின் வழி ஈழப்பிரச்சினைகள் பற்றிய அடிப்படைச் சாரத்தை ஓரளவு தெரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் 'தமிழ் ஈழம்' பொருளாதாரத்தில் முன்னேறும் செய்திகள் தெரியாது இருக்கின்றோம்.

தமிழ் நெஞ்சன் ஐயா அவர்கள் நடத்தும் 'சாப்பறை' என்ற கையெழுத்து இதழில் இருந்து,

'இலங்கைத் தீவில்
ஈழமண்ணில்
பறிக்கப்பட்டது தமிழனின் உரிமை –
அதை
வென்றெடுப்பது புலிகளின் கடமை
'விடுதலைப்புலிகள்
விலங்கை உடைக்க
சிந்திய குருதி வீண் போகாது –
தமிழப்புலிகள் கூட்டம் பின்வாங்காது.
பேசு பேசு என்று சொல்லும்
வெட்டிப் பேச்சு ஏனடா? – சிங்களவன்
வீசுகின்ற எலும்பு வேண்டாம்.
ஈழம் எங்கள் நாடடா

அன்பு மணிதேவன்
தமிழ்நாடு.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

ஜனவரி 1997

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★


**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*


# இனவாதம் தோற்கும்போதே சமாதானம் மலரும்!

**1996**-ஆம் ஆண்டினைப் போன்றே 1997–ஆம் ஆண்டிலும் தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் அணுகுமுறையாக இருக்கப் போகின்றது என்பதனையே வருட ஆரம்ப நிகழ்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

'ரிவிஜய' இராணுவ நடவடிக்கை எனும் பெயரில் தென் தமிழீழத்தின் மீது சிறீலங்கா மேற்கொண்ட படையெடுப்பு புத்தாண்டு தினத்திலும் நடந்திருக்கிறது. புலிகளைத் தேடி அழிக்கும் இராணுவ நடவடிக்கை என்னும் பெயரில் தமிழ் மக்களின் வாழ்வினைச் சிதைத்து வருவதே வழமை போல் படையெடுப்பின் நோக்கமாக இருந்திருக்கிறது. மேலும், புத்தாண்டு தினத்தில் மட்டக்களப்புப் பகுதியில் இருக்கும் இராணுவ முகாம்களில் இருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகங்களும் நடந்திருக்கின்றன. இராணுவத்தின் 'புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்' தமிழ் மக்களை நோக்கி இலக்கு வைத்திருந்தமை தொடரப்போகும் நிகழ்வுகளுக்கு முன்னபாய அறிவிப்பாகவே அமைகிறது.

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள சில பாடசாலைகளில் இராணுவம் முகாம் அமைவதற்கான ஏற்பாடுகளைசெய்து வருகின்றமை; ஜேர்மன் நாட்டின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டிருந்த, அகதிகளாக்கப்படும் மக்கள் தங்குவதற்கு என் அமைக்கப்பட்ட தங்குமிடம் பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்டமை; இராணுவ நடவடிக்கைகளின் போது பல வீடுகள் தாக்கியழிக்கப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஏதிலிகளாகி இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டமை; திருமணமான பெண்கள் கூட அரச படைகளால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டமை; பிரான்சின் 'எல்லைகள் கடந்த வைத்திய சேவை' அமைப்பின் சேவை வாகரைப் பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்கப்படக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றமை; இத்தகைய நிகழ்வுகள் மக்களை வாட்டி வதைக்கும் அரசின் போக்குத் தொடரும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

சிறிலங்கா அரசு இவ்வாறு நடந்துகொள்வதன் நோக்கம்தான் என்ன? இலங்கைத் தீவில் அமைதியும் சமாதானமும் நிலவக் கூடாது என்பதில் ஏன்தான் அரசு இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறது?

சிறிலங்காவின் அரச இயந்திரத்தின் அனைத்து முனைகளும் சிங்கள மயமாக்கப்பட்டிருக்கின்றன. சிங்கள பௌத்த இனவாதம் மூலைமுடுக்கெங்கும் புரையோடி பெரும் நிறுவனமாக வளர்ச்சி கண்டிருக்கிறது. சிங்கள மக்களைத் தேசிய இனம் என்று தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வது போல, தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என்று சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளத் தடையாக இருப்பதே சிங்கள பௌத்த இனவாதம் நிறுவனமயப்பட்டு இறுகி இருப்பதன் காரணத்தினால்தான் இந்த இறுக்கம் சிறீலங்காவின் அரசியலில் ஆழமாக நிலையூன்றி இருக்கின்ற போதும், சர்வதேச அரசியலில் சந்திரிகா தனது தாராளவாத ஜனநாயகவாதி என்ற போலி விருப்பத்தினைப் பயன்படுத்தி இனவாத அரசியலுக்கு கவசம் அணிவிக்க முயல்கிறார். இதனால் மிகவும் தந்திரமான அதேவேளை மிக மோசமான இனவாதியாக சந்திரிகா வரலாற்றில் இடம்பெறுகிறார்.

உலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்களில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சாதகமானவற்றை ஒதுக்கி, பாதகமாகப் பயன்படுத்தக் கூடியவற்றைத் தூக்கிப் பிடிப்பதற்கான முயற்சிகளிலும் சந்திரிகா அரசு ஈடுபட்டுள்ளது. உதாரணமாக, சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தேசிய இனங்கள் தமது தன்னுரிமையினைப் பயன்படுத்திப் பிரிந்து போனமையினால் புறந்தள்ளி, சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான மேற்குலகத்தின் அக்கறையினை தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்பு படுத்த முயல்கின்றமையினைக் கூறலாம்.

சிறீலங்காவின் அரச இயந்திரத்தின் புரையோடிப்போயுள்ள இனவாதம் தோற்கடிக்கப்படும் போதுதான் இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் அமைதியுடன் சமாதானமாக மகிழ்வுடன் வாழமுடியும். சிங்கள ஆட்சியாளர்களின் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு முயற்சி தோற்கடிக்கப்பட்டே ஆகவேண்டும். அவ்வாறு தோற்கடிக்கப்படுவது தமிழீழ மக்களின் போராட்டத்தின் வெற்றியிலே தான் தங்கியுள்ளது.

உண்மையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிதான் சிங்கள மக்களின் வளமான வாழ்வுக்கு வழிசமைக்கும். இதனை உணர்ந்து தமிழ் மக்களின் போராட்டத்தின் வெற்றிக்கு உறுதுணையாகச் செயற்படுவது சிங்கள முற்போக்கு வாதிகளினதும் கடமையாக இருக்கிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எனது சுமைகளைத் தாங்கிய இலட்சியத் தோழன்



மனதின் ஆழத்து உணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரு இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில் ஒருவரை ஒருவர் ஆழமாக இனம்கண்ட புரிந்துணர்வில் வேரூன்றி வளர்ந்த நேயம் அது. அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஓர் அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும் எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது. கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையாய் எமது தேசமே விழித்துக்கொண்டது.

கிட்டு, நீ சாகவில்லை;

ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**திரு. வே. பிரபாகரன்**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# புதுயுகத்தின் போர்ப் பிழம்பு



நினைவலைகள் எப்போதும்
உங்களையே நினைத்திருக்கும்
பனைக்கீடாய் உழைக்கும்
தம்பிகை பரபரக்கும் குறிபார்க்கும்.

பள்ளத்துள் வீழ்ந்த தாக!
யார் சொன்னது? காட்டு!
பள்ளத் துள்பதுங் குவது
பைந் தமிழ் இனம் மீட்கவே!

வெல்ல முடியாதது எது? உனக்கு!
நீ ஒரு சுபாஸ் சந்திரபோசு.
அள்ளக் குறையாத அறிவுக்
களஞ்சியம்; நீஒரு செண்பகன்.

தென்னன் புகழ்பாட வந்த நல்
தேர் பாகன்: தம்பி மறவன்!
என்னென் பேன் அவன் ஆற்றல்
போற்று தலுக்குரிய புதுயுகம்.

மரித்து விட்டவர்கள்: மீண்டும்
உதித்து விடுவார்கள்! காலை!
எரித்து விட்டவர்கள் ஈழ
மறவர்கள் குதித்து! வருவார்... நாளை!

தமிழீழம் மலர்க!
தாயகமாகுக!

– கவிஞர் கு.கோ. இராசன்
தமிழ்நாடு

www.tamilarangam.net

# புயற் காற்றில் சிக்கிய விடுதலைப் படகு



சர்வதேசக் கடல். எல்லைகளற்று விரிகின்ற வானத்தின் கீழே ஆர்ப்பரித்து ஓங்கியெழும் கடலின் அலைகளுக்குள் மறைந்தும், நிமிர்ந்தும் கிட்டண்ணாவின் கப்பல் சென்று கொண்டிருக்கின்றது.

கப்பலுக்குள் இருந்து அருமையான பாடல் ஒலிக்கின்றது. விடுதலையின் பொருள் உணர்த்துகின்ற பாடல்; காற்று ஏந்திச் சுழல்கின்றது. அலைகள குதித்து தாளமிடுகின்றன. வானவெளியில் பட்சிகளும் நர்த்தனமிடுகின்றன. சூரியன் தன் ஒளிக்கிரணங்களை கப்பலுக்குள் பாய்ச்சுகின்றான். கப்பலுள் பட்டு ஒளிக்கிரணங்கள் எங்கும் பரவித் தெறிக்கின்றன. மகா சூரியனான கிட்டண்ணா கப்பலுக்குள் இருக்கின்றார்.

எல்லைகளற்ற சுதந்திரப் பெருவெளியில் மிதந்து கொண்டிருக்கின்றார்.

வாழ்வின் ஊற்றாக திகழும் அவரின் உளத்தில் சந்தோஷக்கனல் மூண்டெரிந்து கொண்டிருக்கின்றது. மானுட வாழ்வின் சுதந்திரத்துக்காக அது எரிந்து கொண்டிருக்கின்றது.

எங்கள் தேசத்துச் சூரியனைச் சுற்றிவர தோழர்கள் நின்று கொண்டிருக்கின்றார்கள்.

தேசத்துச் சூரியனின் ஒளிக்கீற்று இருளை வெல்கின்றது. இதயத்தில் ஒளி பாய்ச்சி வாழ்வுக்கான வழியை கோடிட்டுக் காட்டுகின்றது. மனித நேயமும், மக்களின் வாழ்வுக்காக தன்னை உருக்கி எரியும் உன்னதமும், அன்பும், பண்பும், உயிர்ப்பும் பிறக்கின்றது. அது அருகே நிற்பவர்கள் அனைவரையும் பற்றிக்கொள்கின்றது. மக்கள் அதனை என்றும் அழியாது காத்துக் கொண்டிருக்கின்றனர். தேவைப்படும்போதெல்லாம் எடுத்துச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

★★

பரந்த வெளி. ஒரு பட்சிக் கூட்டம் மட்டும் தீவிர வேட்கையோடு பறந்து கொண்டிருக்கின்றது. இந்த நூற்றாண்டு கடக்கலாம். ஆயினும் தீராத தாகத்தோடு பறந்து கொண்டிருக்கின்றன.

அலைகள் சத்தமாகப் பாடுகின்றன.

பல்லாயிரம் குழந்தைகளின் சிரிப்பின் ஒலியைப் பரவி விடுகின்றன.

சிறைகளைத் தகர்க்க, விலங்குளை உடைக்க கடல் அலைகளும் மனிதனுக்கு கற்றுக் கொடுத்திருக்கின்றன. ஏன் அதோ அந்தப் பட்சிக் கூட்டங்களும் தான்.

★★

www.tamilarangam.net


வானம் இருண்டு விட்டது. கரும்பூதம் போல கடல் மாறிவிட்டது. மனிதரின் குரல்களையே கேட்க முடிய வில்லை வானத்தைச் சுருட்டி கடல் விழுங்கிவிடப் போகின்றது. திசைகள் தெரியாது போய்விடுகின்றது. கடலில் வேகமாக குதிரைகள் பாய்வது போன்ற குளம்படி ஓசைகள் காதைச் செவிடு படுத்துகின்றன.

கடலின் கரைகளில் நின்று மனிதர் கள் ஏங்கித் தவித்துக் கொண்டிருக் கின்றார்கள். இருட்டோடு இருட்டாக கப்பலை விழுங்கிவிடத் துடிக்கின்றது இருட்டு.

தென் கிழக்காசியாவில் எங்களை மீறி சூரியன் உதிக்கக்கூடாது என்று யாரோ ஓலமிடுகின்ற குரல் பலமாய் ஒலிக்கின்றது. சமுத்திரத்தின் அலைக ளின் எழுகைக்குள்ளிருந்து திசைகள் கலங்க ஒலிக்கின்றது. மீறி விடுதலைப் படகு விரைந்து கொண்டிருக்கின்றது. இருள் மறுபடியும் விழுங்கி விடத் துடிக்கின்றது. எத்தனையை அது சுவடே இல்லாமல் விழுங்கித் தொலைப் பது.

விடுதலைப் படகை இரண்டு பெரிய இராட்சத இந்திய கடற்படைக் கப்பல்கள் எதிர்கொள்கின்றன. அதன் இலக்கை அடைய விடாது தடுக்க முயல்கின்றன. அது தனது பாதையில் சுதந்திரமாக செல்ல தடையாக நிற் கின்றன. கடலில் பெரும் பாறை எழுந் தது போன்று மறிக்க முயல்கின்றன.

'கட்டுண்டு கிட'

'மீறி நீயெழுவோ?'

'விலங்குகளைச் சுமந்து கிட'

சன்னங்களாய் காதில் தைக்கின்றது.

★★

மனித நேயம், மானுட விடுதலை சமுத்திரத்தில் எங்கோ ஒரு திக்கில் பலமாய் வெட்கிச் சிரிக்கின்றது.

கடலுக்குள் ஒரு கபட நாடகத்தை இந்தியா இயக்கிக்கொண்டிருக்கின் றது. சுற்றி வளைத்து, அருகே வந்து இராட்சத வல்லமையைக் காட்டி விடு தலைச் சூரியர்களின் கைகளில் விலங் கிட விரும்புகின்றது. நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது. இருளைத் தின்று தின்றே பருத்த அது அகிம்சை யின் வடிவாக, கருணையின் பிளம் பாக, அமைதியின் தேவதையாக, காவ லனாக, நண்பனாக கடலில் மாயத் தோற்றங்கள் காட்டி வந்து கொண்டி ருக்கின்றது.

சர்வதேசக் கடற்பரப்பில் சென்று கொண்டிக்கின்ற விடுதலைப் படகை மிரட்டியும், வெருட்டியும், சிரித்தும், நடித்தும் அடாத்தாக இந்தியக் கடற் படை தனது எல்லைக்குள் நகர்த்து கின்றது.

எங்களின் விடுதலைப் படகை ஏன் வழிமறிக்கின்றார்கள்?

கிட்டண்ணாவும் அவரது தோழர் களும் விடுதலைக்கு பாலமிட வல்ல வர்கள். சூரியத் தலைவனின் வழிகாட் டலில் சுடரும் இந்தச் சூரியர்களை சிறையிடத் துடிக்கின்றார்கள்.

மீண்டும் மீண்டு வல்லாதிக்கனாய் நடந்து கொள்கின்றது. விடுதலைப் படகை நோக்கி காந்தியின் கைத்தடி பலமாக உயர்கின்றது. கோபக்கனல் கக்கும் விழிகளில் இருந்து பொறிகள் எழுகின்றன.

வானம் இருள்கின்றது. கடும் புயற்காற்று மையம் கொள்கின்றது.



www.tamilarangam.net

மண்ணும் மனிதர்களும் வாழ்வுக்காக போராடுகின்ற போது இரத்த ஆற்றை ஓடச்செய்வதற்காக இந்தியக் கடற்படை பற்களை நறும்புகின்றது.

இந்து சமுத்திரக் கடலில் காந்தியின் கைத்தடி சுவடே தெரியாமல் போகுமாறு கடற்படையினர் சுழற்றி வீசுகின்றனர். அலைகள் ஏந்தி, ஏந்தி தாழவிடாமல் தடுக்கின்றன. காந்தி தேசத்தின் கரைகளில் சென்று மோதி மோதி துடிக்கின்றது. கடற்படைகளின் துப்பாக்கிக் குழாய்கள் விடுதலைப் படகை நோக்கி வெறுப்பை, எதிர்ப்பை, கொதிப்பை, அச்சத்தை, ஆத்திரத்தை, வெறியை ஊதுகின்றன. விடுதலையை, துடிப்பை, எழுச்சியை, மானுட தாகத்தை, சுதந்திர அபிலாசையைக் கொல்கின்றன.

மானுடத்தின் விடுதலையை பாரத பூமி ஏன் வாழ்த்த மறுக்கின்றது?.

கிட்டண்ணாவும் தோழர்களும் மலையை நிகர்த்த உறுதியுடன் நிற்கின்றார்கள்.

'விடுதலைப்படகு சத்திய சோதனைக்குள் அகப்பட்டு நிற்கின்றது' பேட்டை ரவுடித்தனத்தின் குரல்கள் அபத்தமாக ஒலிக்கின்றன.

சுதந்திரத்தின் விருப்போடு ஒலிக்கும் மானுடக் குரல்களை இந்தியக் கடற்படையின் துப்பாக்கிகள் குறிவைக்கின்றன.

ஆடுகளின் வேட்டையில், மான்களின் வேட்டையில் பழகிய பற்களின் இரத்தக் காவி படிந்த வாய் திறந்து 'சரணடையுங்கள்' எனும் காட்டுக் கோஷம் கடலுள் எழுகின்றது.

அதை மீறி

அகிலமே துடிக்கின்றது.

விடுதலைப் படகை அலை நீர் தாலாட்டுகின்றது.

கருமுகில்களின் கூட்டம் கப்பலின் மீது நீர் சிந்துகின்றது.

கப்பலோடு காற்று தோழமை கொண்டாற்போல அள்ளி அள்ளி கோடிக்கணக்கான முத்தமிடுகின்றது.

விடுதலைப் படகைச் சுற்றி வந்து பூக்களைச் சொரிந்து அலைகள் வாழ்த்திப் பாடுகின்றன.

★★

கடலின் கரையில் படகை எதிர்பார்த்தபடி எங்கள் தேசத்து மனிதர்கள் நிற்கின்றார்கள். மண்ணுக்கு வாய்த்த மானுடர்களின் வாழ்வை எண்ணி கரை சென்று கடலலைகள் அழுகின்றன. நிமிர்ந்த நெடும் பனங்கூடலுக்குள் இருந்து பிரிவின் துயர்ப் பாடல் எழுகின்றது. தாயைக் காண்பதற்கான துடிப்போடு எங்களின் அண்ணன் இருக்கின்றார். எல்லோருமே – எங்களின் தோழர்களும் தான். புலம் பெயர்ந்த வாழ்வின் சோகத்தைச் சொல்வதற்காக போன அண்ணன். ஏன் எங்களுடைய சின்ன சின்ன ஆசைகள் எல்லாம் எரிக்கப்படுகின்றன? ஏன் எங்களுடைய சின்ன சின்னக் கனவுகள் எல்லாம் தகர்க்கப்படுகின்றன?

ஏன் எங்களுக்கு வழிகாட்டிச் செல்ல வல்ல, கரைசேர்க்க வல்ல மாலுமிகளையெல்லாம் சிறைப்பிடிக்க முயல்கின்றார்கள்?

தலையைச் சிலுப்பி அழும் பனந்தோப்பின் உள்ளே கிட்டண்ணாவின் வரவை எதிர்பார்த்து இரு விழிகள் நனைந்தபடி நிற்கின்றன.

★★

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' கப்பலுக்குள் இருந்து கடலே அதிர ஒலிக்கின்றது.

இந்தியக் கடற்படையினரின் முகங்களில் தீச் சுவாலைகள் உமிழ்கின்றன. இந்தியாவின் கரையெங்கும் என்றுமே அழியாத விடுதலை வீரர்களின் புனித இரத்தம் படிகின்றது.

தமிழீழக் கடல் சிவந்து போகின்றது.

★★

கடலம்மா!

கிட்டண்ணாவையும் தோழர்களையும் நீ உன் மடியில் சுமந்து திரிவாயா?

நான்கு ஆண்டுகள் போய்விட்டன. நாமுன்னைக் காணும் தோறும் நீ கனல் கக்கும் பல்லாயிரம் கரம் கொண்டு ஓயாத உன் பாடலைப் பாடியபடியே தான் இருக்கின்றாய்.

கடலில் சூரியன் மோனத் தவம் புரியும் ஒரு மாலைப் பொழுதில் நாங்கள் உன் கரையில் இருப்போம். தலையை வருடிச் செல்லும் உனது காற்றுக் கரங்கள்.



கடலம்மா நீ எத்தனையைப் பட்டிருக்கின்றாய். இனியும் படுவாயோ?

சர்வதேசக் கடலில் வைத்து அடாத்தாக விடுதலைப்படகை மறித்தது குற்றம்.

சர்வதேசக் கடல் எல்லைக்குள் வந்து கொண்டிருந்த கப்பல் இந்தியக் கடல் எல்லையை நோக்கிப் போக எத்தனிக்கவில்லை. அதன் திசைவேறு. அதன் பயணம் வேறு; அதன் பாதை வேறு; அ;தன் நோக்கு வேறு; அதன் இலக்கு வேறு.

இந்தியக் கடல் எல்லைக்குள் விடுதலைப் படகை இழுத்துச் சென்று, 'நீ இந்தியக் கடல் எல்லைக்குள் வந்துவிட்டாய்' என்றது பொய்.

எங்களுக்கு நீதி வேண்டும்.

★★

நாங்கள் எங்கு போய் ஒலிப்போம். மனு நீதிச் சோழன் பிறந்த மண்ணின் எந்த மணி மகுடத்தில் இளம் கன்றுகளை இழந்த நாங்கள் போய் ஒலிப்போம். கன்றை இழந்த பசுவின் தீராத கண்ணீருக்கும், ஆறாத துயருக்கும், நீதி பிறழ்ந்த தன்மைந்தன் மேல் தேர்க்காலை ஏற்றிய மண். நீதித்தேவதை கண்துயிலாத பூமி. விழிப்புணர்ச்சியும். மானுடநேயமும், அகிம்சையும் தந்த பூமி. துயரின் கன்றுகளான எம் கயிறசைப்புக்கள் காலதாமதமாய் ஒலிக்க இந்திய நீதித்தேவதை தூக்கம் கலைந்தெழுந்து தீர்ப்பளிக்கின்றாள்.

விடுதலைப்படகை வழிமறித்தது அநீதி.

விடுதலைப்படகை அதன் வழியில் போகவிடாது தடுத்து இந்திய கடல் எல்லைக்குள் அடாத்தாக கொண்டு வந்தது அநீதி. விடுதலை வீரர்கள் மீது துப்பாக்கியால் சுட்டு சரணடையைக் கோரியமை அநீதி.

'அநீதி! அநீதி!!

நீதித் தேவதை உரக்கக் குரல் எழுப்புகின்றாள். இந்துமாகடல் பேரிரைச்சலோடு கத்துகின்றது.

'கிட்டு எங்கே? குட்டி சிறீ எங்கே? ....' மீட்டுத்தா தேவதையே.'

தேவதை தன் இயலாமையால் குமைகிறாள். பின்னர் தன் கண்களை இறுக மூடிக் கட்டிய துணியை அவிழ்த்து அக்கினியில் இடுகின்றாள்.

★★

மீளவும் இந்திய நீதித் தேவதை துயிலாதவாறு, வாசலில் நின்று மணிகள் ஒலிக்காத வாழ்வே மலர்க!

"மனுநீதி செழிக்கும்" எனும் குரல்கள் ஓங்கி ஒலிக்கட்டும்.

- சுபாஸ்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூலோபாயத்திற்கு ஒரு அடி



இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு குறித்தும் இராணுவ வெற்றிகள் குறித்தும் சந்திரிகா அரசு கூவிக்கொண்டிருக்கையில் அம்பாறை மட்டு எல்லைப் பகுதியில் மற்றுமொரு பலமான அடியை சிறீலங்கா ஆயுதப்படை பெற்றுள்ளது. இதில் அவர்களுக்கு ஏற்பட்ட உயிர் மற்றும் ஆயுததளபாட இழப்பு என்பன கணிசமான அளவாக இருப்பினும் இத்தாக்குதலானது இடம்பெற்ற இடம், காலம் என்பனவற்றோடு தாக்குதலுக்கு உள்ளானவர் யார் என்பனவும் முக்கியத்துவமானவையாகும். இத்தாக்குதல் இடம்பெற்ற அம்பாறை மாவட்டப் பிரதேசம் சிறீலங்கா அரசின் விசேட கவனத்திற்கு உரிய மாவட்டமாகும். சிங்களக் குடியேற்றங்களினால் நிரப்பப்பட்டுள்ள இந்த மாவட்டமானது அவற்றைப் பாதுகாப்பதற்கென பெரும் தொகை ஆயுதப்படையினரும் குவிக்கப்பட்டுள்ளதொரு மாவட்டம் ஆகும். இவ்வாறு குவிக்கப்பட்டுள்ள படையினரின் ஒரு முகாமே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான புலுகுனாவ முகாமாகும்.

இதேசமயம் தாக்குதலுக்கு உள்ளான முகாம் விசேட அதிரடிப்படைப் பொலிசாருக்கு சொந்தமானதாகும். இவர்கள் கெரில்லாப் போராட்டத்திற்கு எதிராக விசேட பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர்கள். இவர்களில் அனேகர் இஸ்ரேல் உளவுப் படையான மொசாட் போன்றவர்களிடமும் வேறு சில கூலிப் படையினரிடமும் பயிற்சி பெற்றவர்கள். இவற்றைத் தவிர இந்த முகாம் தாக்கப்பட்டபோது அது அதி உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. அதாவது மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் எதையும் நடத்தலாம் என்றும் விரைவில் தாக்குதல் ஒன்று நடத்தப்படும் எனவும் சிறீலங்கா இராணுவம் கருதியது. ஆகையினால், படை முகாம்களை உசார் நிலையில் வைத்திருக்குமாறு ஏற்கனவே பணிப்புரை விடுத்திருந்தது. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே புலுகுனாவ அதிரடிப்படை முகாம் தாக்கியழிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலானது கடந்த ஜூலை மாதம் விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு படைத்தளத்திற்கு மேல் மேற்கொண்டதற்கு ஒப்பானது என இராணுவ ஆய்வாளர்கள் பலர் கருதுகின்றனர். ஆனால், இத்தாக்குதல் நிலைமையைப் பொறுத்து முல்லைத்தீவுத் தாக்குதலுடன் ஒப்பிடக்கூடியதாயினும் தாக்கப்பட்ட பிரதேசம், படைப்பிரிவு என்பதன் அடிப்படையில் இதன் இராணுவ, அரசியல் பரிமாணம் வேறு வகையில் முக்கியத்துவம் கொண்டது என்பதில் ஐயமில்லை.

இராணுவ ரீதியில் இத்தாக்குதலானது கிழக்கு மாகாணத்தில் புலிகள் பெரும் படை நகர்வுகளை நடத்தக் கூடிய வலுவைப் பெற்றுவிட்டார்கள் என்பதை வெளிக்காட்டியுள்ளது. அதாவது, இராணுவ ரோந்து அணிகள் மீது மட்டுமல்ல பலம் மிக்கதான படை முகாம் மீதும் புலிகள் தாக்குதலை நடாத்தும் வல்லமை கொண்டுள்ளார்கள் என்பதை இது உணர்த்துகின்றது. ஏற்கனவே படை முகாம்கள் மீது கிழக்கில் தாக்குதல்கள் நடாத்தியிருப்பினும் கூட புலுகுனாவ படை முகாம்கள் போன்ற வலிவுற்றுள்ள படை முகாம்களைத் தாக்கி அழித்ததில்லை. எனவே, சிறிய முகாம்கள் மட்டுமல்ல பலம் மிகுந்த முகாம்களின் பாதுகாப்புக் குறித்தும் தற்போது கேள்வி எழுந்துள்ளது. இதே சமயம் வடக்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் கிழக்கில் புலிகளின் செயல்களை வலுவிழக்கச் செய்து விடலாம் என்ற இராணுவ மூலோபாயமும் கேள்விக்குரியதொன்றாக மாறிவிட்டது.

அதாவது இராணுவ மூலோபாயத்தின்படி வடக்கில் புலிகளின் பலம் இழக்காதது மட்டுமல்ல கிழக்கில் புலிகளின் பலம் வளர்வதற்கு ஏற்றதொரு சூழ்நிலையையே உருவாக்கியுள்ளது என்றே கூறவேண்டும். இந்நிலையில் இராணுவத்தின் அடுத்தகட்டம் குறித்து பலமான கேள்வி தற்போது எழுந்துள்ளது எனலாம். அதாவது தோல்வியடைந்த மூலோபாயத்தின் அடிப்படையில் நடவடிக்கைகளைத் தொடர்வதா? அன்றி தற்போது மாற்றம் கண்டுள்ள இராணுவ சூழ்நிலைக்கேற்ப இராணுவ மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் மாற்றியமைத்துக்கொள்வதா? என்பதே அதுவாகும். ஆனால் எது எவ்வாறு இருப்பினும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற அரசின் பொதுவான முடிவிற்கும் வடக்கில் புலிகள் பலத்தை இழக்கச் செய்யும் கிழ்க்கில் அவர்கள் வலுவிழந்து விடுவார்கள் என்ற இராணுவத்தின் மூலோபாயத்திற்கும் புலுகுனாவ தாக்குதல் பலத்த அடியாகவே இயங்கியிருக்கும். இதனைத் கருத்திற் கொள்ளாது அரசு தனது நடவடிக்கைகளை இதே வழியில் தொடருமானால் இவ்வாறான அடிகள் பலவற்றை அது மேலும் மேலும் வேண்டுவது தவிர்க்க முடியாது போகும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேச்சுவார்த்தை வருமா? சமாதானம் தோன்றுமா?

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்ராறாம் ஆண்டு கழிந்து தொண்ணூற்றியேழு பிறந்திருக்கிறது. இந்த ஆண்டிலாவது காலம்காலமாக எதிர்கொண்டு வந்த பிரச்சினைகள் நீங்கி, சுதந்திர மனிதர்களாக, இன்பமான எழில்நிறைந்த, வளம் நிறைந்த வாழ்வில் கால்வைப்போமா என்ற ஏக்கம் தமிழ் மக்களது. என்றுமில்லாதவாறு, கடந்த இரு ஆண்டுகளில் மக்கள் பெரும் துன்பத்தைச் சுமந்துள்ளனர். மிகப் பெரும் மனித அவலம் இவ்விரு ஆண்டுகளில் எம் மண்ணில் குரலெழுப்பியது. நவீன ஆயுதம் தரித்த இராணுவ மிருகம் எம் தேசத்தை ஆக்கிரமித்து, தன் கால்களிற்கிடையே போட்டு எம் மக்களின் வாழ்வை நசித்துக்கொண்டிருக்கிறது. தமிழர் வரலாற்றிலே, ஏன் உலக வரலாற்றில் அறிவுக்கெட்டிய வரையில் எங்குமே நடந்திராத மாபெரும் மனித இடம்பெயர்வு ஓர் இரவிலே நடந்து முடிந்த அவலமும் 95–இலே நடந்திருக்கின்றது. ஐந்து இலட்சம் மக்கள், கட்டிய துணியுடன் குறுகலான பாதை வழியே ஓர் இரவில் இடம்பெயர்ந்த துன்பியல் வரலாறு, சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்திலேயே நிகழ்ந்திருக்கிறது. அள்ளிக்குவித்த ஆயுதங்கள் ஒரு பக்கம், உணவு, மருந்து, அத்தியாவசியப் பொருட்கள் மறுபக்கமுமாக சிறீலங்கா அரசு தமிழ் மக்களை அடிமைப்படுத்த மேற்கொண்ட யுத்த வியூகங்கள் அநாகரிகமானவை; அசிங்கமானவை. 95–ம் ஆண்டைவிட 96–ம் ஆண்டு மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள், துன்பங்கள் அதிகம் என்றே கூறலாம். வன்னிப்பகுதியில், இராணுவத்தின் இனவாதக் கொள்கைகளால் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் ஏராளம்.

இங்கே ஒரு விசித்திரமான கூற்றை ஞாபகப்படுத்திப் பார்ப்பது பொருத்தமாகப் படுகின்றது.

'கடந்த அரசாங்கத்தின் பதினேழு வருட ஆட்சிக் காலத்தில் நிலவிய சூழ்நிலைகளின் கீழ், ஐந்து தடவைகள் அரசின் தூண்டுதலுடன் தமிழ் மக்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் உச்சக்கட்டமாக 1983 கறுப்பு யூலை அமைந்தது. அப்போது மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டார்கள்.'

இது இன்றைய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, 96–ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய சஞ்சிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில், கடந்த ஆட்சிபற்றி வெளிப்படுத்தியிருந்தார். அதில், தமிழ் மக்கள் மீது ஐக்கிய தேசியக் கட்சி அரசால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இன வெறித் தாக்குதல்கள், தாக்குதலின் கோரத்தனத்தை பகிரங்கப்படுத்தினார். நூற்றுக்கு நூறு வீதம் உண்மையான கூற்று. எத்துணை பொறுப்பான பணி.

ஆனால், வரலாற்றைப் புரட்டிப் போட்டுத் தீர்வுகாண வேண்டியவர்கள் எழுபத்தியேழுக்கு அப்பாலும் சென்று, இந்தப் பிரச்சினை இத்தனை விஸ்வரூபம் எடுத்து மூசி எரிவதற்கான வரலாற்றுக் காரணங்களையும், ஆழவேரோடி நிற்கின்ற இனவாத வேர்களையும் கண்டுபிடித்தாக வேண்டும். தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவாத ஒடுக்குமுறை, கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்ணை சென்று அறிந்தாலே அவற்றை அடைத்து, நிலைமையைச் செப்பனிட முடியும்.

தற்போதைய ஜனாதிபதியின் தந்தையும், பிரதமரின் கணவருமான பண்டாரநாயக்கா ஆட்சிபுரிந்த காலத்தில் தான், முதல்முதலாக தமிழ் மக்கள் மீது இனவெறித் தாக்குதல் கட்டவிழ்த்துவிடப்பட்டது. 1956–ஆம் ஆண்டு, சிங்களத்தை அரசகரும மொழியாக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் பண்டாரநாயக்கா அரசால் நிறைவேற்றப்பட்டது. இதனை எதிர்த்து சாத்வீகப் போராட்டம் நடத்திய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்ப் பிரமுகர்கள், பண்டாரநாயக்காவின் முன்னிலையிலேயே சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டனர்; தூக்கிவீசப்பட்டனர்; படுகாயப்படுத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தீவு பூராவும் பரவிய இனவெறி வன்முறையில் 150–க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். வீடுகள், சொத்துக்கள் தீயிட்டு நாசமாக்கப்பட்டன.



பண்டாரநாயக்கா ஆட்சிபுரிந்த காலத்தில்தான், முதன்முதலாக தமிழ் மக்கள் மீது இனவெறித் தாக்குதல் கட்டவிழ்த்துவிடப்பட்டது



சிறீமாவோ பண்டாரநாயக்கா, முதன்முதலாக தமிழர் பகுதிகளிற்கு இராணுவத்தை அனுப்பிய வரலாற்றைப் பதித்தவர்

www.tamilarangam.net

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது இனவெறித் தாக்குதல் சந்திரிகா அம்மையாரின் தந்தையார் காலத்திலேயே ஆரம்பித்துவைக்கப்பட்டது. அவரது ஆட்சிக்காலத்தில், 58–ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது இன வன்முறை வெறியாட்டம், அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர் ஒருவராலேயே தூபமிட்டு மேற்கொள்ளப்பட்டது. தமிழ் மக்களிடத்தே பாரிய இழப்பையும் அழிவையும் இனவெறித்தாக்குதல் ஏற்படுத்தியது.

அடுத்து இன்னும் ஒரு முக்கிய நிகழ்வும் இங்கு நினைவுகொள்ளத் தக்கது. தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான அமைதிவழிப் போராட்டத்தை நசுக்க, முதன்முதலாக தமிழர் பகுதிகளிற்கு இராணுவத்தை அனுப்பிய வரலாற்றைப் பதித்தவர், தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் தாயாரும், சிறீலங்காவின் தற்போதைய பிரதமருமான சிறீமாவோ பண்டாரநாயக்கா என்பது வரலாற்றில் மறக்கப்படமுடியாத நிகழ்வுகள். 1961–இல், சிறீமாவோ ஆட்சியின் இனவாதக் கொள்கைக்கு எதிராக, தமிழீழம் பூராவும் வரலாறு காணாத மாபெரும் சாத்வீகப் போராட்டத்தில் தமிழ் மக்கள் ஈடுபட்டிருந்த வேளையில், முதன் முதலாக தமிழர் பகுதிகளிற்கு இராணுவம் அனுப்பிவைக்கப்பட்டு, மக்களின் குரல்வளையை நெரிக்கும் கொடுங்கோன்மைக்கான அத்திவாரம் இடப்பட்டது.



ஒரு இரவில் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்களை சொந்த இடங்களிலிருந்து அகதிகளாக விரட்டிய வரலாற்றின் நாயகி

இவை, தமிழ் மக்கள் மீது பௌத்த சிங்களப் பேரினவாதம் தனது நாசக்கரத்தை போட்டதற்கான ஆரம்ப உதாரணங்கள். இங்கே கடந்த ஆட்சியைக் குறைசொல்வதற்கூடாக அரசியல் இலாபம் பெற எண்ணுவது அநாகரிகமான செயற்பாடே. அதைத்தான் சந்திரிகா அம்மையாரும் செய்கின்றார்.

## பேச்சுவார்த்தை நோக்கிய பயணத்தில், சிறீலங்கா அரசு செய்யவேண்டிய காரியங்கள் நிறையவே காத்திருக்கின்றன

மாறிமாறி ஆட்சிக்கு வந்த எல்லாச் சிங்கள அரசுகளும் இதைத்தான் புரிந்தன. ஒப்பந்தம் கைச்சாத்திட்டன, கிழித்தன. மீண்டும் ஒப்பந்தம்... மீண்டும் கிழிப்பு. இதுதான் வரலாறு.

தற்போதைய சூழ்நிலையில், மீண்டும் பேச்சுவார்த்தை பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றன. மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்த்துடன், இரு தரப்பும் பேசுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக எல்லாம் ஆருடம் சொல்லப்படுகிறது. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான பேச்சுக்களை ஆரம்பித்துவைக்கும் நோக்குடன் கொழும்பு சென்றுள்ள, பிரித்தானியாவைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் 'அலேர்ட் இன்டர்நசனல்' அமைப்பின் பிரதிநிதி குமார் ரூபசிங்க முல்லை செல்லக் காத்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. செய்தியின் வேகத்தைப் பார்த்தால், ஒரு வேளை இதனை வாசித்துக்கொண்டிருக்கும் போது, அவர் முல்லை சென்று பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருக்கக்கூடும். எது எப்படியோ, இங்கு பேச்சுக்களுக்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதென்பது அவ்வளவு இலகுவாக உள்ளதா என்பதே கேள்வி.

குமார் ரூபசிங்க குறிப்பிடுவதைப் போல, முதலில் இருதரப்பினரிடையேயும் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதனடிப்படையில்தான் பேச்சுவார்த்தைகளைக் கொண்டு நடத்தமுடியும்.

நம்பிக்கையே பேச்சுவார்த்தையின் அடிப்படை. இதனை ஏற்படுத்துவதென்பது எவ்வளவு சாத்தியம். சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்த போது பொதுவாக இருந்த அபிப்பிராயம் இப்பொழுது முற்றிலுமாக மாறியுள்ளது. அந்த நேரத்தில் வேண்டத்தகாத தடைகளை அகற்றி பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்த வகையற்றிருந்த அல்லது விரும்பாத சந்திரிகா அரசு, இன்று தமிழ் மக்களின் முழுமையான அவநம்பிக்கையைப் பெற்று இராணுவ மேலாதிக்க மனோபாவத்தை வளர்த்துக்கொண்டு எப்படி ஒரு பேச்சுவார்த்தைக்கான களத்தைத் திறக்கச் சம்மதிக்கும்.

பேச்சுவார்த்தை நோக்கிய பயணத்தில், சிறீலங்கா அரசு செய்யவேண்டிய காரியங்கள் நிறையவே காத்திருக்கின்றன. தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை மீளப் பெறப்பட வேண்டும். அப்படி வரும்போது, இராணுவம் ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள பகுதிகளில் இருந்து விலகி, பயப்பீதியற்ற ஆக்கிரமிப்பு அழுத்தங்கள் இன்றிய, சுயாதீனமான வழமை வாழ்க்கைக்கு மக்களுக்கு வழியேற்படுத்த வேண்டும்.

பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும், மருந்துத் தடை நீக்கப்பட வேண்டும். மக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும்.

இதைவிட பேச்சுவார்த்தைக்கான சூழல் ஒன்றைத் தோற்றுவித்தல் என்ற அடிப்படையில், யுத்தநிறுத்தம் அல்லது மோதல் தவிர்ப்பு, இராணுவத்தின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தல் போன்ற பல விடயங்களும் அடங்கலாம். நிபந்தனை என்ற வரையறைக்கு அப்பால், பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழலை ஏற்படுத்தும் செயற்பாடுகளாக இவை அமையும்.

1995–ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம் முறிவடைந்த பேச்சுவார்த்தைக்கு, காரணமாய் இருந்தது சிறிய காரணங்களே, மக்களின் அன்றாட தேவைகளோடு சம்பந்தப்பட்ட பொருளாதாரத் தடை, போக்குவரத்துப் பாதை திறப்பு போன்ற மக்களின் நலனோடு சம்பந்தப்பட்ட விடயங்களுக்குக் கூட விடாப்பிடியாக மறுதலித்து, உயிரழிவுக்கும் பெரும் சொத்தழிவுக்கும் என்றுமே இல்லாத மிகமோசமான மனித அவலத்திற்கும் வழிவகை செய்த சந்திரிகா அரசு, பேச்சுவார்த்தை சமாதானம் என்ற நல்லிணக்க மேசைக்கு வர தயாராவாரா என்பது கேள்விக்குறியே.

— சுப்பு

www.tamilarangam.net

# மலரும் புதிய ஆண்டில் சிறீலங்கா அரசு ஆட்டம் காணுமா?

1997–ஆம் ஆண்டில் இலங்கைத்தீவின் தேசிய இனப் பிரச்சினையின் போக்கு எவ்வாறு அமையக்கூடும்? பிரச்சினை மேலும் கூர்மையடைந்து தீவிரத் தன்மை கொண்டதாகத் தொடருமா? அல்லது நிலைமைகளில் சற்று மாற்றம் ஏற்பட்டு நெருக்கடி நிலையில் தளர்வு ஏற்படுமா? இவை தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் பலர் மத்தியிலும் நிகழ்ந்ததுதான் கொண்டிருக்கின்றன.

பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏதாவது உள்ளனவா? மூன்றாவது தரப்பு ஒன்றின் துணையுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமா? சந்திரிகாவின் திடீர் இந்திய விஜயத்தின் பின்னணியில் புதைந்து கிடக்கும் விடயங்கள் தான் எவை? இவைபோன்ற வினாக்களை நம் அரசியல் ஆர்வலர்கள் அலசிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இத்தகைய ஒரு சூழலில், 1997–ம் ஆண்டில் நடைபெறக்கூடிய நிகழ்வுகள் தொடர்பாக சில நிகழ்வுகள் குறித்து நோக்கலாம் என நோக்குகிறேன். அவ்வாறு நோக்குவதற்குத் துணையாக 1996–ஆம் ஆண்டில் நடைபெற்ற சில நிகழ்வுகளையும் போக்குகளையும் துணைக்கழைத்துக் கொள்கிறேன்.

1995–ஆம் ஆண்டில் நடைபெற்ற 'ரிவிரெச 1' எனும் யாழ்ப்பாணப் படையெடுப்பு மற்றும் அதன் தொடர்ச்சியாக ஏப்ரல், மே 1996–இல் இடம்பெற்ற 'ரிவிரெச 2, 3' ஆகிய தென்மராட்சி, வடமராட்சி நோக்கிய படையெடுப்புக்கள் மூலமாக, 1996–இல் சிறீலங்கா அரசு தான் நினைத்தவற்றைச் சாதித்துவிட முடியவில்லை.

இதன் காரணமாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை நசுக்குவதற்கு தான் வகுத்த திட்டத்தினை சிறீலங்கா அரசினால் முன்னோக்கி நகர்த்தவும் முடியவில்லை.

'விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில்' தாம் நிச்சயமாக வெற்றியினைத் தழுவிவிடுவோம் என்ற நம்பிக்கையினை அனைத்துலக நாட்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு சிறீலங்கா அரசு பகீரத முயற்சியை எடுத்து வந்தது. முல்லையில் பூகம்பம் வெடிக்கும் வரை, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அரசு அம்முயற்சியில் வெற்றியும் கண்டிருந்தது.

சிறீலங்கா அரசு புலிகளின் இழப்புத் தொடர்பாக வெளியிடும் தகவல்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்பதனை உணர்ந்திருந்தாலும், 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பினை பாரிய இழப்புக்களாகவே மேற்குல நாடுகள் கருதியிருந்தன. இதனால், யாழ். குடாநாடு அரச படைகளால் கைப்பற்றப்பட்டமை போரின் போக்கைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு நிகழ்வாகவே இந்நாடுகளால் உணரப்பட்டது. விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலை நடாத்தக்கூடிய வலிமையினை புலிகள் இழந்துவிட்டார்கள் என்றே பல நாடுகளாலும் கருதப்பட்டது. இதனால் சிறீலங்கா அரசால் விடுதலைப் புலிகளைக் 'கட்டுப்பாட்டினுள்' கொண்டு வருதல் சாத்தியம் எனவும் இந்நாடுகள் நம்பத் தலைப்பட்டன.

ஆனால், முல்லைத்தீவு இராணுவத் தளம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய 'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகள் மரபு சார்ந்த முறையில் பாரிய தாக்குதலை நடாத்தக்கூடிய சக்தி மிக்கவர்கள் என்பதனை துல்லியமாக வெளிப்படுத்தியது. இத்தாக்குதல் எப்படிச் சாத்தியமானது என்பதனை ஆய்வு செய்து அறிந்து கொள்வதில் மேற்குலக நாடுகளின் இராணுவ வல்லுநர்கள் மிகுந்த நாட்டம் கொண்டிருப்பதாகவும் அறிய முடிகிறது.

இத்தாக்குதலின் பின், விடுதலைப் புலிகளை சிறீலங்கா அரசால் 'கட்டுப்படுத்த' முடியுமென்ற நம்பிக்கையினை மேற்குலக நாடுகளும் இழக்கத் தொடங்கிவிட்டன. சிங்கள மக்களும், இந்திய அரசும் கூட அத்தகைய ஒரு முடிவினை எடுக்கத் தொடங்கிவிட்டனர். ஆனால், சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளிடம் தோல்வியினைத் தழுவிவிடும் என்பதற்குப் பதிலாக, இப்பிரச்சினை இரு தரப்பினருக்குமே வெற்றியினை பெற்றுத்தரமாட்டாத ஒரு நீண்டகால யுத்தமாகத் தொடரலாம் என்பதே மேற்குலக நாடுகளின் தற்போதைய கணிப்பாக இருக்கலாம். ஆனால் நீண்டகால நோக்கில் எத்தரப்பு பலவீனமடையக்கூடும் என்பதனைக் கணிப்பீடு செய்வதில் கூடுதலான கவனத்தினை மேற்குலக நாடுகள் செலுத்தத் தொடங்கியுள்ளன என்பதனையும் உணர முடிகிறது.

மேற்குலக நாடுகளின் சிந்தனை 1997ம் ஆண்டின் போக்கில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும் என்பதால் தான் மேற்குலக நாடுகளின் சிந்தனைப் போக்குக் குறித்தும் நோக்க வேண்டியுள்ளது. 'யுத்தம் மூலம் சமாதானம்' என்ற சந்திரிகா அரசின் கோசம் தோல்வியினைத் தழுவிவிட்டது என்பதனை, வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் கூட, மேற்குலக நாடுகளின் கொள்கை வகுப்பாளர்கள் தமக்குள்ளே முடிவுசெய்துள்ளனர் என்று கூறலாம்.

இதனால், 1997–ஆம் ஆண்டில், சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து கூடுதலான கவனத்தினைச் செலுத்துமாறு மேற்குலக நாடுகளின் அலோசனைகள் சிறீலங்கா அரசுக்குப் போகலாம்.

இதேவேளை, எந்த ஒரு அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைக்கும் முன், நெருக்கடி நிலையினைத் தணித்தல், படைகளை விலக்குதல், இயல்பு நிலையினைத் தோற்றுவித்தல் போன்றவை முன்நிகழ்வாக அமைய வேண்டும் என்பதனை மாவீரர்நாள் செய்தியில் தெரிவித்த தமிழீழத் தேசியத் தலைவர், இது குறித்துப் பேசி உடன்பாடு காண்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாகத் தெரிவித்தமை மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு என்பதனைக் கோடிட்டுக் காட்டுகின்றது. இருப்பினும் சிறீலங்கா அரசு இந்நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதனையும் தலைவர் வெளிப்படுத்தி, போராட

www.tamilarangam.net


வேண்டிய தேவையினை வலியுறுத்தியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இந்நிலைப்பாடு உண்மையில் 1994 – 95–ஆம் ஆண்டுப் பேச்சுவார்த்தைக் கால நிலைப்பாடுதான். மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொண்டு அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துப் பேசுவோம் என அப்போது புலிகள் இயக்கம் உறுதியாகத் தெரிவித்தது. இதற்கு முன்னர் உட்பட்ட அரசு, பின்னர் பின்வாங்கவே முறுகல் நிலை தோற்றம்பெற்று பேச்சுவார்த்தை முறிவடைந்தது.

இன்று மீண்டும் அதேநிலை. பேச்சுவார்த்தை என்பது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தே முதலில் அமையவேண்டியிருக்கும். இதன் அடிப்படையில் படைகளை விலக்கல் முக்கியம் பெறும்.பழைய தவறை மீண்டும் விடாது, யதார்த்த நிலையினை உணர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டினை சிறீலங்கா ஏற்றுக்கொள்ளுமா?

விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்ட தமிழர் தரப்பின் நியாயமான நிலைப்பாட்டை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதனை வரலாற்றுபூர்வமாக நோக்கின் 'இல்லை' என்ற பதிலே முதலில் வரும்.

94–95 ஆண்டுப் பேச்சுவார்த்தைக் காலத்தின்போது சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்த 'மறைமுகத் திட்டம்', இப்போது வெளிப்படையாகவே அரங்கேறி விட்டது.

தமிழ் மக்களின் அரசியல் எதிர்ப்பினை நசுக்கி, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை தமிழ் மக்கள் மீது திணித்து விடுவதற்கான முயற்சியில் தற்போது சிறீலங்கா அரசு முனைப்புடன் இருந்து வருகின்றது.

இம் முயற்சியில் வெற்றியினைத் தழுவாவிடினும் தொடர்ச்சியாக அதனைத் தொடர்வது என்பதில் அரசு பிடிவாதமாகவே இருந்து வருகிறது.

யுத்தத்தினைத் தொடர்ந்துகொண்டிருக்கும்போது, தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களுக்கு ஏதாவது ஆபத்தினை ஏற்படுத்த முடிந்தால், அது போரின் போக்கினை மாற்றியமைக்க உதவும் என்று திட்டமிட்டவாறு தனது அடக்குமுறை இராணுவ நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

என்ன விலை கொடுத்தும் இலங்கைத் தீவில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிலைநிறுத்துவது என்பதில் இருந்து அரச தரப்பில் மாற்றம் ஏதும் வந்துவிடவில்லை. இன்னொரு வகையில் கூறின் சிங்கள, தமிழ் தேசிய இனங்களுக்கு சம அந்தஸ்து கொடுத்து பிரச்சினையினைக் கையாளும் அளவிற்கு பேரினவாதம் இன்னும் தோற்கடிக்கப்பட்டு விடவில்லை. அதே வேளை யுத்தத்தினைத் தொடர்வதனால் சிங்களத் தேசிய இனத்திற்கு ஏற்படுகின்ற, ஏற்படப்போகின்ற பாதிப்புக்கள் குறித்த அழுத்தம் அரசின் மீது போதியளவு இன்னும் விழுந்ததாக இல்லை.

இத்தகையதொரு சூழலில், அரசியல் பேச்சுவார்த்தைக்கு முன்னர் நெருக்கடியினைத் தணித்தல், படைகளை விலக்குதல், இயல்பு நிலையினைத் தோற்றுவித்தல் போன்றவை தொடர்பாக தமிழர் தரப்பின் நிலைப்பாட்டுடன் அரச தரப்பு உடன்பட்டுக் கொள்ளும் என எதிர்பார்ப்பதற்கில்லை. உண்மையில் இரு தேசிய இனங்களையும் சம அந்தஸ்து படைத்த தேசிய இனங்களாகக் கருதுவதற்கு தயாராகும் வரை தனது மேலாதிக்க முயற்சியினை அரசு எடுக்கவே செய்யும்.

இருப்பினும், விடுதலைப் புலிகள் இவ்விடயங்கள் குறித்து நிபந்தனையில்லாது பேசத் தயாராக இருப்பதனால், பேச்சுவார்த்தைக்கு நிபந்தனையில்லாது போகுமாறு மேற்குலக நாடுகளின் வேண்டுதல்கள் சிறீலங்கா அரசினை நோக்கிச் செல்லலாம். இவ் வேண்டுதல்கள், சிறு அழுத்தம் என்று சொல்லக்கூடிய அளவு வரை செல்லலாம்.

இதனால், 1997–ஆம் ஆண்டில் பேச்சுவார்த்தை, இராணுவ நடவடிக்கைகள் போன்ற குறித்த செய்திகள் வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. விடுதலைப் புலிகள், சிறீலங்கா அரசு ஆகிய இரு தரப்பினரும் நேரடியான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் வருமா என்பது கேள்விக்குறியாக இருப்பினும் இரு தரப்பினதும் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கு இரு தரப்புடனும் தனித் தனியாக பேசுவதற்கு மூன்றாவது தரப்பினர் முயலலாம். இந்த மூன்றாவது தரப்பு என்பதும் பல்வேறு முனையில் இருந்தும் கிளம்பலாம்.

இன்றிருக்கும் நிலைமைகளை வைத்து நோக்கும்போது, இராணுவ நடவடிக்கைகளும், 1997–ஆம் ஆண்டில் சூடுபிடிக்கும் என்றே கருதத் தோன்றுகின்றது. கிளிநொச்சியிலிருந்து வவுனியா நோக்கிய தரைவழிப் பாதைத் திறப்பு என்பது அரச படைகளின் முக்கிய இலக்காக இருக்கலாம். இதற்காக மேலும் 30,000 படையினர் புதிதாகத் தேவைப்படுவர் என படை தரப்பு கணக்கிடுகிறது. ஆனால், வருடாந்தம் 8000 தொடக்கம் 10,000 வரையிலான படையினரை தேறிய இழப்பாகக் கொண்டுள்ள இன்றைய சூழலில் இது நடைமுறையில் சாத்தியமாகாது என்பதே யதார்த்தம்.

இதனால் சிறீலங்கா தரப்பு தனது இராணுவ இலக்கில் பெரிதும் முன்னேற முடியாதே இருக்கும்.

விடுதலைப் புலிகள் தரப்பில், சிறீலங்கா அரச படைகளின் இலக்குகள் மீது தேர்ந்தெடுக்கப்பட்ட தாக்குதல்கள் நடாத்தப்படலாம். இது படைத்தரப்பினை – படைத்தரப்பின் மனோபலத்தினை மேலும் பலவீனப்படுத்தும்.

பேச்சுவார்த்தை குறித்த முனைப்புக்கள் தீவிரப்படுமா? யுத்த முழக்கங்கள் தீவிரப்படுமா? என்பதனை 1997ம் ஆண்டு வெளிப்படுத்தும். எது தீவிரப்படினும் 1997–ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கித் தள்ளும் ஒரு ஆண்டாகவே அமையும்.

**- திலீபன்**

**பேச்சுவார்த்தை குறித்த முனைப்புக்கள் தீவிரப்படுமா? யுத்த முழக்கங்கள் தீவிரப்படுமா? என்பதனை 1997ம் ஆண்டு வெளிப்படுத்தும். எது தீவிரப்படினும் 1997-ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கித் தள்ளும் ஒரு ஆண்டாகவே அமையும்.**

www.tamilarangam.net

# வெளிச்சத்திற்கு வந்து விட்ட சிங்களப்படையின் அட்டூழியங்கள் !




சிறிலங்கா அரச படைகளின் ஆக்கிரமிப்பிற்குட்பட்டுள்ள யாழ். குடாநாட்டில் சிக்கியுள்ள தமிழர்கள் பெரும் சொல்லொணாத் துயரங்களை தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றனர். அங்கு படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களை மூடிமறைக்க அரசு பல்வேறு பிரயத்தனங்களையும் மேற்கொண்டு வருகின்றபோதிலும் அவை படிப்படியாக வெளியுலகிற்குப் பரவத் தொடங்கி விட்டன.

குடாநாட்டை ஏனைய நிலப்பரப்புக்களிலிருந்து துண்டாடித் தனிமைப்படுத்தியதுடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச பத்திரிகையாளர்களுக்கும் அனுமதி மறுத்ததன் மூலம் அங்கு நடப்பவற்றை வெளியுலகிற்கு தெரியாதவாறு மூடிமறைத்து விடலாம் என அரசு நம்பியது. ஆனால் அங்கு நடப்பவை தற்போது படிப்படியாகப் வெளிவரத் தொடங்கி விட்டன.

இராணுவத் தளபதி ஜெரிடி சில்வாவிற்கு முப்படைத் தலைமையகத்தில் நடத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தின் போது அங்கு உரையாற்றிய அவர் மனித உரிமைகளை மதித்து நடக்கக்கூடிய ஒழுக்கக் கட்டுப்பாடு நிறைந்த சிறந்தவொரு இராணுவமாக சிறிலங்கா இராணுவத்தை உருவாக்கி விட்டுச் செல்வதை இட்டு மனம் மகிழ்கின்றேன் என்றார்.

யாழ் குடாநாட்டில் வாழும் மக்களின் மனங்களை வெல்லும் முயற்சியாக அங்குள்ள படையினர் ஒழுக்கக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவர் கைகளிலும் மனித உரிமைகள் தொடர்பான கைநூல்கள் உள்ளன என இன்றைய இராணுவத் தளபதி றொஹான் தளுவத்த தெரிவித்தார்.

இவ்வாறு இவர்கள் இருவரும் கூறி முடித்த ஒரு சில நாட்களுக்குள்ளாகவே அவர்களின் வழி நடத்தலின் கீழ் உள்ள படையினர் தமக்கேயுரித்தான அந்த வழமையான கைங்கரியங்களை ஆற்றத் தொடங்கிவிட்டனர்.

ஆரம்பத்தில் குளிர்பானம் வழங்கி இன்முகம் காட்டி வலிகாமத்திற்குள் மக்களை அழைத்துச் சென்ற படையினர் இன்று கண்ணீர் விடும் மக்களைப் பார்த்துக் கடுகடுத்த முகத்துடன் விரட்டியடித்து வருகின்றனர்.

## சுற்றிவளைப்புக்களும் கைதுகளும்

திடீர் தீடீரென ஒவ்வொரு பகுதிகளையும் சுற்றி வளைக்கும் படையினர் அங்குள்ள வீடுகளில் தீவிர சோதனைகளை நடத்துவதுடன் மக்களைப் பொது இடங்களுக்குக் கொண்டு சென்று பலமணி நேரமாகக் கொழுத்தும் வெய்யிலில் இருத்தி வைக்கின்றனர். இதன் பின்பு தலையாட்டிகளின் உதவியுடன் இளைஞர்களையும் யுவதிகளையும் கைதுசெய்கின்றனர். அத்துடன் தாம் சந்தேகிக்கும் இளைஞர் யுவதிகளைக் கூட இவர்கள் கைதுசெய்து கொண்டு செல்கின்றனர். இதைவிட சோதனைச் சாவடிகளில் வைத்தும் வீதிகளில் வைத்தும் கூட ஆங்காங்கே கைதுகள் நடைபெற்ற வண்ணமேயுள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்படுபவர்களை விடுவிக்கும் முகமாக பெற்றோரும் உறவினர்களும் மேற்கொள்ளும் பிரயத்தனங்கள் நெஞ்சை உருக்குவனவாகவுள்ளன.

நாவற்குழி பகுதியில் கைதுசெய்த இளைஞர்களை 'ட்ரக்' வண்டியில் ஏற்றிக்கொண்டு செல்ல படையினர் முற்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பட்டனர். நிலைமையைப் புரிந்து கொண்ட பெற்றோர் வாகனத்தின் முன்பாக வீதியில் குறுக்கே வீழ்ந்து கிடந்து கதறியழுதனர். இதனால் கைதானவர்களை இறக்கி விட்டுப் படையினர் முகாம் திரும்பினர்.

கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட தமது பிள்ளைகள் எங்கு வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பன குறித்து அறியமுடியாத பெற்றோர் தினமும் ஒவ்வொரு இராணுவ முகாமாக அலைந்தவண்ணமேயுள்ளனர். இவர்கள் தமது பிள்ளைகளின் புகைப் படங்களை முகாம் வாசலில் இருக்கும் படையினரிடம் காண்பித்து இவர் முகாமில் உள்ளாரா என கண்ணீர் விட்டுக் கதறியழுதவாறு கேட்டு அலைந்து திரிகின்றனர்.

ஆனால் படையினரோ தாம் யாரையும் கைதுசெய்யவும் இல்லை, தாம் யாரையும் அங்கு வைத்திருப்பதும் இல்லை எனக்கூறுவதுடன் படையெடுத்துச் செல்லும் பெற்றோரை துப்பாக்கியைக் காட்டி விரட்டியும் விடுகின்றனர்.

### பாலியல் வன்முறை

ஆக்கிரமிப்புப் பிரதேசத்திற்குள் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. இளம் யுவதிகள் முதல் வயோதிபத் தாய்மார் வரை படையினரின் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். பெண்களை அடித்துச் சித்திரவதைக்குள்ளாக்கிய பின் பாலியல் வன்முறைக்குள்ளாக்கும் படையினர் இவர்களில் சிலரைக் கொலை செய்தும் உள்ளனர்.

படையினரின் இத்தகைய காட்டுமிராண்டித்தனமான செயல்களால் பெண்கள் வீதிகளில் நடமாடவே அஞ்சுகின்றனர். இவ்வாறு யுவதிகள், வயோதிப மாதுகள் மட்டுமன்றி சிறுவன் கூட தகாத உறவுக்கு உட்படுத்தப்படும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது.

பதினான்கு வயதுச் சிறுவன் ஒருவன் கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் ஐந்து இராணுவத்தினரால் மிருகத்தனமான முறையில் தகாத பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளான்.

பெண் பிள்ளைகள் சைக்கிள்களில் தனியாகச் சென்றால் இராணுவத்தினரும் அவர்களது சைக்கிள்களில் ஏறிக் கொள்கின்றனர் இதனால் இவர்கள் கரியர்களைக் கழற்றி விட்டும், வேறு ஒருவரை ஏற்றிக் கொண்டுமே செல்கின்றனர்.

### கொலைகள்

வடமராட்டசி மற்றும் தென்மராட்சிப் பகுதியில் பல இளைஞர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளாலேயே சுடப்பட்டதாக எழுதித் தருமாறு குடும்பத்தினரைப் படையினர் வற்புறுத்துவதுடன் அதற்கு இணங்கினால் குறிப்பிட்ட தொகைப் பணம் தருவதாகவும் ஆசைவார்த்தைகளை அள்ளி வழங்கி வருகின்றனர்.

### ஊரடங்கு

இவற்றுக்கும் மேலாக படையினர் இரவு வேளைகளில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து வருகின்றனர். இதனால் அவசர நோயாளர்கள் கூட இரவு வேளைகளில் வெளியே செல்ல முடியாத நிலையிலுள்ளனர். வீடுகளில் விளக்கேற்றக் கூடப் படையினர் தடைவிதித்துள்ளனர். இதனால் இரவு ஏழு மணியுடனேயே ஊர் அடங்கி விடுகின்றது.

### தப்ப முயலும் மக்கள்

படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து விட்டதை அடுத்து அங்கு சிக்கியிருந்த மக்கள் தப்பித்து வன்னிக்கும் தமிழ்நாட்டிற்கும் ஓடத் தொடங்கியுள்ளனர். தனிநபர்களாகவும், குடும்பம் குடும்பமாகவும் இவர்கள் படகுகள் மூலம் தமிழகத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றனர். இதே போல் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கும் மக்கள் சிறிது சிறிதாக வந்த வண்ணமும் உள்ளனர்.

### மூடிமறைக்கும் முயற்சி

நிலைமை இவ்வாறு இருக்க சிறீலங்கா அரசோ யாழ் குடாநாட்டில் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பாடசாலைகள் வைத்தியசாலைகள் இயங்குகின்றன. மக்கள் படையினருடன் பழகி வருகின்றனர். விடுதலைப்புலிகள் பற்றியும் அவர்களது ஆயுத மறைவிடங்கள் தொடர்பாகவும் தகவல்களை வழங்கிப் படையினருக்கு ஒத்துழைத்து வருகின்றனர். இதை விரும்பாதவர்கள் பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். மனித உரிமை மீறல்கள் எவற்றிலும் படையினர் ஈடுபடவில்லை எனக்கூறி உலகை ஏமாற்ற முனைகின்றது.

அரசின் இத்தகைய பொய்ப்பிரச்சாரங்கள் நீண்ட காலத்திற்கு நிலைக்கப் போவதில்லை. மக்கள் இராணுவப் பிடிக்குள் இருந்து தப்பித்து தமிழகம் வரை ஓடத் தொடங்கி விட்டனர். ஓடிய மக்கள் அங்கு வைத்து சிறிலங்கா அரச படைகள் யாழ்குடாநாட்டில் புரியும் கொடுமைகளை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டனர். இதனால் காலக்கிரமத்தில் சிங்கள அரசு தமிழர் மீது மேற்கொள்ளும் கொடுமைகளை உலகம் தெரிந்து கொள்ளும். ★★

## மிதிக்கப்படுகின்ற மனித உரிமைகள்

வடபகுதியில் பால் ஆறு ஓடுகிறது. தேனாறு பாய்கிறது. இராணுவத்தின் அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றத்தின் மூலமே இந்நிலை உருவாகி வருகின்றது. என்றெல்லாம் சந்திரிகா அரசு எவ்வளவு பெரிய பொய்யை சொல்லி உலகை ஏமாற்றி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நிலைமை மிகமோசமாகி வருகிறது. மக்கள் மரணத்துள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். படையினரால் கைதாகும் தமிழர்கள் பலர் காணாமற் போகின்றார்கள். கைது செய்ப்பட்ட பின்னர் அவர்களின் விபரங்கள் ஏதும் தெரியாது என்று மறுத்து விடுகின்றார்கள். தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் பெயர்ப்பட்டியலை அரசாங்கம் வெளியிடாமல் வைத்திருக்கின்றது. இதற்கு இராணுவ சித்திரவதைகளின் போது கைதுசெய்யப்படுபவர்கள் மரணமடைந்ததே காரணமாம். மனித வாழ்வு மறுக்கப்பட்ட பூமியில் இளைஞர்களின் வாழ்வு அவலத்தோடும் துன்பத்தோடுமே கழிகிறது. கொல்லப்படுபவர்களின் சடலங்கள் தடயங்கள் இன்றி அழிக்கப்படும் நோக்கில் கடலிலும் வீசப்பட்டு வருகின்றன.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரச்சாரத்தால் மேற்குலகை நிரவ நினைக்கும் சந்திரிகா



தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சர்வதேசப் பிரச்சாரத்திற்கென இலங்கை அரசு இம்மாதம் திடீரென மேலதிக நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டுள்ளது.

சந்திரிகா பதவிக்கு வந்தபோது தன்னை ஒரு சமாதானத் தேவதையாக' உலகிற்குக் காட்டிக்கொண்டார். ஆனால் சந்திரிகாவின் இரண்டாண்டு கால ஆட்சி அதிகார நடைமுறைக் கூடாக 'சமாதானத் தேவதை' என்ற அவரது பிம்பம் சர்வதேச அரங்கில் கரையத் தொடங்கியுள்ளதையே மேற்படி மேலதிக திடீர் நிதி ஒதுக்கீடு வெளிக்காட்டி நிற்கின்றது.

தமிழருக்கு எதிராக சந்திரிகா ஐந்து யுத்த முனைகளைத் திறந்திருக்கிறார். அவையாவன:

1. சர்வதேசப் பிரச்சாரம்
2. இந்திய அரசுடனான நல்லுறவு
3. இராணுவ நடவடிக்கை
4. அரசியல் தீர்வு சமாதானம் பற்றிய வார்த்தை ஜாலம்
5. தமிழர் – முஸ்லீம் முரண்பாடு

மேற்படி ஐம்பெரும் யுத்த நடவடிக்கைகள் மூலம் சந்திரிகா இரண்டு இலக்குகளை அடைய விரும்புகிறார். ஒன்று தமிழரை ஒடுக்குவது, மற்றையது சிங்களப் பகுதிகளில் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியை தமிழருக்கு எதிரான மேற்படி நடவடிக்கைகளின்பால் திசை திருப்பி வைத்திருப்பது.

மேற்படி ஐம்பெரும் யுத்தங்களில் ஒன்றே சர்வதேச பிரச்சாரம். விடுதலைப் புலிகளை இலங்கையில் தோற்கடிப்பதென்பது சர்வதேச ரீதியாக அவர்களை முடமாக்குவது என்பதிலிருந்து ஆரம்பமாகவேண்டும் என சந்திரிகா அரசாங்கம் கருதுகிறது. விடுதலைப் புலிகளை வெளிநாடுகளில் தடைசெய்யுமாறு அந்நாடுகளின் அரசுகளை கடந்த ஓராண்டிற்கு மேலாக சந்திரிகா அரசாங்கம் கோரி வருகிறது. சந்திரிகாவிற்கு சர்வதேச அரங்கில் வரவேற்பும் நன்மதிப்பும் இருந்த அவரது ஆட்சியின் ஆரம்பகாலங்களில் கூட மேற்குலகம் புலிகளைத் தடைசெய்யத் தயாராக இருக்கவில்லை. மேற்குலகிற்கு இந்தியாவில் அதிக தங்குநிலை உண்டு. அப்படி தங்குநிலை இருந்தும் கூட புலிகளை இந்தியா தடை செய்ததும் மேற்குலகம் புலிகளை தடைசெய்யவில்லை. இந்தியாவைக் கருத்தில் எடுத்துப் புலிகளை மேற்குலகம் தடைசெய்யாத போது இலங்கையை கருத்தில் எடுத்துப் புலிகளை மேற்குலகம் தடைசெய்யும் என எதிர்பார்க்க முடியாது. அப்படி இருந்தும் அரசியற் புலனறிவுக்கு மாறாக சந்திரிகா அரசாங்கம் தமிழன் என்ற பெயரைக் கொண்ட வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் மேற்குலக நாடுகளின் படலைகளை ஒன்றும் தவறவிடாது ஒவ்வொன்றாகத் திறந்தது.

சிறுபிள்ளைக்குக் காரணம் கூறித் தட்டிக் கழிக்கும் பாணியில் மேற்குலக நாடுகள் அனைத்தும் ஒரே பதிலை மிகவும் எளிதாகக் கூறின. "உங்கள் நாட்டில் புலிகளை நீங்கள் தடைசெய்யாமல் எங்களைத் தடைசெய்யுமாறு எவ்வாறு கோருவீர்கள்?" என்பதே அந்தப் பதில்.

இதன் பின்பு இலங்கையில் புலிகளைத் தடைசெய்வது பற்றி சந்திரிகா – கதிர்காமர் – பீரிஸ் கூட்டு மூளைகளை யோசிக்கலாயின. இதன் முடிவாக புலிகளை இலங்கை அரசு தடைசெய்ய உள்ளது என்ற அறிவிப்புக்களும் வெளியாயின. சிங்கள, ஆங்கில இனவாதப் பத்திரிகைகள் மத்தியிலும் புலி எதிர்ப்பாளர்கள் மத்தியிலும் இதற்கு கைதட்டல்களும் கரகோஷங்களும் கிடைத்தன. இவற்றின் மத்தியில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மல்கம் றிஃவ்கின்ட் கொழும்பில் பத்திரிகையாளருக்கு தெரிவித்திருந்த கருத்துக்கள் சிங்கள ஆட்சியாளருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தன. 'விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கை அரசாங்கம் அதன் சொந்த மண்ணில் தடை செய்தாலும் கூட, பிரிட்டனில் அவ்வியக்கத்தின் அரசியல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வழியேதும் இல்லை' என்று மேற்படி பிரித்தானியத் தூதர் தெரிவித்த கருத்துக்கள் இனவாதப் பத்திரிகைகளின் சீற்றத்தைக் கிளறின.

இனவாதப் பத்திரிகைகளின் சிறுபிள்ளைத்தனமான மூக்கு வடிப்புக்களுக்கு அப்பால் சந்திரிகா அரசாங்கமும் தாம் சிறுபிள்ளைத்தனமாக மூக்கறுக்கப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்தது.

புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமென்று கருதுகிறீர்களா? என்று றிஃவ்கினிடம் பத்திரிகையாளர் கேள்வி எழுப்பியபோது, 'விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதாக நாம் அறிகிறோம். அதே வேளை புலிகள் அரசியல் ரீதியான நடவடிக்கைகளிலும் வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம்' இதில் அவர் ஓர் இரட்டைக் கருத்தினை தெரிவித்

மு. திருநாவுக்கரசு

www.tamilarangam.net

திருந்த போதிலும் பின்னைய கருத்தின் மூலம் புலிகள் உள்நாட்டு ரீதியாகவும் தடைசெய்யப்பட வேண்டியவர்கள் அல்ல என்ற மனப்பாங்கையே அவர் வெளிக்காட்டி இருந்தார்.

"இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்து நான் பேச்சுக்கள் நடத்தியபோது இரு தரப்பினருமே இன நெருக்கடிக்கான அரசியற் தீர்வின் அவசியத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டனர்" என்று பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறினார். அதாவது, புலிகளைத் தடை செய்வதை விட அரசியற் தீர்வைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதே இங்கு முக்கியம் என்ற செய்தியை அமைச்சர் றிஃவ்கின்ட் இலங்கைக்கு விட்டுச் சென்றார்.

இதற்கு முன் ஓகஸ்ட் மாதப் பிற்பகுதியில் அமெரிக்க வெளிவிவகாரப் பிரிவில் இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது. அமெரிக்க வெளிவிவகாரப் பிரிவின் தென்னாசிய விவகாரத்துக்குப் பொறுப்பான இரு சிரேஷ்ட அதிகாரிகளுக்கும், விடுதலைப் புலிகளின் இரண்டு பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நிகழ்ந்தது. புலிகளின் பிரதிநிதிகளாக லோறன்ஸ் திலகரும், உருத்திரக்குமாரும் இதில் பங்குபற்றியதாகவும், இதில் அமெரிக்காவின் தென்னாசிய விவகாரப் பகுதிக்குப் பொறுப்பான றொபின் றாஃபல் புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்காது இரண்டு அதிகாரிகளே இவர்களைச் சந்தித்தனர் என்றும் எனவே அமெரிக்கா புலிகளைப் பொருட்படுத்தவில்லை என்றும் அது புலிகளுக்கு ஒரு தோல்வி என்றும் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை எழுதியுள்ளது. இச்சந்திப்பு பற்றி சுஜீவா செனிவிரத்ன எழுதிய கட்டுரையில் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். இந்திய அரசுடனும், இலங்கை அரசுடனும் அமெரிக்கா உறவைக் கொண்டுள்ளது. அந்த நிலையில் ஓர் உயர் மட்டப் பொறுப்பாளர், புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பது இந்தியாவின் மனதைப் புண்படுத்தக்கூடும் என அமெரிக்கா எண்ணியிருக்கலாம். அப்படி இருந்தும் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகள் புலிகளின் பிரதிநிதிகளை வெளிப்படையாகச் சந்தித்துள்ளனர். மேலும் இலங்கை விவகாரத்திற்குப் பொறுப்பான ஓர் அமெரிக்க அதிகாரியும் இச்சந்திப்பில் உடன் இருந்ததாகத் தகவல் உண்டு. ராஜரீக உறவின் மட்டத்தில் வைத்துப் பார்க்கும்போது புலிகளை அமெரிக்கா பொருட்படுத்தியுள்ளது என்பதையே இச்சந்திப்பு காட்டுகிறது. புலிகளைப் பொருட்படுத்தாது விட விரும்பினால் அமெரிக்கா புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்காது நிராகரித்திருக்கும்.



அமெரிக்க அதிகாரிகளுக்கும் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் முழு விபரங்களும் தெரியவில்லை. ஆனால் இச்சந்திப்பின் போது புலிகளின் நடவடிக்கைகளில் தனக்குள்ள சில "விருப்புக்கள், வெறுப்புக்களை" அமெரிக்கா வெளிக்காட்டியிருக்கலாம். அமெரிக்காவின் கருத்துக்களில் புலிகளுக்கு உடன்பாடோ முரண்பாடோ இருக்கலாம். இதில் "விருப்புக்கள், வெறுப்புகள்" உடன்பாடுகள், முரண்பாடுகள் என்பவற்றிற்கப்பால் புலிகளுடன் அமெரிக்கா குறைந்தபட்ச வரையறைக்குட்பட்ட உறவிற்காயினும் தயாராக உள்ளது என்பதையே மேற்படி சந்திப்பு எடுத்துக்காட்டுகின்றது. இலங்கை அரசு இதனை எவ்வாறு விளங்கிக்கொள்கிறதோ என்பது ஒருபுறமிருக்க இச்சந்திப்பை மேற்கூறியவாறே சர்வதேச இராஜதந்திர வட்டாரங்கள் விளங்கிக் கொள்ளும். ஆனால் இச் சந்திப்புச் சம்பந்தமாக மயக்கமான கருத்துக்கள் சிங்கள இனவாதச் சிந்தனையாளர்களிடம் இருந்திருப்பினும் பிரித்தானிய வெளிநாட்டமைச்சரின் கருத்துக்கள் மேற்படி மயக்கங்களை கலைக்கக் கூடியவையாய் உள்ளன. எனவே, புலிகளைத் தடைசெய்வது என்பது ஓர் அர்த்தமற்ற வெறும் காகிதச் சட்டமாக மட்டுமே இருக்கும் என்பது இலங்கை அரசுக்குத் தெளிவாகத் தெரியவந்துவிட்டது. ஆயினும் அதன் வரட்டு வீம்பு எவ்வாறோ?

சந்திரிகாவின் இரண்டாண்டு ஆட்சிகால நடைமுறைகள் அவரது சமாதானச் சாயத்தைச் சர்வதேச அரங்கிற் கரையவைத்துள்ள நிலையிலும், மேற்குலகின் முக்கிய அரசுகள் புலிகளைத் தடை செய்யாது குறைந்தபட்ச வரையறைக்கு உட்பட்ட உறவுக்காயினும் அவை தயாராய் உள்ளன என்ற நிலையில் தமிழீழப் போராட்டத்திற்கு எதிரான சர்வதேச பிரச்சாரத்திலும், அது சார்ந்த இராஜதந்திர நடவடிக்கைகளிலும் இலங்கை அரசு மேலும் அதிக அக்கறை செலுத்தத் தொடங்கியுள்ளது.

இத்தகைய பின்னணியில் தமிழர், முஸ்லீம் முரண்பாட்டை நெய்யூற்றி வளர்ப்பதன் மூலம் சர்வதேச அரங்கிலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான ஒரு பிரச்சாரக் களத்தைத் திறக்கலாம் என சந்திரிகா நினைக்கிறார். இதற்கான ஒரு முன் முயற்சியே அஷ்ரப் தலைமையிலான 150 உறுப்பினர்களைக் கொண்ட "வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புச் சபை' என்பதன் உருவாக்கமாகும். அஷ்ரப்பின் கையில் அதிகாரத்தைக் கொடுத்தால் "வடக்கு கிழக்குக்கான" முழு வளங்களையும் அவர் முஸ்லீம் மக்களின் அபிவிருத்திக்கென பயன்படுத்துவார். இது தமிழரை முஸ்லீம் மக்களுக்கு எதிராக ஆத்திரமடையச் செய்யும். இது தமிழர் – முஸ்லீம் உறவை வெகுஜன மோதலுக்குத் தள்ளும் என்பதே சந்திரிகாவின் எதிர்பார்ப்பாகும். அது சர்வதேச அரங்கில் தனக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்தும் என அவர் கணக்குப் போடுகிறார்.

★

www.tamilarangam.net



## ஆபத்தொன்றை எதிர்கொண்டிருந்த அநுருத்த ரத்வத்தயும், ஹோகான் தளுவத்தையும் அதிலிருந்து மீண்டு விட்டார்களா?

# வான்வெளியில் வழிதவறிய சிங்கள இராணுவத் தளபதிகள்

சனிக்கிழமை டிசம்பர் 7, 1996

தமிழீழ வான்பரப்பில் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பெல்–212 ரக உலங்குவானூர்தி ஒன்று பறந்து கொண்டிருக்கின்றது.

தமிழீழ விமான எதிர்ப்புப் படையணியின் விழிகளை சிவக்க வைக்கும் குண்டு வீச்சு விமானங்கள் மக்கள் வாழ்விடங்கள் மீது கண்மூடித்தனமான முறையில் குண்டுவீச்சுக்களை மேற்கொண்டு வருகின்றன. பெல்–212 ரக உலங்குவானூர்தி குண்டுவீச்சு விமானங்களுடன் இணைந்து தமிழ் மக்களின் பொருளாதார, அடிக்கட்டுமானங்களைச் சிதைத்தல், வாழ்விடங்களை அழித்தல், மனித உயிர்களை ஈவிரக்கமின்றி கொன்றொழித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. அது மட்டுமல்லாமல் இராணுவத்தினருக்கு தேவையான பொருட்களை ஏற்றிச் செல்லுதல், உளவு வேலைகளுக்கு பயன்படுத்தல், இராணுவ அதிகாரிகளை ஏற்றிச் செல்லல் போன்ற காரியங்களில் ஈடுபடுத்தப் பட்டு வந்தது.

இவ் வகையான உலங்குவானூர்திகள் மிக முக்கியமான உயர் பதவிகளில் இருக்கும் இராணுவத்தினரை, அல்லது சிங்கள அரசியல்வாதிகளை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்படுவதில்லை. இவ் வேலைகளுக்காக பெல்–212 ஐ விட பல வகையிலும் சிறப்பு வாய்ந்த பெல்–412 ரக உலங்குவானூர்தியே பயன்பட்டு வருகிறது.

பம்பலப்பிட்டிய பொலிஸ் பூங்காவில் காத்து நின்ற அதிகாரிகளை ஏற்றிச் செல்வதாகவிருந்த பெல்–412 உலங்குவானூர்தி வருவதற்கு ஏற்பட்ட காலதாமதம் ரத்வத்தைக்கு கோபத்தை வரவழைத்தது. வெலியோயாவில் நடைபெற இருக்கும் இராணுவ மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நின்ற ரத்வத்தையும் அதன் குழுவும் காலதாமதத்தை தவிர்ப்பதற்காக அங்கு நின்ற பெல்–212 ரக உலங்குவானூர்தியை தமது பிரயாணத்துக்காக பயன்படுத்திக் கொள்கின்றனர்.

சில நிமிடத்துளிகளில் பனிப்புகார்களை கடந்து பம்பலப்பிட்டி பொலிஸ் பூங்காவுக்கள் பெல்–412 வந்து இறங்குகின்றது.

ரத்வத்தையும் அவரது குழுவினரையும் அங்கு காணாத விமான ஓட்டிகள், விடயத்தை அறிந்து வெலியோயா மாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் ரத்வத்தை குழுவினர் திரும்பி வரும் போது அவர்களை பாதுகாப்பாக ஏற்றிவருவோம் என்கிற எண்ணத்துடன் வெலியோயாவை நோக்கிப் பறக்கத் தொடங்கினார்கள்.

முகில்களில் மிதந்தபடியும், பசுமை நிறைந்த மரஉச்சிகளின் மேலும் பறக்கும் பட்சிகளின் சந்தோஷம் அவர்களுக்குள் வெலிஓயாவில் இறங்கியதும் இல்லாது போய்விட்டது. ஏனெனில் இவர்களுக்கு முன்பாக பெல்–212 ல் பறந்த ரத்வத்தை குழுவினர் அங்கில்லை.

எரிபொருள் நிரப்புவதற்காக அவர்கள் அனுராதபுரத்திலோ, அல்லது வவுனியாவிலோ தரையிறங்கியிருக்கலாம் என்கிற விதமான ஊகங்கள் முதலில் எழுந்தன. அதுவும் நேரம் செல்லச் செல்ல மெல்ல மெல்ல......

வடக்கையும், கிழக்கையும் பிரித்தெடுக்கும் முயற்சியில் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான வெலிஓயா கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முப்படைத்தளம் பரபரப்புகுள்ளாகிறது. சிங்கள பௌத்த பேரினவாத அரச இயந்திரத்தின் ஒரு வலை போல் பின்னப்பட்ட அனைத்து

www.tamilarangam.net


தொலைத் தொடர்புச் சாதனங்களும் மெல்ல முதலில் முனகத் தொடங்கின. சந்திரிகாவுக்கு இச்செய்தி எட்டியது. சிங்கள அரசின் தகவற் தொடர்புச் சாதனங்கள், 'அவர்கள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது?' என்கிற கேள்விகளை மாறி மாறி எழுப்ப, ஒரு உஷ்ண வலயம் உருவாகுகின்றது. இந்த வலயத்தை திறமையான அதிகாரிகள் தம் கவனிப்புக்குள்ளாக்கி செய்தி வெளியேறாவண்ணம் செயற்பட்டனர். உலங்குவானூர்தி பறந்த அதே பாதையில், MI-17 ரக உலங்குவானூர்தி ஒன்று அனுராதபுரத்தில் இருந்து புறப்பட்டு ஒரு வித தளம்பலுடனும், கலக்கத்துடனனும் பறந்து வெலிஓயாவை அடைகிறது. எந்தச் செய்தியும் கிடையாமல் தமது முயற்சியில் வெற்றி பெறாமல் அதிகாரிகள் சோர்ந்து போகிறார்கள்.

இரு மணிநேரங்கள் கழிந்துவிட்டன. சிறிலங்காவின் வான் படையின் உதவித் தளபதி பீரிஸ், வான்படை தலைமையகத்துக்கு விரைகின்றார். சிறிலங்கா முன்னை நாள் விசேட அதிரடிப்படை தளபதி லயனல் கருணசேன (இப்பொழுது அநுராதபுரத்தில் டி.ஐ.ஜி) மகிந்தபால சூரிய, மத்திய வடக்கு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் சகாக்களுடன் வெலிஓயாவில் நின்று கொண்டு சிங்கள இராணுவ பொலிஸ் மையங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை அறிய முயல்கின்றனர்.

இப்பொழுது பெல்–212 தனது பாதையை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கிறது என்பது தெரிய வருகின்றது. பெல்–212ல் பயணம் செய்தவர்கள் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான பிரேமரத்தன சுமதிபால, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோகான் தளுவத்த, பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. பீ ராஜகுரு, வடக்குக் கிழக்குப் படையணித் தளபதி மேஜர் ஜெனரல் அசோக்கா ஜெயவர்த்தனா இவர்களுடன் ரத்வத்தையின் மூன்று மெய்பாதுகாவலர்கள், ராஜகுருவின் மெய்பாதுகாவலர் ஆகியோர் இருந்தார்கள்.

வெலிஓயாவை நோக்கிப் பறந்து கொண்டிருந்த உலங்குவானூர்தி திசை மாறி விட்டதை, விமானப்பறப்புக்களூடாக நில அமைப்புக்களை நன்கு பரீட்சயத்தைப் பெற்றிருந்த றோகான் தளுவத்தை உணர்ந்து கொண்டார். பிழையான அடித்தளங்களில் அடியொற்றிச் செல்லும் றோகான் 'பாதை தவறி விட்டோம்' என எச்சரித்த போது உலங்குவானூர்தியில் இருந்தவர்கள் கலங்கிப்போகின்றார்கள். எரிபொருளின் இருப்பு இரு நிமிடங்கள் மாத்திரமே பறப்பதற்கு போதுமான கையறுநிலையில் அவர்கள் மிகப்பெரிய பொறி ஒன்றுக்குள் நுழைகின்றார்கள். வளம் நிறைந்த பூமி. குளிர்ந்த தென்றலில் தோய்ந்து நின்ற வாழை மரங்களை சுழிக்காற்று வீசியடித்தது. செம்மண் புழுதியைக் கிளப்பியபடி ஆக்கிரமிப்பாளர்களின் உலங்குவானூர்தி அவலத்தோடு தமிழீழ மண்ணில் தரிக்கின்றது.

அப்போது திசைகள் தெரியாது, போகுமிடம் தெரியாது ஒருவர் ஒருவராக உலங்குவானூர்தியை விட்டு இறங்கத் தொடங்கினார்கள். ஆபத்தின் உச்ச எல்லைகளைத் தொட்டவர்களாக காணப்பட்ட அனுருத்த ரத்வத்த குழுவினர், தரையிறக்கிய இடத்தின் அருகில் உள்ள தமிழீழ விவசாயி ஒருவரின் வீட்டுள் கொமாண்டோ பாணியில் நுழைகின்றார்கள். தமிழ் தெரிந்த ராஜகுருவும், பிரேமரத்ன சுமதிபாலாவும் அந்த வீட்டுத் தலைவனுடன் உரையாடுகின்றார்கள்.

'மண்ணெண்ணெய் இருக்கிறதா?' என்று கேட்கிறார்கள்.



அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடை, மருந்துப் பொருட்கள் மீதான தடை, எரிபொருள்தடை என்று தமிழீழத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்தவர்களாக மண்ணெண்ணெய் இருக்கிறதா எனக் கேட்ட போது அந்த விவசாயி அதிர்ந்தே போனார். அவர்களின் உலங்குவானூர்தி இயங்கி தப்பிப் பறந்து செல்வதற்கு தேவையான எரிபொருளை அவர்களுக்கு கொடுப்பதற்கு இல்லை என்ற பயத்துடன் உள்ளே சென்ற விவசாயி பலமாதகாலமாக தனது பாவனைக்கென வைத்திருந்த சிறியளவிலான மண்ணெண்ணெயை எடுத்து வந்தார். இதையும் இவர்களிடம் கொடுத்து விட்டால் இருக்கின்ற எரிபொருள் தடைக்குள் மீளப்பெற எவ்வளவு காலம் எடுக்குமோ என்ற கவலையுடன் அதனை அவர்களிடம் கொடுத்தார். ஏமாற்றத்துடன் அதைப் பார்த்த ஆகாயத்தில் பறந்தே பழக்கப்பட்ட சிங்கள விமான ஓட்டிக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஒரு வித இனம்தெரியாத பயபீதி அவர்களைச் சூழ்ந்துகொள்ள உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேற முடிவு செய்கின்றனர். அப்போது தப்பிச் செல்வதற்கான மார்க்கம் எதுவும் தெரியாத நிலையில் விவசாயியை ஒரு விதமான அச்சவுணர்வுக்கு ஆட்படுத்தி, தங்களுக்கு மிகுந்த மனிதபாதுகாப்புக் கவசமாகவும், தகவல் கசிவை தடுக்கும் நோக்குடனும் அவரையும் அவரது மனைவியையும், மூன்று பிள்ளைகளையும் தங்களுக்கு வழிகாட்டிச் செல்ல கூட்டிச்செல்கிறார்கள். விசேட பயிற்சி பெற்ற மிக நவீன ஆயுதங்களைக் கொண்டிருந்த மெய்ப்பாதுகாவலர்கள் அனுருத்த ரத்வத்தயைச் சூழ்ந்து பாதுகாப்பளித்த வண்ணமும் அதே நேரம் திருச்செல்வம் குடும்பத்தை கண்காணித்தபடியும் வேகமாக முன்னேறுகிறார்கள்.

தமிழனாக இருக்கும் திருச்செல்வம் தங்களை சரியான பாதையில் எடுத்துச் செல்வாரா என்ற அச்சம் அவர்களுக்குள் இருந்தது. ஏற்கனவே தமிழ் மக்கள் மீதான பல பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு முதன்மைத் தளபதிகளாக இருந்துவரும் அவர்களுக்கு அச்சம் எழுவதில் தவறில்லை. உண்மையில் பயந்தே போனார்கள். நவீன ஆயுதத்தை தாங்கிய மெய்பாதுகாவலர்களின் கண்கள் சுற்றுப்புறங்கள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீது செலுத்திய பார்வையை விட திருச்செல்வத்தின் குடும்பத்தின் மீதே குறியாக இருந்தது என்றால் மிகையாகாது.

அடி சறுக்கிய யானைகளைப் போல நிற்கும் ரத்வத்தையும் அவர் குழுவும், மிகப்பெரிய வரலாற்று புகழ்மிக்க யாழ்ப்பாண நகரின் மீதான 'சூரியக்கதிர்' படையெடுப்பும், 'சிங்களத்தின் சக்தி' என்ற பெயர் சூட்டி பின்னர், சடுதியாக வெளிநாடுகளில் அவமானத்தைத் தேடித் தரும் என்கிற விதமாய் எண்ணி 'சத்ஜய' என பெயர் மாற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்ட கிளிநொச்சி நகர் மீதான படையெடுப்பும் அவர்கள் கண்களில் ஒரு மின்னல் தரிசன நிகழ்வுகளாக ஓடி மறைந்தன. எத்தனையோ இலட்சம் மக்களை அகதிகளாக்கி காடுகளுக்குள் காடுவாசிகளாக்கி விட்டிருக்கும் இவர்களால் காட்டில் ஒவ்வொரு அங்குலத்தைக் கூட இயல்பாக கடக்க முடியாதிருந்தது. இருந்த போதும் காட்டில் காணப்பட்ட சிறு நீர் நிறைந்த குட்டையினை கண்டு தான் எந்தவிதமான அச்சவுணர்வுக்கும் ஆட்படவில்லை என்பதை சகட்டுமேனிக்கு காட்டும் முகமாய் 'நீந்திவிட்டுப் போவோமா?' எனக் கேட்கின்றார் ரத்வத்தை. ஏற்கனவே நடுக்கடலில் சிக்கி கரைசேர முடியாத நிலையில் சிக்கிய ரத்வத்தை குழு நீச்சலைப்பற்றிய 'நகைச்சுவை'யை ரசிக்கவும் முடியாது, சிரிக்கவும் முடியாமல், அழவும் முடியாமல் கஸ்டப்படுகின்றனர்.

புலிகளின் நடமாடும் கண்காணிப்புக்குழு, தொலைவிலிருந்தே தரையிறக்கப்பட்ட உலங்கு வானூர்தி பற்றிய செய்தியை சகல கண்காணிப்புக் குழுக்களுக்கும் அறிவிக்கிறார்கள். புலிகளின் நடமாடும் அதிரடிப்படையினருக்கும் அச்செய்தி சென்றடைகிறது. மின்னல் வேகத்தில் புலிகள் உலங்கு வானூர்தி தரித்துநின்ற இடம் நோக்கி முன்னேறுகின்றனர். சொற்ப நேரத்தில் உலங்கு வானூர்தி இறங்கிய இடத்தை அடைந்த புலிகள் சூழலை நன்கு அவதானிக்க பின் அணியினர் நிலையெடுக்க, தாக்குதலணியினர் மெதுவாக, ஆனால் உறுதியாக, உலங்கு வானூர்தியை அடைகின்றனர்.

இன்னொரு சிறப்பு அணி, சிங்களப் படை ஒரு முற்றுகைக்கான முயற்சிகளுடன் தரையிறங்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது.

தாக்குதலணி, பறப்பு ஓய்ந்த நிலையில் சக்தி வாய்ந்த பெல்–212 ரக உலங்குவானூர்தி பற்றிய பிரதேச தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்குகின்றனர். மற்றைய அணிகள் ரத்வத்தை குழுவினர் சென்ற தடயங்களை வைத்துக்கொண்டு நகர, எலி, பூனை நாடகமொன்று காட்டின் மத்தியில் அரங்கேறுகிறது. களத்தில் நிற்கும் விடுதலைப் புலிகளின் உதவிக்கு மேலும் சில படையணி வீரர்கள் மிக வேகமாக வாகனங்களிலும் அணிவகுத்து வந்து கொண்டிருக்கின்றனர்.

பிரதேசக் கட்டளையகத்தின் பணிப்பின் பேரில் நாலா பக்கங்களிலும் விடுதலைப் புலிவீரர்கள் காட்டை சல்லடையிட்டுத் தேடத் தொடங்கின்றார்கள்.

சப்புமல்ய குமரய்யவின் மறுபிறப்பாக சிங்களவர்களால் புகழப்படும் ரத்வத்தை வந்த உலங்குவானூர்தியில் இருந்த பெறுமதியான பகுதிகளை அப்புறப்படுத்திய பின்னர் அதனை வெடிவைத்து தகர்க்கின்றனர் விடுதலைப் புலிகள்.

வெடியோசை காதுகளில் இதயத்தின் நாளங்களை அதிரவைக்கிறது. தமிழர் வாழ்நிலங்கள் மீதும், தமிழர் வாழ்வின் மீதும் கொட்டிய குண்டுகளின் அதிர்வொலி காதுகளில் பலமாய் ஒலியெழுப்ப ரத்வத்தை தனது வாழ்வில் மறக்க முடியாத ஒரு அநுபவத்தை மிகுந்த அதிர்ச்சியோடும் அதிர்வோடும் பெற்றுக்கொள்கின்றார். அவருக்குப் பின்னாலே ஒலித்த வெடியதிர்வானது அவரது வாழ்வில் என்றுமே மறக்க முடியாததாயும், விடுதலைப்புலிகள் தன் காலடிச் சுவட்டின் அருகே நிற்கின்றார்கள் என்ற பயமும் அவரை ஆட்கொண்டிருந்த விதமே அலாதியானது.

சந்திரிகா முப்படையின் முழுச்சக்தியையும் தீவிரமாக பயன்படுத்துகின்றார். எம். ஐ. 24, எம் ஐ 17, மிகையொலி யுத்த விமானங்கள் என விமானப்படையே தனது முழுச் சக்தியையும் பயன்படுத்தி ஒரு தேடுதல் வேட்டையை ஆரம்பிக்கின்றது. முப்படைத்தளபதிகளும் முகாம்களுக்கு வரவழைக்கப்பட்டு மும்மரமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ரத்வத்தையின் மெய்ப்பாதுகாவலர்கள் கடுமையான முயற்சி எடுக்கின்றார்கள். தூரத்தே புலிகளின் வாகன இரைச்சல்கள் கேட்கின்றன. திடீரென அவர்களது வோக்கி ரோக்கி பல பகீரத முயற்சிகளின் பின் உயிர் பெற்று பதில் கிடைக்கின்றது. தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அனைத்து வானூர்திகளும், ரத்வத்தையின் இடம் நோக்கி செலுத்தப்படுகின்றன.

பிரமாண்டமான அளவில் அனைத்து வானூர்திகளும் அங்கு மிங்கும் பறந்து பாதுகாப்பளிக்க உலங்குவானூர்தி ஒன்று தரையிறங்குகிறது.

திருச்செல்வம் என்கின்ற தமிழன் ஒருவனால் தான் உயிராபத்தில் இருந்து மீண்டு கொண்டேன் என்கிற விதமான நன்றியுணர்வை வெளிப்படுத்த முடியாத ஒரு வெட்க உணர்வு அவரை ஆட்கொள்கிறது. அவசர அவசரமாக மிகப் பெரிய உயிராபத்தை எதிர்கொண்டிருந்த ரத்வத்தையும் அவர்குழுவும் அதிலிருந்து மீண்டு உலங்குவானூர்தியில் ஏறிப் பறக்கத் தொடங்கினார்கள். பகை விமானங்களின் பறப்பை எப்போதும் சகிக்காத தமிழீழ வான் பரப்பு சிவந்தே கிடக்கின்றது. ★

## எப்படித் தப்பவிட்டார்கள்!

எப்படி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் தரையிறங்கிய ரத்வத்தையும், றோஹான் தளுவத்தையும் தப்பித்துச் சென்றார்கள் என்ற கேள்வி ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரத்துக்குள் கேலியாகப் பேசப்பட்டிருக்கிறது. அது தானே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உலங்குவானூர்தியில் தரையிறங்கியவர்கள் எப்படித் தப்பித்துக் கொண்டார்கள். விடுதலைப்புலிகள் எப்படி தப்ப விட்டார்கள் என்று அவர்களில் ஒருவர் கேட்டிருக்கிறார். அதற்கு பதிலளித்த ஒருவர் சொன்னராம், அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று விடுதலைப்புலிகளுக்கு தலைவர் பிரபாகரனே சொல்லி விட்டாரம்; முட்டாள்களான அவர்களால் திறமையாகச் சண்டைபிடிக்கத் தெரியாது. அவர்களை கொன்று விடாதீர்கள். அப்படிக் கொன்றால் அவர்களின் இடத்திற்கு யாரும் கெட்டிக்காரர்கள் வந்து விடுவார்கள் என்று கூறித் தடுத்து விட்டாரம். அதனால் தான் அவர்களால் தப்பிச் செல்ல முடிந்தது என்று சொல்லி சிரித்தார்களாம்.

இவர்கள் இப்படிச் சிரித்த கதை சந்திரிகாவின் கட்சிக்காரர்களுக்குள் தெரியவர அவர்கள் சொன்னார்களாம் 17 வருடகாலமாக கெட்டித்தனமாக யுத்தம் புரிந்த தங்களின் சாகசங்களை தெரியாமல் கதைக்கினமே என்று ஒருவர் சொல்ல இன்னொருவர் அப்படியென்றால் இவர்கள் தங்களது 17 வருட கால யுத்த முறைகளை விளக்கி முட்டாள்கள் படிக்கக் கூடியதாக ஒரு கை நூல் ஒன்றை விடலாமே என்று கூறிச் சிரித்தார்களாம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்களத்தின் புதிய போர் உத்தியை முறியடிப்போம்



சிங்களத்திற்கு இன்றைக்குள்ள ஒரேயொரு வழி, என்னென்ன வழிகள் அதற்கிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் பயன்படுத்தி எம்மக்களை நலிவுபடுத்துவது தான். போர் மூலம் தமிழ் மக்களின் சிக்கல்களைத் தீர்க்க முடியாது என்று கூறிக் கொண்டே பெரும் போரைத் தொடுத்திருக்கும் சிங்கள அரசின் போரின் தொடர்ச்சி இது. ஒரு ரகசியப் போர் உத்தியாகத் திட்டமிட்டு செயற்படுத்தப்படும், தமிழ் மக்களின் நல்வாழ்விற்கு கேடுவிளைவிக்கும் தடை இது. உலக வரலாற்றில் வலிய நாடுகள் போர்களின் போது ஆபத்தான தொற்று நோய்கிருமிகளை புதியவகை நுளம்புகளை எதிரியின் பிரதேசம்மீது பரப்பி விடுவது பற்றிக் கேள்விப்பட்டுள்ளோம். இப்போது சிங்களமோ, உலகில் இருந்து எந்த நோய்களை முற்றாக அழித்து விட வேண்டும் என்பதற்காக உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் பலரும் செயல்படுகின்றனரோ, அந்த நோய்களான மலேரியா, வயிற்றோட்டம், செங்கமாரி போன்றவற்றைத் தமிழர் தாயகத்தில் எதிர்க்க நோய்த்தடுப்பு, நோய் தீர்க்கும் மருந்துகளை தடுப்பதன் மூலம் மனித இனத்திற்கே பெரும் கேடு விளைகின்றது.

எவ்வாறு இதனைச் சிங்களம் செய்கின்றது? கடும் உழைப்பின் காரணமாக கல்வி அறிவும், வாழ்க்கைத் தரமும் அதனால் சில சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கைக் கொண்டு வாழ்ந்த எம்மக்கள் மீது பெரும் போரைத் தொடுத்து முதல் கட்டமாக எம்மக்களை இருப்பிடங்களை விட்டு இடம்பெயரச் செய்து எல்லாவற்றையும் இழக்கச் செய்கின்றது. தொடர்ந்து அடுத்த கட்டமாகப் பல்வேறு தடைகளை நேரடியாக, மறைமுகமாக, இரகசியமாக விதித்துத் தமிழ் மக்களை உடல், உளரீதியாக நலிவு படுத்தி, மெலிவு படுத்தி அவர்களது வாழ்வு இயக்கத்தை போர் ஊக்கத்தை மட்டுப்படுத்த முயல்கின்றது. மேற்கு நாடுகளின் உதவி குறைந்து விடுமோ, கண்டனம் வந்துவிடுமோ என்ற அச்சதில் முழுமையான உணவு தடையைத் திணிக்க முடியாமல் மறைமுகமாக பல்வேறு உணவுத் தடைகளை இட்டு வாட்டும் சிங்களம் இப்போது என்ன செய்கின்றது? துன்பமான முறையில் மருந்துத் தடையைப் போர் முறையில் ஓர் ஆயுதமாக சிங்களம் பயன்படுத்துகின்றது. இதன் விளைவுகள் என்ன? ஆபத்தான தொற்றுநோய், உயிர் கொல்லி நோய்களுக்கான தடுப்பு மருந்துகளுக்குத் தடை – அவசிய சத்திர சிகிச்சைக்கான மயக்க மருந்துகள் தொட்டு உயிர் வாயு வரை தடை – அவசர மருத்துவ சிகிச்சைக்கு எங்கும் போகமுடியாமல் தடை – சாதாரண காயங்களுக்குக் கூட மருந்திட பஞ்சு தொட்டு தொற்று நீக்கிய துண்டுகளுக்கும் தடை – மருத்துவ மனைகளுக்கு அனுப்ப வேண்டிய மருந்துகளில் பெருவெட்டு. மனிதநேய அமைப்புக்களின் மருத்துவ தேவைகளுக்கு இடையூறு விளைவிப்பு. இப்போது சாதாரணமாக மக்களின் நாளாந்த பயன்பாட்டில் உள்ள பனடோலுக்குத் தடை – இவ்வாறாக பரவலாக மருந்து, மருத்துவத்தடையை விதித்து எம் மக்களைச் சுற்றி சிலந்தி வலையொன்றை பின்ன முயல்கின்றது சிங்கள அரசு. எவ்வாறு இந்த வலை உடனடியாகவே அறுத்து எறியப்பட வேண்டும்? எவ்வாறு எதிரியின் தடையை எடுத்துக் காட்டுவது? இனிச் செய்வதற்கு ஒன்றுமில்லையென இருப்பதற்கான இத்தடையை தாண்டுவதற்கே இயற்கையோடு நாளாந்தம் போராடும் எம்மக்களுக்கு வாழ்வே போராட்டமாக, போராட்டமே வாழ்வாக வாழ்கின்ற நிலையில் மனமிருந்தால் இடமுண்டு என்று எம் மக்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டிய செய்தியல்ல. வாழ்வின் தரம் குன்றலோடு, மருத்துவ நல்லொழுக்கமும் பாதிக்கப்படும் என்பது ஒரு விதி என்றாலும் எம்மக்கள் பேணக்கூடிய, அவர்களுக்கு இயலக்கூடியவற்றை கவலையீனம் காரணமாக கைவிட்டுவிடக் கூடாது என்பதே எம் மக்கள் மனதில் கொள்ள வேண்டிய பிரதான விதியாக உள்ளது.

வீட்டை, சுற்றாடலைச் சுத்தமாக வைத்துக் கொள்வதிலிருந்து, கொதிக்க வைத்துக் கிருமிகளைக் கொல்வதில் இருந்து, நுளம்பு பெருக்கத்திற்கு நாமே காரணமாக இருக்காமல் இருப்பதிலிருந்து, எமது வாழ்வினைக்கேற்ற கழிப்பறைகளை அமைப்பதில் இருந்து, எம்மை நாடிவரும் மருத்துவ சுகாதார நல்வாழ்வு ஆலோசனைகளை அவ்வாறு செயல்படுத்துவது வரை இதனுள் அடக்கம். அருமையாகக் கிடைக்கும் நோய்தடுப்பு மருந்துகளை முறையான மருத்துவ ஆலோசனையின் படி அவ்வாறே உட்கொள்ளல்; முறையான மருத்துவரை முடிந்தவரை நாடுதல் என்பன அடுத்த விதியாகின்றது. இவற்றோடு எம்மக்களிடையே நீண்டகாலமாக பயன்பாட்டில் இருக்கும் எமது சொந்த மருத்துவ முறைகள் மூலிகைப் பயன்பாடு என்பவற்றைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தல் எனப் பல விதிமுறைகளைக் கைக்கொண்டு இம் மழைக்காலத்தில் மட்டுமல்ல எதிர்வரும் காலங்களையும் எதிர்கொள்வோம். இந்த மருத்துவ நல்லொழுக்க முறைகள் வெறுமனே எமது நல்வாழ்வுக்காக மட்டுமல்ல, எமது தேசிய இனத்தின் விடிவிற்காகவும் பின்பற்றப்பட வேண்டியவை. இவை பின்பற்றப்படுவதால் எம்மக்களின் உடல், உளநிலை சீர் செய்யப்படுவது மட்டுமன்றி எந்தத் தடையும் விதித்ததனால் கண்ட பயன் என்ன எனச் சிங்களம் குழம்பும் போது விடிவின் ஒளியும் எம்மைத் தேடிவரும்.

**- வே. பாலகுமாரன்**

www.tamilarangam.net

# தமிழ்ப் பெண் புலிகள்
# ஒரு சமூக ஆய்வு

'எசென்சியல்ஸ் ஒவ் சோசியோலொஜி" எனும் நூலில் இருந்து ஒரு சிறு பகுதியினை பிரசுரிக்கின்றோம்; இந்நூல் ஆண், பெண் இருபாலாரது தனிப்பட்ட குணாம்சங்கள் மற்றும் உடல்கூற்று ரீதியான பாகுபாடுகள் பற்றியும் பேசுகிறது. குறிப்பாக பெண்களின் ஆளுமைகள் பற்றிய சிறப்புக் கட்டுரையாக இது இருக்கிறது. இந்நூலினை எழுதத் தொடங்கும் நூலாசிரியர் ஒரு கற்பனையாக, சய்தி நிறுவனமொன்றின் செய்தியை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்ப் பெண் புலிகள் பற்றிய ஒரு ஆரம்ப கதையைத் தொடங்குகிறார்.




நவம்பர் - டிசம்பர் 'HOT SPRING' என்னும் ஆங்கில இதழில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்

பருவ வயது நிரம்பிய பெண்கள் காட்டுக்குள்ளால் நகர்ந்து கொண்டிருந்தார்கள்; விடியலுக்கு முந்திய காலைப்பொழுதில் கனரக ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு ஒரு குறுகிய இடுக்கான பாதையூடாக மிக வேகமாக கடந்தார்கள்; காட்டு மரங்களினால் மறைபட்டு ரி–81 சீன ரக ஆயுதங்களுடன் வருபவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இறுதியாக செல்லும் மூன்று பெண்கள் ஏவுகணைகளுடன் இடுக்கு நிறைந்த பாதையைக் கடக்கின்றார்கள்.

'ஆயத்தமா?' கமிர் என்ற பெண் மிக இரகசியமாகக் கேட்கிறாள்.

மற்ற இளம் பெண்கள் கண்களினால் ஜாடையாக 'ஆம்' எனத் தெரிவித்தார்கள். திடீரென அந்த காலை அமைதியை துப்பாக்கி வெடிச் சத்தங்களின் அதிர்வு குலைத்தது.

பயத்துடன், சிறிலங்கா இராணுவத்துருப்புக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து ஓடித் தப்பப் பார்க்கிறார்கள். ஆனால் அதற்கிடையில் எல்லாத் திசைகளில் இருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் அவர்களை வலுவிழக்கச் செய்கின்றன.

மரண காயங்களுடன் முணகிக் கொண்டிருக்கும் இராணுவத்தினரைக் அலட்சியப்படுத்தி காட்டுக்குள்ளால் சத்தமின்றி எப்படி அமைதியாக வந்தார்களோ அதே போல் காட்டுக்குள் சென்று மறைகிறார்கள்.

யுத்தத்தைப் பொறுத்த வரையில் அது ஆண்களுடைய கடமையாக இலங்கைத் தமிழர்களிடையே காலம் காலமாகக் கருதப்பட்டு வந்தது.

ஆனால் எப்போது தமிழ்ப் புலிகள் சுதந்திரத்திற்காக ஆயுதப் போராட்டத்தை தொடங்கினார்களோ அப்பொழுதே அந்த இளம் பெண்கள் தங்களையும் அந்தப் போராட்டத்தோடு இணைத்துக் கொண்டார்கள்.

தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் மரபு ரீதியாக அடக்கமாகவும், பின்னணியில் இருக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்கள்.



தாக்குதல் ஒன்றிற்கு தயாராகி அணி வகுத்துச் செல்லும் பெண் புலிகள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


போர்முனையில் பெண் புலிகள்

இதற்கு மேலாக இந்தப் புரட்சி தொடாத எந்தவொரு சமூக நடைமுறைகளே இல்லை என்றே கூறலாம்.

ஒருநாள் போர் முடியும் போது எல்லாமே மீண்டும் கட்டியெழுப்பப் பட வேண்டும். நடந்ததையும் தற்போது நிகழ்ந்து கொண்டிருப்பதையும் இணைத்து ஒரு புதியதொரு கலாச்சாரம் கட்டி எழுப்பப்படவேண்டும்.

அப்புதிய கலாச்சாரம் எவ்வகையில் அமையும் என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல, அதே நேரம் இம் மாற்றத்தை அவதானிப்பது மிகவும் சுவராஸ்சியமாக இருக்கும்.

இங்கே எமது நோக்கத்திற்கு முக்கியமானது எதுவென்றால் விடுதலைப் போராட்டத்தில் இளம் தமிழ்ப்பெண்களின் பங்கும், அத்துடன் 'பெண்ணினம்' என்பதன் அர்த்தம் எப்படி மாறியுள்ளது என்பதை அவதானிப்பதுமேயாகும்.

ஆனால் இக்கால கட்டத்தில் இவ வகையான பார்வைகளுக்கு இடமில்லை; சிலவேளைகளில் எதிர்காலத்தில்....?

ஆனால் எதிர்காலத்தில் அப்படியிருக்கவும் தேவையில்லாமல் போகலாம். 'பெண் புலிகள்' என்றுதான் அவர்கள் அழைக்கப்படுவார்கள். இருபத்திநான்கு மணிநேர காவல் அரண்களில் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்திய இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட கனரக வாகனங்களில் செல்லும் அவர்கள் தாக்குதலில் நேரடிப் பங்கேற்கிறார்கள்:

ஆண் புலிகளைப் போலவே அவர்களும் சயனைட் குப்பிகளை அணிந்திருக்கிறார்கள்; எதிரியிடம் பிடிபடும் தறுவாயில், உயிருடன் பிடிபட்டு சித்திரவதைக்குள்ளாவதை விட – அப்போது நிச்சயமாக பாலியல் வன்முறைக்கும், கொடுமையான சித்திரவதைக்கும் உட்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர்க்க, சயனைட் குப்பியைக்கடித்து மரணமடைவதற்காக.

உக்கிரமான இந்தப் புரட்சி தமிழ்ச்சமூகத்தில் பல பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது; சமூகத்தின் பாரம்பரிய நடைமுறைகளை, உறவுகளை


மோட்டார் தாக்குதலில் ஈடுபட்டிருக்கும்பெண்கள்

## இராணுவ நடவடிக்கைகளால் வடபகுதி மாணவர் கல்வி சீர்குலைவு!

அடிக்கடி நிகழும் இராணுவ நடவடிக்கைகள், இடம்பெயர்வுகள் காரணமாக வடபகுதி மாணவர்களின் கல்வி நிலை என்றுமில்லாதவாறு சீர்குலைந்துள்ளதாக கொழும்பில் அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் கடந்த 12 வருடங்களாக பலவிதமான பெயர்களைக் கொண்ட இராணுவ நடவடிக்கையின் போதும் மக்கள் இடம்பெயர்வதும் பின்னர் சொந்த இடங்களுக்குத் திரும்புவதும் மிகவும் பரிதாபகரமானதாகவும், துன்பியில் காட்சியாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மோசமான இடம் பெயர்வினால் தமிழ் மக்களின் அழியாச் சொத்தாகிய கல்வி பலவிதமான பின்னடைவுகளைச் சந்திக்கின்னறது. இடம்பெயர்வு காரணமாக மனச்சோர்வு, பேதலிப்பு மனமுறிவு என்பவற்றால் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் கல்வியில் அக்கறையும், ஈடுபாடும் முழுமனதுடன் கொள்ள முடியாத ஒருவித விரக்தி மனப்பான்மை ஏற்பட்டுள்ளது. தற்கால நவீன கல்வி முறையில் எவவித வசதிகளுமன்றி சரியான வழிமுறைகளில் கல்வியை கற்பது என்பது கஸ்டமான விடயமாகும்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு கிடுகுக் கொட்டில்களை அமைத்து, வகுப்பறைகளை, ஏற்படுத்தி வகுப்புக்களை தொடர வேண்டியுள்ளது. வகுப்பறைகள் இல்லாதவிடத்து மர நிழல்களில் வகுப்புகளை நடத்தவேண்டியுள்ளது. இதனால் காலமும் நேரமும் வீணாகின்றது. நவீன விஞ்ஞான ஆய்வுகூடங்கள் – பூரணமான நூலகம் மற்றும் பாடச்செய் முறைக்கான வசதியான அறைகள் விளையாட்டு மைதானங்கள் போன்ற வசதிகள் மைதானங்கள் போன்ற வசதிகள் பரிபூரணமான கல்வியைப் புகட்ட முடியாதுள்ளது.

இந்நிலைமைகள் மத்தியில் அடிக்கடி இடம்பெயர்வுகளால் இடத்திற்கிடம் மாறிக் கொண்டிருக்கும் மாணவர்களால் பரீட்சைக்கு தோற்றி எவ்வாறு சித்தியடைய முடியும் என அந்த விமர்சகர் ஆதங்கத்தோடு கேட்கின்றார்.

★

www.tamilarangam.net

# இலங்கையின் இராணுவ வரலாறு தரும் பாடம்

இந்தியத் தலைநகரான புது டில்லியில் இருந்து வெளிவரும் "மெயின் – ஸ்டிரீம்" பத்திரிகையில் புகழ் பெற்ற இராணுவ விமர்சகரான "அனிருத்தேஷ் பாண்டே" எழுதியுள்ள கட்டுரை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவர் வெறும் எழுத்தாளர் மட்டுமல்ல; வரலாற்று ஆசிரியரும்கூட உலகநாடுகளில் நடைபெறும் போர்கள் குறித்து வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இவர் எழுதும் இராணுவ விமர்சனக்கட்டுரைகள் சரியான கணிப்புடனும், துல்லியமாகவும் இருப்பதால் வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றன.



இலங்கையில் நடைபெற்றுவரும் போர் குறித்து இவர் எழுதியுள்ள கட்டுரையின் முக்கிய பகுதிகள் இங்கு மொழிபெயர்த்துத் தரப்படுகிறது. முல்லைத்தீவு சிங்கள இராணுவ முகாமை புலிகள் தாக்கி முற்றாக நிர்மூலம் செய்வதற்குப் பல மாதங்களுக்கு முன்பாகவே அதாவது 3–6–95 இல் இக்கட்டுரை வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கணித்தபடியே சிங்கள இராணுவம் முல்லைத்தீவில் பெருந்தோல்வியைச் சந்தித்தது – இன்றும் தொடர்ந்து சந்திக்கும் என்பதில் ஐயமில்லை. அனிருத் தேஷ் பாண்டே எழுதியிருப்பதைப் படியுங்கள்.

"இலங்கையில் நடைபெற்றுவரும் போர் ஒரு முக்கியமான காலகட்டத்தை அடைந்திருக்கிறது. இந்த உண்மையை இராணுவ வரலாற்று ஆசிரியர்களும், அரசியல்வாதிகளும் மற்றும் இப்பிரச்சினையில் அக்கறை கொண்டவர்களும் உணரவேண்டும். இவ்வாறு கூறுவதன் மூலம் இரண்டு முக்கிய கண்டுபிடிப்புகளை இந்தக் கட்டுரையில் எடுத்துக் காட்டி இருக்கிறேன். தற்போது பத்திரிகைகளில் விடுதலைப் புலிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத சூழ்நிலையில் நான் கூறுவது ஏற்கமுடியாததாக இருக்கலாம். ஆனால் இலங்கையின் வட பகுதியில் இப்போது நிலவும் இராணுவ சூழ்நிலையின் அடிப்படையில் இவற்றை நான் கூற விரும்புகிறேன்.

1. சகலவிதமான நடைமுறை நோக்கங்களின்படி பார்த்தால், சிங்கள அரசுக்கு எதிரான போரில் விடுதலைப் புலிகள் இயக்கம் வெற்றி பெற்றுவிட்டது என்றுதான் நான் கருதுகிறேன்.

அரசியல் ரீதியாக தன்னுரிமை பெறுவதற்கு போராட வேண்டும் என்ற உறுதிபடைத்த மக்களால் உருவாக்கப்பட்ட திறமையான இராணுவ அமைப்புகளில் ஒன்றான விடுதலைப் புலிகள் இயக்கம் அசாதாரணமான ஒரு இராணுவத் தலைவரை பெற்றிருப்பதன் மூலம், வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டது என்பது எனது இரண்டாவது கணிப்பாகும்.

ஒரு பக்கம் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு மறுபக்கம் இராணுவ ரீதியான போரைத் தொடங்குவதற்கான வாய்ப்பையும் தயாராக வைத்துக் கொண்டிருந்த காரணத்தினாலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கை ஓங்கிவிட்டது. அண்மையில் சாம் ஏவுகணைகள் மற்றும் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தியதன் மூலம் சிங்கள விமானப் படையையும், கடற் படையையும் செயலற்றதாக விடுதலைப் புலிகள் ஆக்கிவிட்டனர். இந்தியத் துணைக்கண்டத்தில் விடுதலைப்புலிகளுக்கான எதிர்ப்புக் கருத்துக் கொண்டவர்கள் விடுதலைப்புலிகளின் துணிகரமான நடவடிக்கைகளிலிருந்து பாடம் கற்க வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தின் அமைதி, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் நலன்களை மனதில் கொண்டு பார்த்தால், இந்தப் பாடங்களை யாரும் அலட்சியப் படுத்தமுடியாது.

இன்றைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் பாதுகாப்பான நிலையில் உள்ளது. அதனுடைய தலைவருக்கு எதிராக செய்யப்படும் பிரச்சாரங்களினால் இந்த வரலாற்று உண்மைகளை மறைத்துவிட முடியாது. இலங்கையின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியும் கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதியும் பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருப்பதாக இலங்கையின் புதிய அதிபர் ஒப்புக் கொண்ட உண்மை தமிழர் அரசியல் வரலாற்றின் வெற்றியின் விளைவேயாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிக்கிக் கொண்டுள்ள 20,000–த்துக்கு மேற்பட்ட சிங்கள இராணுவ வீரர்கள் இக்கட்டான நிலையில் உள்ளனர். ஒன்று சரணடைய வேண்டும்; அல்லது முற்றிலுமாக அழிந்துபோக வேண்டும் என்பதைத் தவிர வேறு வழி அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. சிங்கள இராணுவத் தளபதிகள் புலிகளுக்கு எதிராக வெளியிடும் அறிக்கைகள் சிங்கள இராணுவ வீரர்களுக்கு ஊக்கமூட்டவில்லை. ஒவ்வொரு நாள் கழியும் போதும் சிங்கள மக்களின் மனோதிடம் குறைந்து கொண்டே இருக்கிறது. வடக்கில் உள்ள தனது படைகளைப் பத்திரமாகத் திரும்ப அழைத்துக்கொள்ள சிங்கள அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டிவரும். விடுதலைப் புலிகளும் இதைத் தான் விரும்புகிறார்கள் என்பது எனது சந்தேகமாகும். யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்களப் படையைச் சூழ்ந்து கொண்டதன் மூலம் சிங்கள அரசை எப்போதும் வெல்லமுடியாத ஒரு சூழ்நிலைக்கு விடுதலைப்புலிகள் தள்ளியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் சிங்கள அரசு என்ன செய்யப் போகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

2. அண்மைக்கால வரலாற்றில் வியட்நாமில் பிரஞ்சு, அமெரிக்கா, தென் வியட்நாமிய படைகளுக்கு எதிராக வியட்நாம் படைகள் பெற்ற வெற்றி பல உண்மைகளைத் தோலுரித்துக் காட்டியிருக்கிறது. ஆனால் வரலாற்று பூர்வமான இந்த உண்மைகளை சிங்கள அரசு உணர்வதற்குத் தவறிவிட்டது.

- பழ. நெடுமாறன் -

www.tamilarangam.net

இந்த உண்மையை உணரத்தவறியதால் தான் சோவியத் அரசு போன்ற பல அரசுகள் தங்கள் முயற்சிகளில் தோல் வியடைந்தன.

*3. இலங்கை அரசுக்கு முன்னால் மூன்று வழிகள் மட்டுமே உள்ளன.*

## அ) இராணுவத் தீர்வு

மூழ்கிக் கொண்டு இருக்கக்கூடிய அரசுகள் உள்நாட்டு – வெளிநாட்டுப் பிரச்சனைகளிலிருந்து மீள்வதற்காக இராணுவத் தீர்வையே நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. மக்களிடையே தேசிய வெறியைத் தூண்டிவிட்டும் அந்த மக்களுக்காகவே போரில் இறங்க வேண்டியுள்ளது என்ற உணர்வை இரா ணுவ வீரர்களுக்கு இடையே தூண்டி விட்டும் பிரச்சனையைத் திசைதிருப்ப இந்த அரசுகள் முயற்சிக்கின்றன. இது உண்மைக்கு முற்றிலும் மாறுபட்டதா கும்.

வடக்கு இலங்கையில் நிலவும் சூழ் நிலையை ஆராய்ந்துபார்த்தால் இந்த உண்மை புரியும். வடக்கே சிக்கிக் கொண்டுள்ள தனது வீரர்களை காப் பாற்றுவதற்காக இலங்கை இராணு வம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் போதுமான அளவு விமான, கடற் படை உதவி இல்லாததால் மேலும் பல படைகள் வடக்கில் துண்டிக்கப் பட்டுவிடும். விடுதலைப்புலிகளின் கட் டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மேலும் சிங்கள இராணுவத்தைக் குவிப்பது மற்றொரு ஸ்டாலின்கிராட்டையே உருவாக்கும். (இரண்டாம் உலகப் போரின் போது ஸ்டாலின்கிராட் நகரை முற்றுகையிட்ட ஜெர்மனியப் படைகள் முற்றிலுமாக சோவியத் படைகளால் அழிக்கப்பட்டன.)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் அடைந்த தோல்வி



உட்பட கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் பார்த்தால் பெருமளவு ஒரு தாக்குத லுக்கோ, அல்லது திட்டமிடப்பட்ட பெரும் போருக்கோ சிங்கள இரா ணுவம் தகுதியற்றது என்பது புலனா கும். கடந்த காலத்தில், விடுதலைப் புலிகள் ஓர் இடத்திலிருந்து கலைந்து சென்று மறுபடியும் குறித்த காலத்தில் குறித்த இடத்தில் குவிந்து திடீர் தாக் குதல்களை நடத்தி பெரும் வெற்றிக ளைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. விடுதலைப்புலிக ளின் உண்மையான பலம் என்பது அதன் எதிரிகளுக்குத் தெரியாது. சிங்கள அரசுக்கு எதிராக அவர்கள் மேற்கொண்டுள்ள போரில் எதிர்பா ராத வழிகளில், திடீர் தாக்குதல்களை நடத்துவதைத் தனது தந்திரமாக விடுதலைப்புலிகள் கொண்டிருக்கின் றனர். விடுதலைப்புலிகளுக்கே உரிய இந்தத் தந்திரத்தை வெல்வதற்கு சிங் கள இராணுவத்தினால் இயலாது, என்ற முடிவுக்கே இராணுவ விமர்சகர் கள் வந்துள்ளனர். எனவே, இந்த நிலைமையில் யாழ்ப்பாணப் பகுதி யில் சிக்கிக் கொண்டுள்ள சிங்கள இராணுவத்தினரின் எதிர்காலம் என் பது சிங்களத் தலைவர்களுக்கு இருக் கக்கூடிய அரசியல் விவேகத்தை பொறுத்ததாகவே அமையும்.

## ஆ) அன்னிய உதவியும் தலையீடும்

இந்தச் சூழ்நிலையில் இலங்கை அர சுக்கு உதவியாக இராணுவத்தை அனுப் பக்கூடிய ஒரு நாடாக இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் இல்லை. குறு கிய பார்வை படைத்த இந்திய அர சியல்வாதிகளுக்கு திருப்தியளிக்கக் கூடிய இந்தத் தவறு ஒரு போதும் நிக ழக்கூடாது. விடுதலைப் புலிகள் இயக் கம் இந்திய அரசினால் உருவாக்கப் பட்டது என்ற உண்மையை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் மறந்து விடக்கூடாது. யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவத்தின் மோசமான சாதனை வருத்தத்துடன் நினைவு கூறப்படவேண்டியதாகும். காஷ்மீரில் பெரும் நடவடிக்கைகளில் ஈடுபட் டுள்ள இந்திய இராணுவம் இலங் கையில் மீண்டும் சிக்கிக் கொள்வது என்பது பற்றி நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. யாரோ ஒருவரின் உள்நாட்டு அரசியல் கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்திய இராணுவத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வியட்நாமிலும், ஆப்கானிஸ்தானிலும், அமெரிக்காவும், சோவியத் நாடும் கற்ற பாடங்களை இந்தியா மறந்து விடக் கூடாது. இந்தியாவும் மற்றும் சில நாடுகளும் ஆயுத தளபாடங்களை சிங்கள அரசுக்கு வழங்கி வருகின்றன. சர்வதேச ஆயுதச் சந்தையிலும் சிங்கள அரசு ஆயுதங்களை கொள் முதல் செய்து வருகிறது. ஆனால், இவ்வளவு ஆயுதங்கள் குவிக்கப்பட்டும் கூட, போரின் முடிவுகள் கொழும்புவிற்கு சாதகமாக இல்லை என்பது நடைமுறை நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன. உற்சாகம் குன்றிப் போயிருக்கும் சிங்கள இராணுவத்திடமிருந்து ஆயுதங்களை புலிகள் பறிக்க மாட்டார்கள் என்பதற்கு யாராவது உத்தரவாதம் கொடுக்க முடியுமா! ஒரு போதும் முடியாது. வெளிநாட்டிலிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்வதின் மூலம் உள்நாட்டில் வளர்ச்சிக்கான திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. இலங்கையின் கடன்களும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. இத்தகைய நிலைமை நீடிக்க நீடிக்க விடுதலைப் புலிகளுக்கு சாதகமாகவே இவை அமையும். விடுதலைப் புலிகளும் இந்த நோக்கத்துடன்தான் செயல்படுகிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

### இ) அமைதித் தீர்வு

ஆயுதங்கள் இறக்குமதியும், வெளிநாகளின் தலையீடும் சிங்கள அரசை இராணுவத் தீர்வின் பக்கம்தான் தள்ளும். எனவே மேற்கண்ட இரண்டையும் மறுப்பதின் மூலமே சிங்கள அரசு புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும்.

இராணுவ ரீதியான குழப்பத்தையும், அரசியல் ரீதியான தடுமாற்றத்தையும் முழுமையாக பயன்படுத்தி விடுதலைப் புலிகள் உள்நாட்டில் ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்துவார்கள். இதைச் சமாளிக்க ஜனாதிபதி சந்திரிகாவினால் இயலாது. துரதிஷ்டவசமாக சிங்கள அரசுக்கு முன்னுள்ள வழிகள் மிகச் சிக்கலேயாகும். இவற்றின் மூலமே அமைதியை ஏற்படுத்த முடியும்.

விடுதலைப் புலிகளுக்குத் தருவதாக சிங்கள அரசு வாக்களித்த சுயாட்சித் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இலங்கையில் உள்ள தமிழர் பகுதிகள் சம்பந்தமாக புதிய கொள்கை அறிவிக்கப்பட்டு சர்வதேச ரீதியில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

இரண்டாவதாக விடுதலைப் புலிகளை இராஜதந்திர ரீதியில் தனிமைப் படுத்துவதற்கு சிங்கள அரசு செய்யும் முயற்சிகளைக் கைவிடவேண்டும்.

மூன்றாவதாக விடுதலைப் புலிகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயலவேண்டும்.

இவ்வாறெல்லாம் செய்தால் போராடுவதற்காகவே உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு அமைதியான வழியில் நிலைமையைச் சமாளிக்க முடிகிறதா என்பதைப் பார்க்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை நாட்டை பாதுகாக்க வேண்டும் என்றால் அதற்குப் போர் வழிமுறை ஆகாது. அமைதி ஒன்றே சிறந்த வழியாகும். இராணுவத் தீர்வை நோக்கிச் செல்வதன் மூலம் இலங்கையின் ஜனநாயகம் பலவீனப் படுத்தப்படும். சிங்கள சமுதாயம் பேரிழப்பிற்கு ஆளாகும்.

இன்னொரு வகையில் சொல்வது என்று சொன்னால், யாழ்ப்பாணப் போரில் தோற்பதின் மூலம் இலங்கையின் மற்றப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இலங்கை அரசு முயற்சிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். சிங்களத் தலைமை இந்த நெருக்கடியில் இருந்து எப்படி மீளப்போகிறது என்பதை காலம்தான் சொல்ல வேண்டும். ★★

## கொழும்பில் வதைபடும் தமிழர்கள்

கொழும்பில் பொலிசார் சந்தேகத்தின் பேரில் பிடிபடுகிற இளைஞர்கள் மேல் குற்றம் எதுவும் பதியாமல், நீதிமன்றில் வழக்கு ஏதும் தாக்கல் செய்யாமல், அவர்களை வெளியில் விடுவதற்காக தாமே ஒரு தொகைப் பணத்தை மிரட்டிக் கேட்கிறார்கள். உயிருக்கு அஞ்சிய இளைஞர்களின் பெற்றோர் பிள்ளைகளை வெளிக் கொண்டுவர தலையை அடகு வைத்தாயினும் பணம் கொடுக்கிறார்கள். இந்த பணப்பறிப்பு இன்று கொழும்பு நகரில் கொடிகட்டிப் பறக்கின்றது.

பொலிசாரின் பார்வை வசதியாக வாழும் தமிழ் வர்த்தகர்கள் மீதும் குறியாக இருக்கின்றது. அநேகமாக அவர்களுடைய பார்வை அவர்கள் பக்கமே திரும்பி இருக்கின்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அடிக்கடி சந்தேகம், விசாரனை என்ற பெயர்களில் அழைத்துச் செல்லப்படும் வர்த்தகர்களை பணவேட்டையின் பின் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள். முன்விரோதம் காரணமாக சித்திரவதைக்கு ஆளாகி கொலைசெய்யப்படுதல், காணமற்போதல் போன்ற மனித விரோத நிகழ்வுகளும் அரங்கேறி வருகின்றன. தமிழர்கள் தம் உத்தரவாதம் அற்ற வாழ்வை எண்ணியபடியே தம் வாழ்வை கொழும்பில் கழித்து வருகிறார்கள்.

www.tamilarangam.net



# மறைக்கப்பட்டதோர் உத்தியோகபூர்வ விஜயம்




சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்திய விஜயம் எதிர்பார்த்தது போன்றே அரசியல் உள்நோக்கம் கொண்டுள்ளது என்பது தற்போது சந்தேகம் எதுவுமின்றி வெளிவந்துள்ளது. இதனை ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்தின் நிகழ்ச்சி நிரலே காட்டுகின்றது. ஜனாதிபதி சந்திரிகாவின் விஜயம் ஓய்வுகால விடுமுறைக்கான விஜயமாகக் கூறப்பட்டாலும், அவர் தனது விஜயத்தின் பெரும் பகுதியை அரசியல் நடவடிக்கைகளிலேயே கழித்துள்ளார். தனது விஜயத்தின் பெரும் பொழுதை இந்தியத் தலைநகர் புது டெல்லியில் கழித்துள்ள அவர், உத்தியோகபூர்வ விஜயத்தின்போது நடத்தப்படும் சந்திப்புக்கள் போன்று இந்தியாவில் அதிகாரத்தைக் கொண்டுள்ள சகலருடனும் சந்திப்புக்களையும் பேச்சுக்களையும் நடத்தியுள்ளார்.

இந்தியாவின் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, பிரதமர் தேவ கௌடா, வெளிவிவகார அமைச்சர் ஐ.கே. குஜ்ரால் உட்பட ஆட்சியுடன் தொடர்புடைய அனைவருடனும் சந்திப்பை ஏற்படுத்தியுள்ளார். விருந்தும் உண்டுள்ளார். இதேசமயம் சந்தித்த தலைவர்கள் அனைவருடனும் இலங்கைப் பிரச்சினையின் இன்றைய நிலை குறித்தும், சிறீலங்கா – இந்திய வர்த்தப் பொருளாதார நிலை குறித்தும் பேசத் தவறவில்லை. ஆனால் இதில் பொருளாதார உறவென்பது சந்திப்பில் பேச்சளவில் மட்டும்தான். இவற்றில் முக்கிய கட்டமாக அமைந்தது இந்தியப் பிரதமர் தேவ கௌடாவிற்கும் சந்திரிகாவிற்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை தொடர்பான அம்சங்கள் ஒரு கூட்டறிக்கை போன்று பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்பட்டதேயாகும். எனவே சிறீலங்கா அரசாங்கம் என்னதான் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்தை தனிப்பட்டது என்று கூறிக்கொண்டாலும், அது ஆழமான அரசியல் நோக்கம் கொண்டது என்பதை அம்பலப்படுத்தியுள்ளது. இந்த வகையில் பார்க்கையில் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயமானது அவசரமாக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகவே கருத இடமுண்டு. இந்த அடிப்படையில் பார்க்கையில் இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பான அரசியல் சூழ்நிலையில் திடீரென மாற்றம் ஒன்று எழுந்திருக்க வேண்டும் என்று கருதுவதற்கு இடமுண்டு. இந்த மாற்றமானது இந்தியாவிலும் திடீரென்று பாதிப்பை விளைவிக்கக்கூடியதாக இருந்திருக்க வேண்டும். ஏனெனின் நீண்டகால இடைவேளையின் பின்னர் இந்தியத் தரப்பு இனப்பிரச்சினை விவகாரத்தில் சற்று வெளிப்படையாக அக்கறை காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் இடைக்கால நிர்வாக சபை குறித்து பிரஸ்தாபித்திருப்பதையும் இனப்பிரச்சினை







விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் தேவகௌடா ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு நடாத்தியமையையும் சுட்டிக்காட்ட முடியும். ஆனால் இந்தியா இவ்விடயத்தில் அக்கறை காட்டத் தொடங்கியமை நீண்டகாலமாக இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நிகழ்வுகளை அவதானித்ததினாலா? அன்றி சந்திரிகா அரசின் அண்மைக்கால வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தினாலா? என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஏனெனில் இந்த இரு விடயங்களிலுமே இந்தியா தனது கவனத்தைத் திசை திருப்புவதற்கு காரணம் உண்டு.

அதாவது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற ரீதியில் சிறீலங்கா அரசு தொடர்ந்து செயற்படும் பட்சத்தில் அது தமிழகத்தில் ஏற்படுத்தக்கூடிய எதிரொலிகளும், தமிழீழத்திலிருந்து தமிழகம் வந்து சேரக்கூடிய அகதிகளால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளும் இன்று இந்தியாவின் கவனம் திரும்புவதற்கு ஒருவகையில் காரணமாக இருக்கலாம். மறுபுறமாக சிறீலங்காவின் அண்மைக்கால வெளிவிவகாரக் கொள்கையில் மேற்குலகில் காட்டப்பட்ட அக்கறை இந்திய மீது காட்டப்படாமை அல்லது கவனிக்கப்படாமை காரணமாக இருக்கலாம். ஆனால் எதுவாக இருப்பினும் சந்திரிகா அரசின் வெளியுறவுக் கொள்கை, இனப்பிரச்சினையில் அதன் அணுகுமுறை என்பனவே சிறீலங்கா ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்கு காரணமாகும். ஆகையினால் இது சிறீலங்கா ஜனாதிபதியின் இந்திய விஜயமே ஒழிய சந்திரிகாவின் தனிப்பட்ட விஜயமல்ல.

('ஈழநாதம்' ஆசிரியர் தலையங்கத்திலிருந்து)

www.tamilarangam.net

# கிட்டம்மா!

தளபதி கேணல் கிட்டு அவர்களின் 4—வது நினைவுகூரலுக்கான பணிகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தபோது, 'கிட்டம்மா நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்' என்ற துயரமான செய்தி கிடைத்தது. இது ஓர் செய்தியா? இதை யார் நம்புவார்கள்? இப்படித்தான் மனது கூச்சலிட்டது. யார் சொன்னாலும் ஈழத் தமிழினத்தின் விடுதலை வரலாற்றின் இறப்பற்ற மனிதர்களில் தன்னையும் ஒருவராக நிலை நிறுத்திக்கொண்ட 'கிட்டம்மா' நம்மிடையே இல்லை என்பதை நம்ப ஏதாவது ஏற்பாடுகள் அறிவுக்குள் இருக்கிறதாவென மீண்டும் மீண்டும் தேடுகின்றேன். உண்மையாக எதுவுமில்லை. "கிட்டம்மா! நீ இறக்கவில்லை. உன்னைப் பதிவு செய்து கொள்ளாவிட்டால் தமிழீழ வரலாற்றுக்கும் பெருமையில்லை. எங்கெல்லாமோ அலை மோதி இந்தத் தகவலை அவரிடமே சேர்க்க முனைகிறது மனம்.

தமிழினத்தின் வரலாற்றில் தாய்க்கு அளிக்கப்படும் மேன்மை எப்பொழுதுமே முதன்மையானது. அதுவே ஆழ்ந்து, அகன்று ஓடும் வேர்கள் போன்றது. இதுவரை இலக்கியம் எட்டித்தொட்ட வீரத்தாய்மார்கள் எண்ணற்றவர்கள். இப்பேற்பட்டவர்களை இலக்கியங்களில் மட்டுந்தான் காண முடியுமென்று ஒரு காலத்தில் நம்பியிருந்தோம். இடைக்கிடை இலக்கியங்களில் புலுடா விட்டிருக்கிறார்கள்! இப்படியும் யாரும் இருப்பார்களா? என்று பேசிக்கொண்டால் நமக்கு நாமே அறிவாளிகளென்று பட்டம் கட்டிக் கொண்டதைப் போல பெருமை கூத்தாடும். ஆனால் நாம் படித்த வீரம் செறிந்த இலக்கியத் தாய்மார்களையெல்லாம் மேவிப் பாய்ந்த தாய்மார்களை தமிழீழ விடுதலைப் போர் ஆரம்பித்த பின்னர் வீட்டுக்கு வீடு சந்திக்க நேர்ந்தது. ஒவ்வொரு வீரத்தாயின் வரலாறு சுடர்ப்பாகத் தெரிந்தது. அத்தகைய பெருமைக்குரிய வீரத்தாய்மார்களின் வரிசையில் கிட்டம்மா ஓர் மகத்தான வடிவம். இலக்கியம் பொய்யா? அல்லது நாம் காண்பது பொய்யா? என்பதை நினைத்துப் பார்க்கின்றேன். 'இலக்கியத்தில் சொல்ல முடிந்த உச்சங்களையெல்லாம் தாண்டி ஈழத்தமிழினம் அப்பாலும் சென்று விட்டது!' இந்த உண்மையை இனியும் நம்ப மறுத்தால் அது மட்டுமே பொய்.

அப்பொழுது எனக்கு சிங்கள அரசென்றும், சிங்களப் பேரினவாதமென்றும் இருப்பதும்; அவர்கள் எம்மை அடிமை கொள்ள முற்பட்டிருக்கிறார்கள் என்பதும் தெரியாத வயது. வீதிகளில் தாறுமாறாக ஓடிக் கொண்டிருப்போம்; வெயிலில் அலைவோம்; மழையில் நனைய ஆசை கொள்வோம். அந்த வேளைகளில், 'டேய்! போங்கடா வீடுகளுக்கு!' என்று எம் போன்ற சிறுவர்களை அதட்டி விரட்டும் ஓர் குரல். இவர் யார்? இவர் ஏன் எங்களை விரட்டுகிறார் என்று கோபப் படுவோம். ஆனாலும் அவரைக் காணும்போது ஏனோ தெரியாது எல்லோருமே மரியாதையாக ஒதுங்கிக் கொள்வோம். பின்னர் சத்தியாக்கிரக காலம் வர சிங்களப் பேரினவாதத்தை மெல்ல அறிந்து கொள்கின்றோம். அப்பொழுது தான் கிட்டம்மா யார்? அவர் திறமையென்ன என்பதை மெல்ல மெல்ல



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





விளங்கிக் கொள்கின்றோம். தான் வாழும் சமூகத்தையும் அங்கு வாழும் பிள்ளைகளையும் தன் பிள்ளைகள் போல நேசிக்கும் ஓர் தாய் கிட்டம்மா என்பதும் துல்லியமாகத் தெரிந்தது.

எப்போதுமே சிரித்தமுகம் !

எல்லோரையும் உரிமையுடன் நோக்குவதால், 'டேய்!' என்று ஒலித்து விட்டே பேசத்தொடங்கும் நேசம். அயலட்டையில் நல்லது கெட்டது ஏதாவது நடந்து விட்டால், சொன்னாலும் சொல்லாவிட்டாலும், 'படார்' என படலையில் ஒரு தட்டு; போய்ப் பார்த்தால் அங்கு புதிய நம்பிக்கையாக நின்று நலம் விசாரிக்கும் குணம். இவைகளே கிட்டம்மா! ஆகையால் தான் மாவீரன் தளபதி கிட்டுவை பத்துமாதம் சுமக்கும் வாய்ப்பை காலம் அவர் கையில் வழங்கியிருந்தது போலும்.

தந்தை செல்வாவின் காலம் வரை தமிழரசுக் கட்சியின் எழுச்சியில் இவரது கணவரோடு இவரின் முகமும் தெரிகிறது. தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி வருகிறது. ஆனால் அவர் அதனுடன் தம்மை உற்சாகமாக இணைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் காலம் ஆரம்பித்த போது அவர் பணி மிகத் தீவிரமடைகிறது. தாய்குலத்திற்குப் புது வலு கொடுப்பது; மாவீரரைப் போற்றுவது போராளிகளைப் பராமரிப்பது என்று உண்ணாமல் உறங்காமல் உழைத்த பெருமைக்குரியவராக வலம் வரத் தொடங்கினார்.

84 காலப்பகுதியென்று நினைக்கின்றேன். சென்ஜோன்ஸ் மருத்துவப் பிரிவில் அதிகமான பாடசாலை மாணவர்கள் முனைப்புடன் ஈடுபட்டிருந்தார்கள். இது போல இயக்கத்திலும் பெருந்தொகையான மாணவர் சேர முன்வந்த காலப்பகுதி. ஆனால் விடுதலைப் புலிகளோ எல்லோரையும் உடனடியாக இணைத்துக்கொள்ள மாட்டார்கள். ஒரு நாள் இரு மாணவர்கள் இயக்கத்தில் சேர உதவும்படி கேட்டு, வந்திருந்தனர். புலோலியிலிருந்தே சைக்கிளில் வந்திருக்கிறார்கள். கையில் புத்தகங்கள். இருவரும் மிகவும் கெட்டித்தனமான மாணவர்கள். பேரினவாதமே அந்த இளம் உள்ளங்களில் நெருப்பு மூட்டக் காரணமாயிருந்ததும் தெரிந்தது. எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்பதாயில்லை. மேற்கொண்டு என்ன செய்வதென்றும் தெரியவில்லை. அவர்களுக்குப் புத்தி கூறும்படி கேட்பதற்காக கிட்டம்மாவின் வீடு நோக்கி அழைத்துச் சென்றேன். உள்ளே போன போது அங்கு வேறொரு அதிர்ச்சி காத்திருந்தது. எவ்வளவு பேர் இருந்தார்களென்று தெரியவில்லை பல பாடசாலை மாணவிகள் இயக்கத்தில் சேர வேண்டும் என்ற துடிப்புடன் அங்கு வந்திருப்பது தெரிந்தது. எல்லோருக்கும் காவலாக கிட்டம்மா. அப்போது என் சக ஆசிரியர் ஒருவர் – அவர் ஒரு தேசப்பற்றாளர் தான் இருந்தும், பாடசாலை மாணவிகள் போராட்டத்தில் இறங்குவதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்திருக்கலாம் என்று நினைக்கின்றேன் – அந்த ஆசிரியர் பெயரைச் சொல்லி 'பாரடா இவன்ர கதையை! பெண்கள் போராடாமல் எப்படியடா விடிவு வரும்....?' என்று என்னிடம் கேட்டார். என்னால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. அங்கு நின்றவர்களில் பலர் எனது மாணவிகள் நான் என்ன பதில் கூறுகின்றேன் என்பதைப் பார்த்தார்கள். அந்த விடுதலைப் பேரெழுச்சியின் முன் என் போன்ற சதாரண மனிதர்களால் என்ன பதில் கூற முடியும்? மௌனமானேன். சொற்ப நாட்களில் தமிழீழத்தில் சுதந்திரப் பறவைகள் அமைப்பு சிறகடித்து பறப்பது தெரிந்தது.

இன்று பெண்புலிகளின் சாதனைகளைக் கேட்டு மெய்சிலிர்க்கும் போதெல்லாம் அதில் கிட்டம்மாவின் முகமும் தெரிகிறது.

இதன் பின் தமிழீழ விடுதலைப் போர் எத்தனையோ விலை மதிப்பற்ற பக்கங்களை எழுதிச் சென்று விட்டது. அந்தப் பக்கங்களில் எல்லாம் கிட்டம்மா ஏதோ ஒரு பணியுடன் நிற்கிறார்; நின்றார். தன் வீரமகனை இழந்து, தலைவர் மார்பில் விழுந்து, அழுது புலம்பிய காட்சிக்குப் பின்பும் அவர் சோர்ந்துவிடவில்லை. வரலாற்றோடு அவர் பணிகளும் கைகோர்த்தே நடந்து சென்றது.

ஈழத் தமிழினத்தை தேர்தல் அரசியல்வாதிகளின் கரங்களில் இருந்து மீட்டெடுத்து. சுதந்திரத் தடத்தில் இறக்கி வைத்த ஆரம்ப காலப் போர்ப் பாத்திரங்களில் வீதிக்கு வந்து; உயிரைத் துச்சமென மதித்து உரிமைக் குரல் கொடுத்த வீரத்தாய் கிட்டம்மா. இந்து மகாசமுத்திரத்தில் தளபதி கேணல் கிட்டுவும், தோழர்களும் தமிழீழக் கரையைத் தொடமுன்பே மாவீரரான போது அவர்களைக் காணாது ஏங்கித் தவித்து ஒரு போராளி, 'கடலம்மா! எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா..? என்று பாடினார். தமிழீழம் மலரும். வெளிநாட்டு வாழ்வை முடித்து தேசம் திரும்பலாம். அப்பொழுது 'கிட்டம்மா' எங்களையும் உன் பிள்ளைகளாக எண்ணி மகிழ்ந்து சிரித்து வரவேற்க நீ இருக்கமாட்டாயா?

உன் பிரிவுச் செய்திக்குப் பின் இங்கிருந்து எமது குரல்கள் தமிழீழத்தை நோக்கி, காற்றின் வழியே பயணிக்கின்றது. ★

**கி. செ. துரை**

www.tamilarangam.net





டென்மார்க்










பிரான்ஸ்





www.tamilarangam.net






கனடா



மத்திய கிழக்கு






நெதர்லான்ட்




# புலம் பெயர்ந்த தமிழீழ மக்களால் கொண்டாடப்பட்ட மாவீரர்நிகழ்வுகள்

www.tamilarangam.net

# ஏதிலிகளாய் ஆன மக்களின் இருள் சூழ்ந்த வாழ்வு!



**திரு. பழ. நெடுமாறன்**
அவர்களுடனான

## நேர்காணல்

நேர்முகம்: **விதுரன்**



**திரு. பழ. நெடுமாறன் அவர்களுடனான சந்திப்பின் போது நாங்கள் தமிழகத்தில் ஏதிலிகளாகச் சென்று வாழும் தமிழீழ மக்களின் நிலைபற்றிக் கேட்டோம். அப்போது அவர் மனம் மிக நொந்தவராகக் காணப்பட்டார். தமிழீழ ஏதிலிகள் தமிழகத்திலேயே துன்புற நேர்ந்தமைக்கான காரணங்களை விளக்கினார். பத்திரிகைகள் எல்லாம் ஏதிலிகள் விடயத்தில் மௌனம் சாதித்துவிட்டதாக குமுறினார். தங்களால் இயன்றதையெல்லாம் ஆற்றியபோதும் அது தாக்கமாக இல்லை என்றும் இந்தப் போக்கை மாற்றி புதிய சரிதம் எழுத தமிழ் மக்கள் நிச்சயம் புறப்படுவார்கள் என்ற நம்பிக்கையையும் அவர் கொண்டிருக்கிறார்.**

**பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுவது, மாவீரர் நாள் விழாக்கள், நீண்ட தொலைதூரப் பிரயாணங்கள் என அவருக்கிருந்த பல வேலைகள், சிரமங்களுக்கு மத்தியில் எம்மோடு ஆழமாகவும், விரிவாகவும் உரையாடினார். களைப்பு, சோர்வுகளுக்கு மத்தியிலும் நீண்டநேர உரையாடலை முடித்துக்கொண்டு பனிப்புகார் நிறைந்த வீதியூடாக குளிரில் மெல்லிய புன்னகையைச் சிந்தியவாறும், கைகளை அசைத்து எம்மிடமிருந்து விடைபெற்றுக்கொண்டார்.**

★ தமிழகத்தில் ஏதிலிகளாக தஞ்சமடைந்தவர்களின் நிலை எப்படியிருக்கிறது.?

தமிழ் நாட்டு அகதி முகாம்களில் இருக்கக்கூடிய தமிழர்களின் நிலை மிக மோசமாகத் தான் இருக்கிறது. 1960–ஆம் ஆண்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான திபெத் அகதிகள் இந்தியாவில் இருக்கிறார்கள். அவர்கள் தனியாக தங்களுக்கென பள்ளிக்கூடங்களை நடத்துகிறார்கள்; மருத்துவமனைகளை நடாத்துகிறார்கள்; மற்றவர்களையெல்லாம் அவர்கள் செய்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது. உலகம் பூராகவும் இருக்கக்கூடிய பல்வேறு நாடுகளில் இருந்து அவர்களுக்கு வரக்கூடிய உதவிகளெல்லாம் அனுமதிக்கப்படுகின்றன, அதைப்போல வங்காள அகதிகள் இந்தியாவில் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். சிந்து மாநிலத்தில் இருந்து ஏராளமான அகதிகள் வந்து இன்னமும் இந்தியாவில் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விதிக்கப்படாத சட்டதிட்டங்கள் ஈழத்தமிழ் அகதிகளுக்கு மட்டும் விதிக்கப்பட்டுள்ளது. அகதி முகாம் என்பது கடுமையான பொலிஸ் காவலுக்குள் உட்பட்டதாக இருக்கிறது.

சொல்லப்போனால் அது சிறையாகவே அகதிகளுக்கு இருந்து வருகிறது. இந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும். கடந்த தடவை அகதிகளையெல்லாம் கட்டாயப்படுத்தி அனுப்பும் முயற்சியிலே தமிழக அரசு ஈடுபட்ட போது நீதிமன்றத்திலே நாங்கள் வழக்கு நடாத்தி அதற்கு தடை வாங்கியதின் பின்னால்தான் கட்டாயப்படுத்தி வெளியேற்றுகிற முயற்சி நிறுத்தப்பட்டது. இதில் சிறப்பு அகதிகள் முகாம் என்ற பெயரிலே உண்மையான சிறைச்சாலைகளையே உருவாக்கியிருக்கிறார்கள். யார் யாரையெல்லாம் போராளிகள் என்று சந்தேகிக்கிறார்களோ அவர்களையெல்லாம் சிறப்பு அகதிகள் முகாமிலே அடைக்கிறார்கள். போர்க்களத்திலே கை, கால்களை இழந்து வந்தவர்களைக் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையெல்லாம் சிறப்பு அகதி முகாம்களிலே வைத்திருக்கிறார்கள். இவையெல்லாம் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகிற செயலாகும். இதையெல்லாம் மனித உரிமைக் கமிஷன் முன்பாகவும் நாங்கள் புகார் செய்திருக்கின்றோம். இந்த நிலைமையில் இருந்து புதிதாக தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற தமிழக அரசு இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அகதிகளாக வந்தவர்களை மனிதாபிமானத்தோடு

www.tamilarangam.net

நடத்த வேண்டும். அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களையெல்லாம் குற்றவாளிகளைப் போல நடாத்துகின்றதை அரசு மாற்றிக் கொள்ள வேண்டும் என நான் வற்புறுத்துகின்றேன்.

ஜெயலலிதாவின் காலப்பகுதியில் தமிழீழத்திலிருந்து ஏதிலியாக வந்த மக்கள் வாழ்ந்த வாழக்கையைத்தான் தற்பொழுதும் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களா?

அதாவது இந்தப் பிரச்சினையில் தலையிட்டு சீர்திருத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தற்போதைய புதிய அரசும் அஞ்சுகிறது. இப்படியெல்லாம் செய்தால் தங்களையும் விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் எனச் சொல்லி விடுவார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்களோ தெரியவில்லை. அப்படியிருந்தால் அது ஒரு தவறான நினைப்பு. அதை மாற்றிக் கொண்டு மனிதாபிமானத்தோடு இந்தக் கொடுமைகளை முற்றிலுமாக களைவதற்குரிய நடவடிக்கைகளை இப்போதைய தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் தமிழீழத்திலிருந்து அகதியாக வந்த மக்கள் சீராக பராமரிக்கப்படவில்லை. அடிப்படை உரிமை, அடிப்படை வசதிகள் கூட அவர்களுக்கு மறுக்கப்பட்டதொரு நிலையை வெற்றி கொள்வதற்கு நீங்கள் எவ்வாறான முன்னெடுப்புக்களை அமைப்பு ரீதியாக மேற்கொள்ளலாம் என எண்ணுகிறீர்கள்?

உலக மனித உரிமை அமைப்புக்களிடம் முறையிடுவதன் மூலம் அவர்களையெல்லாம் அந்தந்த முகாம்களை பார்வையிடச் செய்வதன் மூலம் தான் இந்தப் பிரச்சினையை உலகின் கண்களின் பார்வைக்கு கொண்டு வரமுடியும். அப்படியொரு நிலைமையை ஏற்படுத்தினால் தான் இந்திய அரசும், தமிழக அரசும் தங்களுடைய போக்கை மாற்றிக் கொள்ளுகின்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த முடியும்.

அகதிமுகாம்களின் அவலங்கள் குறித்து நீங்கள் ஏதும் அறிந்திருக்கிறீர்களா?

இந்தியாவிலுள்ள தேசிய மனித உரிமைக் கமிஷனின் பார்வைக்கு இவற்றைக் கொண்டு போனோம். தேசிய உரிமை கமிஷன் தலைவராக இருந்த 'மிஸ்ரா' அவர்கள் சென்னைக்கு வந்து அங்கே வேலூரில் இருந்த சிறப்பு





www.tamilarangam.net

அகதிமுகாமிற்கு அவரே நேரில் போய்ப் பார்த்தார். கை, கால்களை இழந்தவர்களையும், இரண்டு கைகளையும் இழந்து, இரண்டு கண்களையும் இழந்த ஒரு இளைஞன் அந்த முகாமில் இருப்பதைப் பார்த்தார். அவரே அந்த இளைஞனைக் கண்டு மனம் நெகிழ்ந்து போய் 'இவர்களையெல்லாம் எதற்காக இப்படி வைத்திருக்கிறீர்கள்' என கடுமையாக தமிழக அரச அதிகாரிகளைக் கடிந்து கொண்டார்கள். ஆனால் இந்த விடயங்களை தமிழ் நாட்டுப் பத்திரிகை அறவே வெளியிடவே இல்லை. தேசிய மனித உரிமை கமிஷன் தலைவருடைய செய்தியையே இருட்டடிப்பு செய்தார்கள். ஆக, தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலானோருக்கே இப்படியெல்லாம் கொடுமைகள் நடக்கிறதென்ற செய்திகளே போய்க்கிடைப்பதற்கு வழியில்லை. அப்படியொரு சூழ்நிலையை இந்தப் பத்திரிகைகள் ஏற்படுத்தியிருக்கிறது. உதாரணத்துக்கு நம்முடைய நண்பர் சிவநாயகம் இருக்கிறார். அவர் ஒரு பத்திரிகையாளர். அவர் மீது அபாண்டமாக குற்றம் சாட்டி வழக்கைப் போட்டு, தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவரைக் கைதுசெய்து – வேலூருக்கும் சென்னைக்கும் 100 மைல் தூரத்திற்கு அந்த வயதான முதியவரை கையிலும், காலிலும் விலங்கிட்டு கொண்டு வந்தார்கள். ஆனால் சக பத்திரிகையாளர்களுக்கு ஏற்பட்ட இந்த அநீதியைக் கண்டிக்க தமிழ் நாட்டில் எந்தப் பத்திரிகையும் முன் வரவில்லை. சிவநாயகம் போன்றவர்களுக்கே இந்தக் கதியென்றால், இந்தப் பத்திரிகையாளர்களால், சதாரண அகதிகள் பற்றி எவ்வளவு அலட்சியப் போக்குடன் நடந்து கொள்வார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். ஆக இந்தச் செய்திகள் மக்களுக்கு போய் சேராதபடி இந்தப் பத்திரிகைகள் செயல்படுகின்றன. மக்கள் மத்தியில் இந்தச் செய்திகள் போய்ச் சேர்ந்தால் தான் மக்களுக்கு இந்த உண்மை தெரியும்; மக்கள் மத்தியில் இதற்கான நிர்ப்பந்தங்கள் உருவாக்கப்படும். அரசுகளின் போக்கை மாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெறும்.

**இந்த அகதி முகாம் அவலங்களை எப்படி வெளிக்கொணர முயற்சிகளை உங்களால் மேற்கொள்ள முடிந்தது.?**

துண்டறிக்கைகள் வெளியிட்டிருக்கின்றோம். சுவரொட்டிகள் வெளியிட்டிருக்கின்றோம். ஆனாலும் கூட பெரிய 5 கோடி மக்கள் கொண்ட நாட்டில் எங்களுடைய துண்டறிக்கைகள் எத்தனை பேரைப் போய் சேரும்; பத்திரிகைகளில் வந்தால் தானே அது மக்கள் மத்தியில் போய்ச் சேரும்; துரதிஸ்டவசமாக தமிழ் நாட்டுப் பத்திரிகைகளுக்கு இந்தப் பிரச்சினையில் அக்கறையில்லை. சிறு சிறு பத்திரிகைகளில் எல்லாம் புகைப்படங்கள் கூட வெளிவந்திருக்கின்றன.

**தமிழகத் தலைவர்கள் அகதிகள் பிரச்சினையில் எவ்வாறானதொரு உணர்வு நிலையில் செயற்பட்டு வருகிறார்கள்?**

வெளியே சொன்னால் வெட்கக் கேடு. தமிழ் நாட்டிலுள்ள பெரிய கட்சித் தலைவர்கள் யாரும் இந்தப் பிரச்சினையில் மாறாக எந்த நாட்டிலும் இல்லாத புதிய ஆணைகளையெல்லாம் தமிழக அரசியிலில் பொறுப்பு




வகித்தவர்கள் – எந்த அரசாங்கமாய் இருந்தாலும் சரி, கடந்த அரசாங்கமாய் இருந்தாலும் சரி, இந்த அரசாங்கமாய் இருந்தாலும் சரி பிறப்பித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அகதிகளாய் வந்தவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தங்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பித்ததின் விளைவு தமிழீழத்திலிருந்து அகதியாய் வருபவர்களுக்கு வீடு கொடுப்பதை மறுத்து விட்டார்கள்; பொலிஸ் நிலையத்தில் போய்ப் பதிவு செய்ய வேண்டிய நிலைமைக் கஞ்சி அவர்கள் இதையெல்லாம் மறுக்கிறார்கள். இப்படி தேவையில்லாத உத்தரவுகளையெல்லாம் யாரையோ திருப்திப்படுத்துவதற்கு இங்கே பிறப்பிக்கிறார்கள் இது ஒரு தவறான அணுகுமுறை அரசியல் கட்சித் தலைவர்கள் இந்தப்பிரச்சினையில் போதுமான அக்கறையைச் செலுத்தவில்லை. இப்போது தமிழீழத்திலிருந்து அகதிகள் வரத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த அகதிகளை ஏற்றி வருகிற படகுகளை தமிழக அரசு பறிமுதல் செய்கிறது. அதற்கு என்ன காரணம்; எந்தக் காரணமும் இல்லாமல் பறிமுதல் செய்கிறார்கள். உயிர் தப்பி ஓடுபவர்களின் படகுகளை பறிமுதல் செய்தால் அடுத்து உயிர்தப்ப முயல்பவர்கள் எப்படி வரமுடியும்; ஆக அகதிகள் மேலும் வரவிடாமல் தடுக்க வேண்டும் என்பதுதான் இந்த உத்தரவுகளுக்கு அடிப்படையாக இருக்கிறது. அதாவது, அப்படி வருபவர்களை கடுமையான சோதனை செய்ய வேண்டும்; விடுதலைப்புலிகள் யாரும் ஊடுருவி விடாமல் தடுப்போம் என்று அரசாங்கத்தின் சார்பில் அறிவிக்கப்படுகிறது. விடுதலைப்புலிகள் போர்களத்தில் எதிரியை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கும் போது அதை விட்டு தமிழ் நாட்டுக்கு ஓடி வர வேண்டிய அவசியமில்லை. அவர்கள் போர்க்களத்தில் இருந்து ஓடுகின்ற குணம் படைத்தவர்களுமல்ல; இந்த உண்மையைக் கூட புரிந்து கொள்ளாமல் அகதிகளை கடுமையான சோதனைக்கு ஆளாக்கி அதிலே இளைஞர்களாக, யுவதிகளாக இருப்பவர்களையெல்லாம் பிடித்து அவர்களை தனி சிறப்பு முகாம்களிலே கொண்டு போய் அடைத்து 'விடுதலைப்புலியா' என்று அவர்களையெல்லாம் நன்கு விசாரனை நடத்தியதன் பிறகுதான் நாங்கள் அனுமதிப்போம் என்று சொல்லி அவர்களை மேலும் பல கொடுமைகளுக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அகதிகளாக ஓடி வருபவர்களையெல்லாம் இப்படியெல்லாம் நீங்கள் செய்வதற்கு தொடங்கினால் இதற்குப் பெயரென்ன? இது தமிழ் உணர்வற்ற செயல் மட்டுமல்ல; மனிதாபிமானமற்ற செயலும் கூட. இந்தப் போக்கை தமிழக அரசு அடியோடு மாற்றிக் கொள்ள வேண்டும்.

**தமிழக மக்களோடு உறவு நிலை எப்படியிருக்கிறது?**

உறவு நிலைக்கு வழியில்லாதவாறு பொலிஸ் தடுக்கிறது. அகதி முகாம்களைச்சுற்றி பொலிஸ் இருக்கிறது. வெளியே இருக்கக்கூடிய மக்கள் அகதி முகாம்களுக்குள்ளே செல்ல முடியாது. உள்ளே இருக்கக்கூடிய அகதிகள் வெளியே வரமுடியாது; பொலிசாரின் அனுமதியோடு தான் வர வேண்டும். இப்படி பொலிசாரை வைத்து உள்ளூர் மக்களையும் பிரித்து விடுகிறார்கள்.

**அகதிமுகாம்களில் மக்களின் வாழ்வியல் மேம்பாடடைவதற்கான வழிகள் உண்டா?**

எதுவுமே கிடையாது. சிறைமுகாம் வாழ்க்கை தான்.....

www.tamilarangam.net


# வன்னி மண்ணில் எனது கால்கள்....

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

வாய்க்காலில் வந்து விழுந்து
வழிந்தோடிப் பாய்கின்ற இரணைமடுக்
குளநீரில் சிலநாள் குளித்தேன் - தென்னை
இளநீரும் மனம்போலக் குடித்தேன்!
மானோடு மரைபன்றி மனமள்ளும்
தேனோடு தயிர்தின்றேன் சிலநாள்!

அப்பப்பா என்ன அழகவை...?
அலுக்குமோ வன்னி நிலமது?
அப்பப்பா விதைத்த வயல்வெளியில்...
அந்நியர் வருவதை விடுவதோ? - இல்லை
முல்லையும் மருதமும் நெய்தலும்
எல்லையெனக் கொண்டமண்ணை
நாம்விடோம்!

கற்சிலை மடுவில் கணநேரம் நின்று
காவியவீரன் ஒருவனைக்
கண்களில் இருத்திக் கொண்டேன்!
பொற்பதியாம் வன்னி மண்ணில்
அவன் பதித்த கால் தடங்கள்...
அழியாத கோலமாய் நிற்கக் கண்டேன்!

ஆகா! பண்டார வன்னியா!
போர்முரசு கொட்டி நீபுரிந்த - அந்தக்
கார்காலக் கனவுகளை
எம்தலைவன்....
கட்டாயம் நனவாக்குவான்; காத்திரு!

வாளெடுத்து அவன்வீசி நடந்துசென்ற
வாய்க்காலின் கரையெங்கும் நான்நடந்தேன்!

நாயாற்றுப் பாலத்தில் நிமிர்ந்து நின்று
நம்மரிய எல்லைமண்ணைப் பார்த்தேன்;
பேய்களுடன் போரிடும் புலிவீரர்கள்...
பாய்ந்து செல்லும் கானகத்து வளங்கண்டு
கணப் பொழுது பெருமை கொண்டேன்!

அலம்பில் காடுகளில் மாலை வேளையிலே...
குலுங்கும் கிளைகளில் அமர்ந்திருந்து...
சுதந்திரமாய்ப் பாடுகின்ற பறவைகளின்
இதந்தரும் இனிய பாடல் கேட்டேன்!
ஆகா! இங்குதானா என்தலைவன் - அன்று
இந்தியாவை எதிர்த்துநின்று சமர்புரிந்தான்?

கனிசொரியும் மணலாற்றுக் காடுகளே!
காவிய வீரனைக் காத்துத் தந்த....
இனிமைதரும் எம்மெல்லைக் கோடுகளே!
பொறுமையுடன் நீங்கள் புரிந்த
அருமைச் செயல்கண்டு; நேரில்லன்று
நன்றியினைச் சொல்கின்றேன்; நன்றி!
நன்றி!!

அழகுச் சேலைகட்டி.... இயற்கைமகள்...
அணிகலன்கள் பலபூட்டி நடந்துசெல்லும்
செழுமைதரும் செம்மலையின் மேகங்களே!
எழுதவரும் இனியகவி கோடி..... கோடி.....
எழுந்துவரும் எம்மினிய வன்னிமண்ணே!
ஒருபோதும் நானுன்னை மறவேன்; நன்றி!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வதேச அரசியல் சர்ச்சைகளில் சுயநிர்ணய உரிமை



தேசிய வாதமும், தேசிய அரசுகளும் சர்வதேச அரசியலில் நிர்ணயங்களாகிய போது, சுயநிர்ணய உரிமையும் பிரபலமடைவது தவிர்க்க முடியாததாயிற்று. தேசியவாதத்தை நியாயப்படுத்தவும், தேசிய அரசுகளை பலப்படுத்துவதும் சுயநிர்ணய உரிமை கைகொடுத்துதவியது. இருப்பினும், பிரதியனுகூலமான பல காரணிகளினால் சுயநிர்ணயம் என்பது விஞ்ஞான ரீதியான ஒரு கோட்பாடாகவோ அல்லது காத்திரமான உரிமையாகவோ வளர்ச்சி பெற முடியவில்லை. சுயநிர்ணயம் பற்றிய கருத்துக்களிலும், செயல்முறையம்சங்களிலும் பல முரண்பாடுகளும், மர்மங்களும் மிகுந்து காணப்படுகின்றன. மாறிவரும் சர்வதேச அரசியல் நிலைமைகளும் அதைப் பாதிக்கத் தவறவில்லை. இக்கட்டுரையானது, சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்துக்களையும், சர்வதேச அரசியல் சர்ச்சைகளில் சுயநிர்ணய உரிமை தொடர்பான மையமாக விளங்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளையும் ஒருங்கே பகுப்பாய்வு செய்ய முற்படுகின்றது. இத்தகைய கோட்பாட்டும் நடைமுறையும் கலந்த சர்வதேச ரீதியிலான ஓர் அணுகுமுறையே சுயநிர்ணய உரிமைபற்றிய தாரதம்மியங்களைத் துலக்க வல்லதாகும்.

சுயநிர்ணய உரிமைக்கு நீண்டதும், கீர்த்திமிக்கதுமான வரலாறு உண்டு. அமெரிக்க (1776), பிரான்சிய (1789), ருஷ்ய (1917) புரட்சிகளினால் ஊட்டம் பெற்றும், தேசியவாத இயக்கங்கள் பலவற்றின் சுலோகமாகியும், ஜனநாயக அடிப்படையில் அரசுகளின் உருவாக்கத்துக்கும், பிரதேசத் தீர்வுகளுக்கும் ஊடகமாகியும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்டும் சுயநிர்ணய உரிமை சர்வதேச முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதன் அம்சங்கள் சர்வதேச ரீதியிலான பிரகடனங்களிலும், சாசனங்களிலும், சட்டங்களிலும் வியாபித்துக் காணப்படுகின்றன. இவற்றிற்குப் பல்வேறு வகைப்பட்ட விளக்கங்களும், விமர்சனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**கலாநிதி வே. மணிவாசகர்**
சிரேஷ்ட அரசறிவியல் விரிவுரையாளர், பொருளியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்

உலகப்படத்தை மாற்றியமைத்து இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுப் போக்கைச் சுயநிர்ணய உரிமை பாதித்திருப்பதைக் காணலாம். இவ்வுரிமை மூலம் போலந்து சுதந்திர நாடாகியது. செக், சுலோவாக்ஸ் என்பவை அவுஸ்திரியாவின் அடக்குமுறையிலிருந்து விடுபட்டு செக்கோசிலோவாக்கியா என்ற புது நாடாகின. மேற்கு சுலோவ், சோவ்ஸ், கிறீற், சொலொவீன் போன்றவை அவுஸ்திரிய, ஹங்கேரிய ஆதிக்கங்களிலிருந்து விடுபட்டு யூகோஸ்லாவியா என்ற புதிய நாடு தோன்றியது. பிரான்ஸ் அல்சேஸ் லொறேன் மாகாணத்தைப் பெற்றது. வடக்கு செல்ஸ்விக் டென்மார்க்குக்குக் கையளிக்கப்பட்டது. பலஸ்தீனம், சிரியா, மொசபத்தேமியா, கெயாஸ் போன்றவை துருக்கிய சாம்ராச்சியத்திலிருந்து விடுதலை பெற்றன. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து தனி நாடாகியது. ஏராளமான ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெறவும் முடிந்தது.

ஆரம்பங்களில் தேசங்களுடன் மட்டும் கட்டுண்டு காணப்பட்ட சுயநிர்ணய உரிமை, பின்னர் தேசிய இனங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இன்று சுயநிர்ணய உரிமை என்பது குடியேற்றவாதம், நிறவாதம் போன்றவற்றின் ஒழிப்பு, சமத்துவமான இறைமை கொண்ட அரசுகள், தலையிடாக் கொள்கை, ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் போன்ற பல்வேறு அம்சங்களுடன் பின்னிப் பிணைந்துள்ளன. சிக்கலான 'சுயநிர்ணயம்' என்னும் பதத்தைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் வரையறுப்பின், ஒவ்வோர் தேசிய அரசும் அல்லது ஒவ்வோர் தேசிய இனமும் சுதந்திரமாகவும் சுயமாகவும் தனது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் ஓர் உரிமை எனலாம். மக்களின் "விருப்பு", "சம்மதம்" என்ற இரண்டும் சுயநிர்ணய உரிமையைத் தாங்கி நிற்கும் இரு தூண்கள் எனலாம். ஏனெனில் மக்களின் விருப்பு இன்றி, சுயநிர்ணயம் என்பது ஓர் உரிமையாகத் தோன்றமுடியாது. அதுபோல்,

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மக்களின் சம்மதம் இன்றியும் அது நடைமுறையாக முடியாது. சுயநிர்ணய உரிமை பின்வரும் மூன்று வழிகளில் பூரணத்துவம் பெறுகிறது.

1) நிலைத்திருக்கும் உரிமை (Right to Exist): இவ்வுரிமையானது, ஒவ்வோர் அரசும் அநாவசியமான வெளித் தலையீடுகள் இன்றி சுதந்திரத்துடனும், இறைமையுடனும் நிலைத்திருக்க வழிசெய்கிறது.

2) அபிவிருத்தி செய்யும் உரிமை (Right to Develop): இவ்வுரிமையானது, ஓர் அரசு தனது சமூக, பொருளாதார, அரசியல் ஒழுங்குகளையும், கலை, இலக்கியம், கலாச்சாரம் போன்றவற்றையும் அபிவிருத்தி செய்யவும், கருத்து வெளிப்பாட்டுக்கான ஓர் ஊடகமாக எந்த ஒரு மொழியையும் பின்பற்றவும் அதிகாரம் அளிக்கிறது.

3) பாதுகாக்கும் உரிமை (Right to Preserve): இவ்வுரிமையானது, ஓர் அரசுக்குத் தான் மேலாக மதிக்கின்ற மரபுகள், பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் உரிமையை வழங்குகின்றது.

சுயநிர்ணய உரிமை என்பதை ஜனநாயக அரசாங்க முறையுடன் இணைத்து, விரிவுபடுத்தி விளக்கும் போக்கையும் அவதானிக்க முடிகிறது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அமெரிக்கப் பிரதிநிதியொருவர் ஜனநாயகப் பண்புகளுக்கு அழுத்தம் கொடுத்து விளக்கும் போது, "சுயநிர்ணய உரிமை என்பது எந்த அரசாங்கத்துக்கு தமது ஆதரவை நல்கவேண்டும்; எத்தகைய வடிவை அரசாங்கம் எடுக்க வேண்டும்? யார் அரசாங்கத்துக்கு தலைமை தாங்கவேண்டும் என்பவற்றைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதற்கு மக்களுக்குள்ள உரிமையாகும்" என்றார். சுயநிர்ணய உரிமையில்லாமல் ஜனநாயகமும், ஜனநாயகம் இல்லாமல் சுயநிர்ணய உரிமையும் நிலைபெற முடியாது என்று சொல்லப்படுகிறது. சுயநிர்ணய உரிமை மக்களுக்கு வழங்கும் சுதந்திரமும், சமூகத்தின் பிரசைகளிடையே ஏற்படுத்தும் சமத்துவமும், சௌஜன்யமும், அதன் மூலம் உருவாகும் தேசிய ஐக்கியமும், ஒருமைப்பாடும் ஓர் அரசினை ஸ்திரப்படுத்தி, வெளித்தலையீடுகள் இன்றி இறைமையுடன் இயங்க வழி செய்யும் ஜனநாயக அமைப்புக்களும் வழிமுறைகளும் இல்லாதபட்சத்தில் சுயநிர்ணய உரிமையின் வெளிப்பாட்டுக்கும் செயற்பாட்டுக்கும் இடம் இல்லாமல் போய் விடுவதாக விவாதிக்கப்படுகிறது.

சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்துக்களின் முன்னோடியாகக் கடந்த நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த தாரைண்மைவாத அறிஞரான J.S. மில் என்பவரைக் குறிப்பிடலாம். 'ஒரு தேசிய இனம்; ஒரு தேசியஅரசு' (One Nationality; One Nation) என்ற கருத்தை முன்வைத்த மில், தேசிய உணர்வால் பிணைக்கப்பட்ட ஒவ்வொரு தேசிய இனமும் ஒவ்வொரு தேசிய அரசாக அமைய வேண்டும் என்றார்.

'மக்கள் இறைமை' என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே மில் சுயநிர்ணய உரிமையை விளக்கினார் ஜனநாயகத்தின் உயிரோட்டமாக அவர் சுயநிர்ணய உரிமையைக் கண்டார்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் காற்பகுதிகளில் முதலாளித்துவவாதிகளும், மார்க்சிஸவாதிகளும் சுயநிர்ணய உரிமை பற்றி அதிகம் பேசலாயினர். வூட்றோ வில்சன் முற்கூறிய பிரிவையும், லெனின் பிற்கூறிய பிரிவையும் பிரதிநிதித்துவம் செய்தவர்களில் முக்கியமானவர்கள். வில்சன் சுயநிர்ணய உரிமைக்குச் சாதககமாகவே குரல் கொடுத்தமைக்கு முக்கிய காரணம், முதலாம் உலகப் போரினால் தேசிய எல்லைகள் பாதிப்புற்ற ஐரோப்பாவில் முதலாளித்துவ நலன்களுக்குச் சார்பாகச் சுமுகமான பிரதேசத் தீர்வுகளை ஏற்படுத்துவதற்கேயாகும். லெனின் சுயநிர்ணய உரிமையின் பக்கம் திரும்பியமைக்கு முக்கிய காரணம், பல தேசிய இனங்கள் கொண்ட சோவியத் சமஷ்டியின் ஸ்திரத்தைப் பேணவும், முதலாளித்துவ ஏகாதிபத்தியங்களிற்கு எதிராகத் தேசியவாதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த குடியேற்ற நாடுகளில் சோவியத் யூனியனுக்கும், சோசலிசக் கோட்பாடுகளிற்கும் செல்வாக்குத் தேடிக்கொள்ளவுமேயாகும்.

முதலாம் உலக மகாயுத்தம் முடிந்தபின் பாரிஸ் சமாதான மாநாட்டிற்கு (1919) 14 அம்ச சமாதானத் திட்டத்துடன் வருகை தந்த அமெரிக்க ஜனாதிபதி வில்சன், சுயநிர்ணய உரிமையின் காவலர் போலப் பேச்சிலும் செயலிலும் காணப்பட்டார். அவர் மகாநாட்டில் உரையாற்றும் போது, "..... மக்களும், மாகாணங்களும், விளையாட்டில் பாவிக்கப்படும் அற்பமான பொருட்கள் போலக் கருதி இறைமையிலிருந்து புறக்கணிக்கப்படக்கூடாது. போர் சம்பந்தமான எந்த ஒரு பிரதேசத் தீர்வும் அப்பிரதேச மக்களின் விருப்பங்களையும் நலன்களையும் கருத்தில் கொண்டதாக அமைய வேண்

## 'வயதெல்லை எதுவுமே பார்க்கப்படாது நாட்டைக் காக்க உடனே வருக'

சிறிலங்கா இராணுவத்தினரின் ஆட்சேர்ப்பு வயதெல்லையை 14 ஆகக் குறைப்பதற்கு அரசாங்கத்திடம் இராணுவம் ஆலோசனை ஒன்றை முன்வைத்துள்ளதாக கொழும்பில் ' மிட் வீக் மிரர்' எனும் ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது. தற்போது இராணுவத்தில் நிலவும் பற்றாக் குறையே இப்புதிய வயதெல்லைக் குறைப்புக்கான காரணம். இராணுவத்தினருக்கு மேலும் 70.000 பேர் தேவை என இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஆட்சேர்ப்பு புதிய நெருக்கடியைக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பல பகிரத முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்றும், பல வகையான கவர்ச்சிகரமான விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன என்றும், கவர்ச்சிகரமான சம்பளத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன என்றும் குறிப்பிட்டிருந்தோம். தற்போது புதிய பல யுக்திகளைக் கையாண்டு வருவதாக அறிகின்றோம். அந்த வகையில் ஒரு பெண் இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் நந்தசில கடந்த ஞாயிறன்று தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியின் போது, 'அரசு எதிர்நோக்கியுள்ள பிரச்சினை காரணமாக ஒவ்வொரு தாய்மாரும் தங்கள் பிள்ளைகளை இராணுவத்துக்கு அனுப்ப முன் வர வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டுள்ளாராம்.

சிங்களத் தாய்மார்கள் ஏற்கனவே தங்களின் பிள்ளைகளை போர்முனைகளுக்கு அனுப்பி அநியாயமாகச் சாகக்கொடுக்கின்றோம் என்ற அழுகைக்கு எதுவித பதிலும் இல்லாமல் அழுது துயருற்றிருக்கும் தாய்மார்களின் உளத்தை மேலும் காயப்படுத்துவதாக நந்தசீலவின் வேண்டுகோள் அமைந்திருந்ததாக கூறி கவலைப்பட்டுக் கொண்டார்களாம். மக்களின் கருத்தை மதியாது கால்களில் போட்டு மிதிக்கும் நிலையிலேயே சந்திரிகா அரசு இருக்கின்றது.

www.tamilarangam.net

டும்” என்றார். வில்சனின் கருத்து சுய நிர்ணய உரிமை தொடர்பாக முதலாளித்துவ நாடுகளின் நிலைப்பாட்டு மாற்றத்தை வெளிக்காட்டத் தவற வில்லை. ஏனெனில் சுயநிர்ணய உரி மையடிப்படையிலான ஆபிரிக்க நாடு களின் எழுச்சியின் ஒரு கட்டத்தில், முதலாளித்துவ நாடுகளின் கருத்தைப் பிரதிநிதித்துவம் செய்தவராகக் கணிக் கப்பட்ட நீற்ச்சே என்பவர், “வழமை யான போர்முறைகளை காட்டுவாசிக ளுக்கு எதிரான போரில் பயன்படுத்து வது மிகவும் கேலிக்குரியது. நீக்கிரோ வாசிகளின் வீடுகளைச் சுட்டெரித்து அவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும். இது ஒன்றே காத்திரமான தீர்வாகும்” என்று கூறியமை கவனிக் கத்தக்கது.

இருப்பினும் வில்சனுடைய வேடம் விரைவில் கலையலாயிற்று. தனது மகாநாட்டு உரையை பின்னர் விளக் கும் போது, “போரில் தோற்கடிக்கப் பட்ட சாம்ராச்சியங்களின் பிரதேசங் களைச் சேர்ந்த மக்கள் தவிர்ந்த ஏனை யோருக்கு சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க மகாநாட்டிற்கு அதிகாரம் கிடையாது” என்று கூறி, பின்வாங்கி விட்டார். வில்சனின் ஜனாதிபதிக் காலத்திலேயே அவரது இராஜாங்கக் காரியதரிசியான லான்சின், சுயநிர் ணய உரிமையை “நடைமுறைப்படுத்த முடியாதது” என்றும் “ஆபத்தானது” என்றும் வர்ணித்துவிட்டார். பாரிஸ் சமாதான மகாநாட்டின் பின் உருவான சர்வதேசச் சங்கமும் சுயநிர்ணய உரிமை தொடர்பாக தீர்க்கமான விதிக ளையோ செயல் முறைகளையோ கொண்டிருக்கவில்லை.

வில்சனைப் போலவே லெனினும் சுயநிர்ணய உரிமை தொடர்பாக இராஜ தந்திர நிலைப்பாட்டைக் கொண்டி ருந்த போதிலும், லெனினின் கருத்துக் கள் வில்சனின் கருத்துக்களை விட ஆழமானவையாகவும் முற்போக்கான வையாகவும் காணப்படுகின்றன. மார்க் சுசின் நோக்கும் போக்கும் சர்வ தேசத்தையே அடிப்படையாகக் கொண் டிருந்தது. கவுற்ஸ்கி தேசியவாத இயக் கங்களின் முதலாளித்துவ வளர்ச்சி யுடனேயே அடையாளப்படுத்தினார். றோஸா லக்ஸம்பேர்க், சர்வதேச தனி உரிமை முதலாளித்துவத்தின் எழுச்சி யானது சகல தேசியக்குழுக்களையும் அர்த்தமற்றதாக்கிவிட்டதாகக் கருதி னார். ஆனால், லெனின் தேசத்தை யும் வர்க்கத்தையும் உருவாக்கும் சக்தி களை இணைக்க விரும்பினார்.



லெனினின் இயக்க வியல் அணுகுமுறையானது சுயநிர்ணய உரிமையை சமூக – வரலாற்றுக் கட்டுமானங்களுக்கு உட்பட்டதாகவே கண்டது. தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் முதலா ளித்துவத்தைத் தோற்கடிப்பதற்கான ஓர் ஆயுதமாகவே அவர் சுயநிர்ணய உரிமையை பயன்படுத்த விரும்பினார். போல்சிவிக் அவர்கள் சிறிய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக கூட தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டுமென அவர் கேட் டுக்கொண்டார். பாட்டாளி சர்வதே சியத்தை விட அவர் சுயநிர்ணய உரி மைக்கு முக்கியத்துவம் வழங்கி எழுதி யுள்ளார். சுயநிர்ணயம், சர்வதேசியம், ஜனநாயகம், மத்தியவாக்கம் என்பவற் றையெல்லாம் தத்ரூபமாக ஒரே கோட் டில் இணைத்து பின்வருமாறு லெனின் கூறுகிறார்.

“நாங்கள் சுயநிர்ணயத்துக்கான சுதந் திரத்தை, அதாவது ஒடுக்கப்பட்ட நாடு களுக்கு பிரிந்து செல்லும் உரிமையை வேண்டுகிறோம். அதன்மூலம் நாம் பொருளாதார சீரழிவை கனவுகாண வில்லை. அல்லது சிறிய அரசுகள் என்ற இலட்சியத்தை நாம் அணைத்துக் கொள்ளவும் இல்லை. மாறாக, நெருக் கமான ஐக்கியத்தை யும், இணைப்பையும் கொண்டதும் ஆனால், உண்மையான ஜனநாயகத் தையும் உண்மையான சர்வ தேசியத்தையும் அடிப்படையா கக் கொண்டதுமான பெரிய அரசு ஒன்றுக்கு நாம் சார்பானவர்கள். பிரிந்து செல்லும் சுதந்திரம் இல்லா மல் அது நினைத்துப்பார்க்க முடியாத ஒன்றாகும்.”

பிரிந்து செல்லும் உரிமை வரை சென்று லெனின் சுயநிர்ணய உரி மையை ஆதரித்தார். இருந்த போதும், சோவியத் சமஷ்டியின் குடியரசுக ளுக்கு பிரிந்துசெல்லும் உரிமை மறுக் கப்பட்டே வந்தது. அதன் விளைவாக இன்று சோவியத் யூனியன் பல கூறு களாக உடைந்துள்ளதையும் காண்கி றோம். அத்துடன் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான போராட்டங்க ளுக்கு சோவியத் யூனியன் வழங்கி வந்த ஆதரவும் படிப்படியாகக் குறைந்து வந்து இன்று பூச்சியமாகி உள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தோன் றிய சில சுயநிர்ணயப் போராட்டங் களை சோவியத் யூனியன் இராணுவ பலத்தால் நசுக்கிய வரலாறும் உண்டு.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் தோன்றிய ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் சுயநிர்ணயம் பற்றிய செயற்பாட்டுச் சிக்கல்களின் களமாக இருந்துவந்துள்ளது. இருப்பினும் சர்வதேச சங்கம் போலன்றி, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சுயநிர்ணய உரிமைக்கு உகந்த இடம் வழங்கியது. அதன் சாசனத்தில் இரு தடவைகள் இவ் உரிமை பற்றி கூறப்பட்டுள்ளது. (பிரிவு 1 (2), பிரிவு 55). இவ்வம்சங்கள் தொடர்பாக இரு வகைப்பட்ட விளக்கங்கள் உண்டு. பழமைவாதிகள் இவற்றை இறைமையுள்ள சமத்துவமான அரசுகள் பற்றிய ஒரு விளக்கம் மட்டுமே என்கின்றனர். ஆனால், முற்போக்குவாதிகள் அவற்றை மக்களின் விருப்பத்துடன் பிரதேச ரீதியிலான மாற்றங்களை செய்வதற்கான நிச்சயமான உரிமையாக கருதுகின்றனர்.

சுயநிர்ணயம் பற்றிய இத்தகைய தெளிவற்ற விளக்கங்களையும், திட்டவட்டமற்ற செயற்பாட்டு முறைகளையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு குடியேற்ற நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை மேற்குலக ஏகாதிபத்தியங்கள் நிராகரித்தே வந்தன. ஆனால், ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச்சபையில் பெரும்பான்மைப் பலம் பெற்றபோது, சுயநிர்ணய உரிமை தொடர்பாக சில முற்போக்கான நடவடிக்கைகள் அறிமுகமாகின. இந்நாடுகளின் தொடர்ச்சியான கூட்டுமுயற்சியிகளினால் ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் குடியேற்றவாதத்தை சகல வழிகளிலும் சட்டரீதியற்றது என்று பிரகடனம் செய்தது. மேலும், 1960ல் குடியேற்ற நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவது பற்றிய ஐக்கியநாடுகள் பிரகடனம் {The United Nation Declaration on the Granting of Independance to Colonial Countries and People - Genaral assembly resolution), 14, 14 (XV)} ஆசிய, ஆபிரிக்க கண்டங்களின் எஞ்சியிருந்த குடியேற்றவாதத்துக்கும் சாவுமணியாயிற்று. அன்றியும் தயாரிப்பு நடவடிக்கைகளின் தாமதங்கள் சுயநிர்ணய உரிமையை செயற்படுத்தாமல் இருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கக் கூடாது என்றும் பிரகடனம் வலியுறுத்துகிறது. இதன்மூலம் குடியேற்ற நாடுகள் அரசியல் முதிர்ச்சியும், நாகரிகமும் அடையும் வரை சுதந்திரத்தைப் பின்போடவேண்டும் என்று ஏகாதிபத்திய வாதம் வலுவிழந்து போயிற்று.

# புலிகள் செயற்படாவிட்டால் தமிழினம் புதருக்குள் மறைந்திருக்கும்

"புலிகள் செயற்படாவிட்டால் இதுவரை தமிழினம் முழுவதும் புதருக்குள்தான் மறைந்திருக்கும். தமிழினத்திற்கு எதிராக சிங்களப் பேரினவாதிகள் ஒன்றுசேர்ந்து போராடுவதை கண்கூடாக காண்கின்றோம். இதற்கு எதிராக தமிழினத்தின் சார்பில் போராடுபவர்களை தமிழினம் மனத்தால் வாழ்த்துகிறது. அவர்களின் தியாகத்தை ஏற்று தமிழினம் தலை வணங்க வேண்டியுள்ளது.

தமிழினத்தின் தலைகள் மீது இன்று குண்டுகள் வீசப்படுகின்றன. அவர்கள் போகும் இடம் எல்லாம் செல்கள் ஏவப்படுகின்றன. இருப்பிட வசதியின்றி, அடிப்படை வசதிகளின்றி தமிழ் இனம் காடுகளிலும், வீதிகளிலும் அலைந்து கொண்டிருக்கின்றது. உணவு வசதி, மருத்துவ வசதியின்றி மரணத்தை இவர்கள் எதிர்நோக்குகின்றனர். இந்த நிலையை எமது மக்களுக்கு ஏற்படுத்தி விட்டு வெற்றி விழாக் கொண்டாடுகின்றனர் அரசாங்கத்தினர். ஐக்கிய இலங்கைக்குள் என்ற நிலைப்பாட்டிலிருந்து தமிழினம் தூரச்சென்றுள்ளது. இன்று தமிழினத்தின் நிலைப்பாடு தனித்துவத்தை பேணிப் பாதுக்காக்க வேண்டும் என்பதாகும்.

(குமார் பொன்னம்பலம் அவர்கள் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் இருந்து)

சுயநிர்ணய உரிமையானது பிரிந்து செல்லும் உரிமையை உள்ளடக்குகின்றதா அல்லது இல்லையா என்பது பற்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிலைப்பாடு தெளிவாக இல்லை. ஐக்கிய நாடுகள் சாசனம் பிரிந்து செல்லும் உரிமையை மறுத்து உறுப்பு நாடுகளின் சுதந்திரத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் ஆதரிக்கிறது. அதுபோல் குடியேற்ற நாடுகளுக்கும், மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவது பற்றிய ஐக்கிய நாடுகளின் பிரகடனம் பகுதி ரீதியாக அல்லது முழு அளவில் ஒரு நாட்டின் தேசிய ஐக்கியத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்கும் நோக்கிலான எந்தவொரு நடவடிக்கையையும் கண்டிக்கிறது. இது தொடர்பாக அளிக்கப்பட்ட விளக்கங்களின்படி ஒரு குடியேற்ற நாடு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் விடுதலை அடைந்தபின் அதன் பிரதேசம் ஒன்று அவ்வுரிமையை மீண்டும் பிரயோகித்து பிரிந்துகொள்ள முடியாது என்பதாகும்.

ஆனால், ஐக்கிய நாடுகளின் நட்புறவு தொடர்பான சர்வதேச சட்டத் தத்துவங்கள் பற்றிய பிரகடனத்தின் (Declaration on the Principles of International Law Concerning Friendly Relations of 1970) "சமத்துவ உரிமையும் மக்களின் சுயநிர்ணயமும் (Equal Rights and Self - Determination of peoples) என்ற அத்தியாயத்தின் ஏழாம் பந்தியில் சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாட்டின் மக்கள் பிரிவொன்றிற்கும் சுயநிர்ணய உரிமை பிரயோகிக்கப்பட முடியும் என்றும், அரசாங்கங்கள் மக்களைப் பூரணமாகப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது. பிரகடனத்தின் வாசகம் ஒன்று பின்வருமாறு சூசகமாகத் தெரிவிக்கின்றது.

'சமத்துவ உரிமை, சுயநிர்ணயம் போன்றவற்றை அனுசரித்து நடப்பதன் மூலம் தமது பிரதேசத்திற்குச் சொந்தமான முழு மக்களையும் இன, மத, நிற வேறுபாடின்றிப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சுதந்திரமும், இறமையும் கொண்ட அரசுகளின் பிரதேச ஒருமைப்பாட்டையும், அரசியல் ஒற்றுமையையும் பகுதியாகவோ அல்லது முழுவதாகவோ பலவீனப்படுத்தவோ அல்லது கூறுபடுத்தவோ அதிகாரம் அளிக்கும். அல்லது உற்சாக மூட்டும் வகையில் மேலேயுள்ள பந்திகளில் எதுவும் கருதப்படாது".

இங்கு மறைமுகமாகப் புலப்படுவது யாதெனில் பிரதேச ஒருமைப்பாட்டையும், அரசியல் ஒற்றுமையையும் பேணவிரும்பும் ஓர் அரசு தனது பிரதேச மக்களை இன, மத, நிற வேறுபாடின்றிப் பூரணமாகப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என்பதும், தவறும் பட்சத்தில் பிரிந்து போகும் உரிமையை அங்கீகரிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என்பதுமாகும்.

இதன் பின்னரும் கூட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலகின் பல பாகங்களிலும் இடம் பெற்ற சுயநிர்ணயம் சம்பந்தமான போராட்டங்களில் மிகவும் மந்தமாகவே இயங்கியது. குறிப்பாக, ஆபிரிக்காவில் பயாபிரா, கதங்கா,

www.tamilarangam.net

மேற்கு சகாரா போன்ற பிரதேசங்களின் மக்கள் சுயநிர்ணய அடிப்படையில் மேற்கொண்ட நீதியான பிரிந்து செல்லும் போராட்டங்கள் நீண்டகாலம் நீடித்து பாரிய உயிர்ச் சேதங்களும், பொருட் சேதங்களும் ஏற்பட்டபோதெல்லாம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மனிதாபிமான உதவிகளை அனுப்பவதுடனும், பேச்சுவார்த்தைக்கான அவசியத்தை வலியுறுத்துவதுடனும் நின்றதே தவிர ஆக்கபூர்வமான



நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. மேலும் இப்பிரச்சினைகளில் நிலவிய அனாவசியமான வெளியார் தலையீடுகளையும் தடுத்து நிறுத்தும் வல்லமையையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கொண்டிருக்கவில்லை.

சுயநிர்ணய உரிமை என்பது குடியேற்ற நாடுகளுக்கோ அல்லது வெளியாரின் கட்டுப்பாட்டிலுள்ள நாடுகளுக்கோ மட்டும்தான் பிரயோகிக்கத் தக்கது என்ற நிலைப்பாட்டையே 1960களில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கொண்டிருந்தது. அதையே தொடர்ந்தும் கடைப்பிடிக்க அது முயன்று வந்துள்ளது. அத்துடன் அங்கத்துவ நாடொன்றின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஐக்கியத்திற்கும் குந்தகம் விளைவிப்பதில்லை என்ற தனது சாசன உறுதிமொழியையும் அது பேண முற்படுவது போலத் தெரிகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுக் காரியதரிசியான யூ.தாண்ட் பத்திரிகை நிருபர்களுக்கு ஒருமுறை பேட்டியளித்தபோது "பிரிவினையை ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் ஒருபோதும் அங்கீகரித்ததேயில்லை; அங்கீகரிக்கவுமில்லை; எதிர்காலத்திலும் தனது உறுப்பு நாடொன்றின் விடயத்தில் அது அங்கீகரிக்கும் என்று நான் நம்பவில்லை" என்று குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது.

இருப்பினும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இத்தகைய சட்டமும், மரபும், கௌரவமும் பேண முற்படுகின்ற நிலைப்பாடு நடைமுறை நிலைமைகளுக்கு பொருந்தி வரவில்லை. பலஸ்தீனியர்கள், ஆர்மீனியர்கள், குர்திஸ் இனத்தவர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கையாலாகத்தனமானது அதன் நற்பெயரை பாதித்துள்ளமை, யாவரும் அறிந்ததே. மேலும் சில தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தினை அரசியல் ரீதியாக ஊக்குவித்தோ அல்லது நேரடியான இராணுவத் தலையீட்டின் மூலமோ சில சக்திமிக்க நாடுகள் வெற்றிபெற வைத்தபோது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது சாசன விதிகள் மீறப்பட்டது குறித்து அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அத்துடன் சுயநிர்ணயம் சம்பந்தமான பிரச்சினைகளில் சம்பந்தப்பட்ட மக்களிடையே வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி முடிவுக்கு வரும் வழிமுறைகளும் ஐக்கிய நாடுகளின் சட்ட திட்டங்களில் உண்டு. அதையும் மிகவும் அபூர்வமாகவே ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் கடைப்பிடித்துள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகள் சுயநிர்ணய உரிமை பற்றி அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. ஏனெனில் இவ்வுரிமை அமுல்படுத்தப்பட்டால் ஐரோப்பாவின் 20 நாடுகளுக்குப் பதிலாக 68 நாடுகள் தோன்ற இடமுண்டு. மூன்றாம் உலக நாடுகளின் போக்கும் சுயநிர்ணய உரிமையை கேள்விக்குரியதாகவே மாற்ற முற்படுகின்றது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விதிகளின்படி மக்கள் யாவருக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. ஆனால், சிறுபான்மையினர் பிரச்சினையை எதிர்நோக்கும் ஈராக், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் சுயநிர்ண உரிமையானது முழு மக்கள் தொகுதிக்கு மட்டுமே பிரயோகிக்கத் தக்கது என்றும், சிறுபான்மை இனங்களுக்கு அது உரித்தானது அல்ல என்றும் வாதிட்டு வந்துள்ளது.

மாறிவரும் சர்வதேச நிலைமைகளும் சுயநிர்ணய உரிமையின் வளர்ச்சிப் போக்குக்கு வாய்ப்பாக அமையவில்லை. பிராந்திய ஒழுங்கமைப்புக்களின் பெருக்கமும், சர்வதேச ரீதியில் நாடுகளின் பரஸ்பர தங்கியிருத்தலின் வளர்ச்சியும், தேசிய அரசுகளின் முக்கியத்துவத்தை மழுங்கடித்தபோது சுயநிர்ணய உரிமையும் பாதிப்படையலாயிற்று. ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரலையும், கவனத்தையும் சமூக,

www.tamilarangam.net


பொருளாதார பிரச்சினைகளை ஆக்கிரமிக்க முற்படுகின்றன. மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திப் பிரச்சினைகள் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினைகளை மூடிமறைக்க முற்படுகின்றன.

இராணுவ – இராஜதந்திர மேலாதிக்கத்தினால் சுயநிர்ணய உரிமை துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவங்கள் வரலாற்றில் ஏராளம் உண்டு. பாரிஸ் சமாதான மகாநாட்டின் தவறுகளால் பல ஜேர்மனியர்களும், லித்துனியர்களும், றூடினியன் இனத்தவர்களும் போலந்துக்கும் செக்கோசெலாவியாவிற்கும் இடம் பெயர்க்கப்பட்டனர். அவுஸ்திரியா, அல்பேனியா, பல்கேரியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களில் கணிசமானோர் யூகோஸ்லாவாக்கியாவிற்கு அனுப்பப்பட்டனர். ரூமேனியாவிலும் கிரேக்கத்திலும் வந்தேறு குடிகள் மிகையாகினர். குர்தீஸ் இன மக்கள் துருக்கி, ஈரான், ஈராக், சிரியா போன்ற நாடுகளில் சிதறுண்டனர். ஏகாதிபத்திய நலன்களுக்கேற்ப நாடுகளைக் கூறுபோடவோ அல்லது ஒற்றுமைப்படுத்தவோ சுயநிர்ணய உரிமை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனாலேயே கேர்சன் பிரபு சுயநிர்ணய உரிமையை "இருமுனை கொண்ட வாள்" என்று வர்ணித்தார்.

சுயநிர்ணய உரிமை பற்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச்சபையிலும் மனித உரிமைகள் குழுக் கூட்டங்களிலும், சர்வதேச நீதிமன்றத்திலும் அனேக விவாதங்கள் நிகழ்ந்துள்ளன. ஆயினும் தொடர்ந்தும் சுயநிர்ணய உரிமையானது குறைப் பிரசவ நிலையிலேயே காணப்படுகின்றது. இதன் நேரடி விளைவே பல நாடுகளிலும் மோசமடைந்து வரும் தேசிய இனப்பிரச்சினைகளாகும். பலம் பொருந்திய சில நாடுகள் தமது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை பயன்படுத்த முற்படுவதும் சுயநிர்ணய உரிமையின் பின்னடைவுக்கு முக்கிய காரணமாகும். அல்பிரட் கொவன் என்ற அறிஞர் சுயநிர்ணய உரிமை பற்றிய "அடிப்படையான மீளாய்வு" ஒன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

தொகுத்துப் பார்க்கும் போது, சுயநிர்ணய உரிமையின் உள்ளடக்கங்களும், நோக்கங்களும் உன்னதமானவையாக இருக்கலாம். வரலாற்றில் எதிர்பாராமல் ஏற்பட்ட சில சாதகமான சந்தர்ப்பங்களினால் அவை வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் சிக்கலடைந்து வரும் சர்வதேச அரசியலில் அவை ஏற்படுத்தக்கூடிய விபரீதங்களும் பல உண்டு. யதார்த்தமாகப் பார்க்கும் போது, சுயநிர்ணய உரிமையானது, தேசியவாதத்திற்கு கொள்கையடிப்படையாகவோ அல்லது பிரச்சாரக் கருவாகவோ அமையலாம். ஆனால், சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஒரு மக்கள் பிரிவோ அல்லது அதன் அமைப்போ குறித்த பிரச்சினை தொடர்பாக தேசிய பிராந்திய சர்வதேச சக்திகளுக்கிடையில் ஏற்படுகின்ற அரசியல் சமன்பாட்டை சீர் செய்யத்தக்க வல்லமையையும் செல்வாக்கையும் பெறும்போதே சுயநிர்ணய உரிமையும் நடைமுறைச் சாத்தியமாகிறது.

மற்றோர் விதமாகக் கூறின், தேசிய பிராந்திய சர்வதேச எல்லைகளைத் தொட்டு நிற்பதே நவீன சுயநிர்ணயத்தின் முனைப்பம்சமாகும். இது சுயநிர்ணயம் எனும் பதம் வெளிக்கொணரும் அர்த்தத்தையே கேள்விக்குரியதாக்குகிறது. 'சுயநிர்ணயம்' என்பது 'பொது நிர்ணயம்' என்பதனை நோக்கி அதிக தூரம் முன்னேறிவிட்டது. ஆயினும் இம்மாற்றம் பற்றிய தர்க்க – விஞ்ஞான அடிப்படைகள் அபிவிருத்தியடையவில்லை.

★★

# மனதுக்குள் குமுறும் அமைச்சர்கள் அசட்டை செய்யும் சந்திரிகா அரசு

சர்வதேச மட்டத்தில் புலிகள் அமைப்பு உன்னதமான இடத்தை வகிக்கின்றது. சர்வதேச நாடுகள் ஆயுதக்குழுக்களுடனான சமரசத் தீர்வுகளை மேற்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் ஆயுதங்களை கீழே வைக்கும் நிபந்தனையை வலியுறுத்தினால் பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என சிறிலங்காவின் தபால் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். இராணுவ நடவடிக்கை மூலம் இன்னும் பத்து வருடங்கள் சென்றாலும் அரசாங்கத்தினால் அமைதி, சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

வன்செயல்களின் காரணமாக அரசு நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது. இலட்சக்கணக்கான இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி உள்ளனர்.

பட்டதாரிகள் மருத்துவ மனைகளில் மலசலகூடம் கழுவும் வேலையென்றாலும் தாருங்கள் என்று என்னை நாடி வருகின்றார்கள். அண்மையில் வீதி நிர்மாணப் பணிகளை பார்வையிடச் சென்றபோது வீதிக்கு கல்போடும் வேலையிலீடுபட்ட இளைஞர்களிடம் சென்று பேசினேன். அப்போது அவர்களில் ஒருவர், தான் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி என்றும் வறுமை காரணமாக எந்தத் தொழிலையும் செய்ய தயாராக இருப்பதாகக் கூறினார்.

இந்த நிலைமைகள் குறித்து அரசு எந்த விதமான அக்கறையும் இன்றி தமிழர் மீதான ஆக்கிரமிப்புப் போருக்கு பெருமளவு பணத்தைக் கொட்டி வருகிறது என்றும் இவ்வாறு வேலை வாய்ப்பின்றிய இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்து அநியாயமாகச் சாகிறார்கள் என்பதும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக மீள முடியாத பாதாளத்துக்குள் தள்ளுகின்றது என்பதுமான பல கவலைகளை, ஆதங்கத்தை அவர் கொண்டிருந்த போதும் அவற்றை அவர் வெளிப்படையாகச் சொல்லத் தயங்கிக் கொண்டே மேற்குறித்த நிலைகுறித்துப் பேசியிருக்கிறார். இப்படி நிறைய ஆதங்கங்களை தமக்குள் பல அமைச்சர்கள் தங்களுக்குள் வைத்திருக்காமல் பேசி சந்திரிகாவை நெறிப்படுத்தும் முயற்சிகளில் இறங்குவார்களேயானால் கைமேல் பலன் நிச்சயம் உண்டு.

★★

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கணனி வலையில் செய்திப் போர்

போராளிகள் செய்திப் போரில் நவீன முறைகளை கடைப்பிடிக்கின்றார்கள்.

— றோய் கிறேவல்

றோய் கிறேவல் என்னும் பிரசித்தமான நோர்வே நாட்டுப் பத்திரிகையாளர் எழுதிய இக்கட்டுரை Internet today என்னும் கணணிப் பத்திரிகையில் 24, November 1996 அன்று பிரசுரிக்கப் பட்டது. நாம் அதில் தமிழீழ விடுதலை சம்பந்தமான பகுதிகளை தொகுத்துத் தருகின்றோம்.

வவுனியாவிற்கு வடக்கே அடர்ந்த காட்டுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அமைந்துள்ளது. அங்கிருந்து 'சட்டலைட்' தொலைபேசி மூலம் ஐரோப்பாவுடனான தொடர்புகள் தொடர்கின்றன. அத்துடன் நாளாந்த செய்திகளும் தொகுக்கப்பட்டு நோர்வேயில் தலைமையகத்தைக் கொண்ட தமிழ் நெற் (Tamil Net) மூலம் அனுப்பப்படுகின்றன.

சர்வதேசக் கணணி வலையின் (Internet) முக்கியத்துவத்தையும் தொலைத் தொடர்புகளில் அதன் சிறப்பையும் பல்வேறு போராளிக் குழுக்கள் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளன. இதற்கு முக்கிய காரணங்களாக வலையின் செய்திகள் பரவும் வேகத்தையும் தணிக்கையின்றி செய்திகள் வெளிவிடக்கூடிய தன்மைகளையும் குறிப்பிடலாம்.

தமிழ் நெட் 1995–இல் உருவாக்கப்பட்ட ஒரு சுயேச்சையான அமைப்பு. இது அமைக்கப்பட்டதற்கான முக்கிய காரணமாக சிறீலங்கா அரசின் செய்தித் தணிக்கையைக் குறிப்பிடலாம். 'தமிழ் நெட்' அமைப்பாளர்களில் ஒருவர் கூறுகின்றார்:

சிறீலங்கா அரசு யாழப்பாணத்தின் மீதான தாக்குதல் ஆரம்பித்த போதே எமக்குத் தெரியும் என்ன நடக்கப்போகிறதென்று.

தாக்குதலுடன், தாக்குதலை நியாயப்படுதுவதற்கான பிரச்சாரமும் பெரிய அளவில் தொடங்கப்பட்டது.

முன்பு ஒரு செய்தி வந்தடைய வாரங்கள் கூட எடுக்கும். அங்கிருந்து வருபவர்களை கேட்டறியும் வழக்கம் கூட இருந்தது. ஆனால், இப்போதோ செய்திகள் சில மணி நேரத்திற்குள் வெளி உலகை சென்றடைந்து விடுகின்றன. இதுவே தமிழ் நெட் போன்ற செய்தி அமைப்புக்கள் வேகமாக வளர்ந்து வருவதற்கான காரணமாகும்.






**தமிழ நெட்டிற்கு சந்தா கட்டுவது எப்படி?**

ஒரு இலத்திரனியல் தபால் (E-mail) ஒன்றை news@tamilnet.com என்னும் விலாசத்திற்கு கீழ்கண்ட விபரங்களுடன் அனுப்பவும்.

பெயர்:...............................

E-mail விலாசம்:...................

தனிநபர் அல்லது அமைப்பு:..........

தமிழ்நெட்டின் கணணி வலை (www) முகவரி:
http://www.tamilnet.com/

தமிழ் நெட் செய்திகளை பெறுபவர்களில் பெருமளவில் இடம்பெயர்ந்த தமிழர் இருந்தபோதிலும், சரிபாதிக்கு மேலானோர் பத்திரிகையாளர்கள், உதவி நிறுவனங்கள், மற்றும் செய்தி நிறுவனங்கள், விடுதலைப் புலிகளின் தினச் செய்திகள், NGO–இன் செய்திகள், செஞ்சிலுவைச் சங்கத்தின் செய்திகள் உட்பட வேறுபல அமைப்புக்களின் செய்திகள் தமிழ் நெட்டினூடாக அனுப்பப்படுகின்றன.

"தமிழ் நெட்" அமைப்பாளர் தொடர்ந்து கூறுகையில்,

"சிறீலங்கா அரசு பெரிய அளவில் செய்திகள் பரவுவதையிட்டு மிகுந்த 'கிலேசம்' கொண்டுள்ளதாகவே கூற வேண்டும். ஆகவே அவர்கள் எவ்வகையினிலும் எமது நடவடிக்கைகளை சிதைக்கவே முயல்கின்றார்கள். சிறீலங்கா அரசு தற்போது இரு முனைகளில் போரை நடத்துகின்றது. ஒன்று: இராணுவ ரீதியில், இரண்டாவது: பிரச்சார ரீதியில்."

தமிழ் நெட்டின் அமைப்பாளர்கள் பாதுகாப்பை பிரதானமாக கருதுகின்றார்கள். இப்பேட்டியை அநாமதேயமாக அளித்தவர்கள் தமிழ் நெட்டின் சந்தாதாரர் விபரங்களையும் இரகசியமாகவே வைத்துள்ளார்கள்.

யுத்தத்திற்கான காரணம் என்ன?

தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் (LTTE) சிங்களவரை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை அரசிற்கும் இடையிலேயே யுத்தம் நிகழ்கின்றது. சிறுபான்மையினரான தமிழர் சிறீலங்கா சுதந்திரமடைந்தவுடன் பலவிதமான துன்பங்களுக்கும் தரப்படுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். 1983–இல் இப்பிரச்சினை பூதாகரமாக வளர்ந்த நிலையில் போர் வெடித்தது. இப்போது போர் தீவிரமடைந்துள்ளதாகவே கூறவேண்டும். சிறீலங்கா அரசு யாழ்ப்பாணத்தை கைப்பற்றி விட்ட போதும் புலிகள் சளைக்கவில்லை. காட்டு முகாங்களில் இருந்து அவர்கள் எப்போதும் திடீர்த் தாக்குதல்களை நடத்தியவண்ணம் உள்ளனர். இப்போரில் 40,000 தொடக்கம் 50,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அரை மில்லியன் மனிதர்கள் சமீபத்தில் மாத்திரம் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

போராளி ரஞ்சன் (டாக்டர்) நாட்குறிப்பிலிருந்து

# நானும் என் மணலாறும்



செஞ்சிவப்பு வானத்தில் சூரியன் மெல்ல மறைந்து கொண்டிருக்கின்றான். பறவைகள் தம் பணிகளை முடித்து வீடு பறந்து கொண்டிருக்கின்றன. குமுழமுனைக் கிராமத்தில் ஆங்காங்கே வெளிச்சப் பொட்டுகள் தோன்ற ஆரம்பிக்க நான் மீண்டும் ஒருமுறை எனது கைக்கடிகாரத்தை பார்த்துவிட்டு வானத்தை ஊடுருவுகின்றேன்.

வானத்தில் இப்போது நட்சத்திரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக தோன்ற ஆரம்பிக்க அவற்றில் ஒன்று "இங்கே வா" என அழைப்பது போல வேகமாக மின்னுகின்றன. நான் தோள்களை அசைத்து "விரும்பினாலும் முடியாது" என என் நிலைமையை உணர்த்துகின்றேன். "ஆனால்....... ஆனால்" ஒரு குளிர்காற்று என்னுள் ஓட சிலிர்க்கின்றேன். புன்னகையுடன் மேலே பார்த்து "மணல் ஆறு..... மணலாற்றுக்குப் போகப்போகின்றேன்" என முணுமுணுக்கிறேன். பெருமையுடன் நட்சத்திரத்தினை ஏறிட "நானும் வருகின்றேன்" என அடம் பிடிப்பது போல அது இன்னமும் வேகமாக மின்னத்தொடங்குகின்றது.

புன்னகையுடன் கண்களை மூடி கற்பனையில் என் மணலாறுக்குள் பிரவேசிக்கின்றேன். நான் மட்டும், மிதக்கின்றேன். மணலாற்றின் நெடிய மரங்கள், சிறு வெளிகள், சிலிர்த்து ஓடும் அருவிகளுடன் ஐக்கியமாகின்றேன்.

"ரஞ்சன்" என அழைக்கும் சத்தம் கேட்க கண்களைத் திறக்கின்றேன். எமது குழு தயார் நிலையில் நிற்க எழுந்து முதுகில் சுமையை ஏற்றியபடி துப்பாக்கியை தூக்குகின்றேன்.

"இதோ நான் எதிர்பார்த்த நேரம் வந்துவிட்டது. இன்னமும் சிறிது நேரத்தில் மணலாற்றுப் பிரவேசத்திற்குள் பிரவேசித்துவிடுவேன்" எமது சிறு அணி மெல்ல நகர குமுழமுனை தொலைவாகின்றது.

குமுழமுனைக்கிராமம் முடிவடையும் இடத்தில் நாயாற்றுவெளி. வெளிக்கு மறுபக்கத்தில் மணலாற்றுப் பிரதேசம். மணலாற்றை, எனது காவிய மண்டலத்தை உற்று நோக்குகின்றேன். நெடிய மரங்களை அடர்த்தியாகக் கொண்டு கும்மிருட்டில் பிரமாண்டமாக உறங்கிக் கொண்டிருக்கின்றது. அழகை மறைக்கும் இருட்டை நினைத்து சலித்துக் கொள்கின்றேன்.

நாங்கள் இப்போது வெளியினுள் இறங்கி நடக்க, குளிர்ந்த காற்று ஆக்ரோஷமாக வீசி தனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. வெளியில் இருந்து நாணல்கள் அதற்கேற்ப அசைந்து "வருக வருக" என கானம் இசைக்கின்றன.

அடர்ந்த காடு முன்னால் விரிய நெடிய மரங்களை பெருமையுடன் பார்க்கின்றேன். உடலெங்கும் ஒரு சிலிர்ப்போட மணலாற்றுப் பிரதேசத்தில் எனது காலடிகளைப் பதிக்கின்றேன்.

சில்வண்டுகளின் ரீங்காரமும் காட்டு நெடு மரங்கள் போடும் சப்தங்களும் காதில் இசையாகி விழுகின்றன. பிரதான பாதையை அடைந்து, அதில் ஏறி நடக்கின்றோம். பாதையெங்கும் இருந்த பெருமளவு சருகுகள், காய்ந்த கிளைகள் "இது பயன்படுத்தப்படாத பாதை" என்பதை பறை சாற்றின. வழியோரமாக யானை தள்ளி விழுத்திய சிறு பிள்ளையார் கோவில்... நாம் ஓரமாக சருகுகளில் மிதிப்பதைத் தவிர்த்து நடக்கின்றேன். நான் இரு புறமும் பார்க்கின்றேன். மரங்கள், மரங்கள் எங்கும் நெடிதுயர்ந்த மரங்கள். மேலே பார்க்க வானத்தில் மரங்களால் தணிக்கை செய்யப்படாத பகுதிகள் மட்டுமே காட்சிக்கு.

பல மணிநேர நடையின் பின் இளைப்பாற முடிவெடுக்கின்றோம். சருகுகள் பஞ்சுமெத்தையாக, பாரஞ் சுமந்த முதுகு கீதம் பாட கண்களை மூடுகின்றேன். "நான் மணலாற்றில்" நம்ப முடியாமல் என்னை நானே கிள்ளிக் கொள்கிறேன். "எதிரி மட்டுமில்லாவிடில் விளக்கை ஏற்றி மணலாற்றின் அழகைப் பார்த்திடுவேன்" ஒரு பக்கம் திரும்பிப் படுத்து மூக்கை உறிஞ்சக் காய்ந்த சருகின் வாசனை வீசுகின்றது.

அறியாத பறவைகள் பல திருப்பள்ளி எழுச்சிபாட எழும்புகின்றேன்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சூரியன் தனது பொன்னிற கிரணங்களை காட்டிற்குள் புகுத்த மிகுந்த பிராயச்சித்தம் எடுத்துக் கொண்டிருந்தான். இப்போது வெளிச்சத்தில் பச்சைப்பசேலென்ற உச்சியைக்கொண்ட பல விதமான நெடிய மரங்கள், "என்னைப் பார் என்னைப் பார்" என போட்டி போட்டு பறந்து திரியும் பல வர்ண பறவைகள். அவ்வப்போது மருட்சியுடன் தென்படும் சிறு மிருகங்கள். உற்சாகமாகப் பார்க்கின்றேன். பறவைகளுடன் சேர்ந்து பறக்கவேண்டும் போல் இருந்தது.

மீண்டும் எமது பயணம் ஆரம்பிக்க, முதுகில் இருந்த சுமை இப்போது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. காட்டை, வெளிகளை, சிறு குன்றுகளை, ஆறுகளைக் கடக்க மனம் குதூகலிக்கின்றது. "முடியுமானால் முழு மணலாற்றையும் நடந்தே பார்த்துவிட வேண்டும்" என ஆவல் கொள்கின்றது. நாம் முகாம் அமைக்க வேண்டிய இடம் வந்துவிட்டது. ஆற்றுப் படுக்கையில் கிணறு வெட்டி 4 அடி ஆழத்தில் தண்ணீர் வர குதூகலிக்கின்றோம்.. ஆசைதீர குடிக்கின்றோம்.

காவற்கடமை பொறுப்பு வர முன்னே நகர்ந்து நிலை எடுத்துக் கொள்கின்றேன். என் முன்னே ஒரு சிறுவெளி. பக்கத்தில் சரிந்துகிடக்கும் பெரிய பட்ட மரங்கள் அதன் மேல் சாய்ந்தபடி ஓடி மறையும் மெல்லிய பச்சைப் பாம்பை ஆர்வத்துடன் பார்க்கின்றேன். இதுவரை கண்டிராத பறவையொன்று தாழ்வாகப் பறந்து என்னை சந்தேகமாகப் பார்க்கின்றது. பின் கீழே வந்து என்முன் பட்ட மரத்தின் மேல் உட்கார்கின்றது. வெள்ளையும், கறுப்பும் கலந்த நிறம் வரிக்குதிரையை நினைவுக்கு கொண்டு வந்தது. மைதீட்டியது போலிருந்த சிறிய அழகான கண்களால் என்னை ஆழமாகப் பார்த்து "நீ யார்?" , "நான் புலி" எனது பதிலால் திருப்தியடையாத அச்சிறு பறவை "இங்கே என்ன செய்கின்றாய்?" என்றது "எம் இதய பூமியை மீட்க உளவறிய வந்திருக்கின்றேன்" ஒரு காலால் பட்ட மரத்தின் மேல் சுரண்டியபடி எனக்கு அப்பால் பார்த்தது பறவை "ம்....இதய பூமி....ஒரு சங்கரிலா (சுவர்க்க பூமி)... உண்மை தான் இப்போது என்னை கண்களில் நேராகப் பார்த்து "பத்து வருடங்களுக்கு முன் இங்கே எல்லாமே இருந்தது. பச்சைப் பசேலென்ற விளைநிலங்கள் இருந்தன. பால், வெண்ணை, தேன், நெய், அரிசி, திணை எல்லாமே இருந்தன. என பெருமூச்சுவிட்டது. பின் திடீரென என் பின்னாலிருந்து துப்பாக்கியின் முனையைப் பார்த்துவிட்டு "அது என்ன?" என்றது. மெல்ல "துப்பாக்கி" என்கின்றேன். கவலையுடன் அங்குமிங்கும் பார்த்து "ஏனோ அப்பா! அவதானமாக இருந்து கொள்ளுங்கள்" மீண்டும் ஒரு முறை பெருமூச்சொன்றை உதிர்த்து விட்டு தயக்கத்துடன் மேலெழுந்து பறக்கின்றது. வேதனையுடன் வெளியைப் பார்க்கின்றேன். திடீரென ஓரமாக யாரோ நிற்பதாக உணர உஷாராகின்றேன் "யாரங்கே" மரங்களின் பின்னிருந்து தயங்கியபடி கரிய யானையொன்று மெல்ல முன் வருகின்றது. சினத்துடன் அதைப்பார்த்து "ஓஹோ நீர்தான் பிள்ளையார் கோவிலை இடித்தீரா?" என்கின்றேன். தலையை அசைத்து மறுப்பை தெரிவிக்க மறுத்த அவ்யானை பின் நிலத்தைப் பார்த்தபடி "நான்தான்...கோபத்தில்...." குளறிய குரலில் தொடர்ந்தது" அன்று அம் மக்கள் துரத்தியடிக்கப் பட்ட போது, உடமைகளை இழந்து வெளியேறிய போது, வீடு வாசல்களை இழந்து வெளியேறிய போது பிள்ளையார் என்ன செய்தார்? அதுதான்..... கோபத்தில்" யானையின் கண்களில் கண்ணீர். நான் மௌனமாகி பின் சமாதானப்படுத்த முயல்கின்ற வேளை, தூரத்தே இடி இடிக்கும் சப்தம் கேட்கின்றது. மணலாற்று மக்களின் துயரக் கதையை கேட்ட ஆகாயத்திற்கே பொறுக்க முடியாமல் கண்ணீர் சிந்த ஆரம்பிக்கின்றது. மெல்ல முன்னே பார்க்க அங்கே யானையில்லை.

மரமொன்றின் கீழ் ஒதுங்கி நின்று, துப்பாக்கியை அணைத்தபடி மழையை மழையின் துளிகள் மணலாற்று மண்ணை அணைப்பதை பார்க்கின்றேன். ஏக்கம் பிறக்கின்றது. ஓடிச் சென்று மழைக்குள் நனைய வேண்டும் போல இருக்கின்றது.

மணலாற்றிற்கு வந்து இரண்டு வாரங்கள் ஆகிவிட்டன. கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், தென்னைமரவாடி, கருநாட்டுக் கேணி, பண்டிசுட்டான், முந்திரிகைக் குளம் போன்ற இடங்கள் மெல்ல பரிச்சியமாகத் தொடங்கியிருந்தன. ஒவ்வொரு முறை வெளியே செல்லும் போது மணலாற்றின் அழகான பிரமாண்டம் என்னை வியக்கச் செய்யும். அன்றும் வியந்தபடி குழுவினரோடு நடந்து கொண்டிருக்கின்றேன். எத்தனை முறை பார்த்தாலும் சளைக்காத நெடிய மரங்கள் அவற்றின் நிழலில் வளரும் சிறு செடிகள் இவற்றை உரிமை கொண்டாடியபடி அங்குமிங்கும் பறந்து திரியும் பறவைகள். நாம் சென்ற ஒடுங்கிய பாதையின் இருமருங்கிலும் சிவப்பு நிற காட்டுப் பூக்கள் அவ்வப்போது இடைப்படும் சிறு வெளிகளினூடாக உறுதிப்படுத்தப்படும் நீல வானம் ஆங்காங்கே சில்லென ஓடும் சிற்றருவிகள் வெளிகளில் துரத்தியடிக்கப்பட்ட மக்களின் துயரம் கொண்ட முன்னை நாள் கால் நடைகள்.

ஒரு வெளிப் பிரதேசத்தில் பிரவேசித்ததும் முன்னே விரிந்த காட்சிகள் கண்டு பிரமிப்படைகின்றேன். கன்னங் கரேலென கருங்கல்லில் உருவான சிறு குன்றுகள் வெயிலில் பள

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பளக்கின்றன. எம் முன்னே நேராக இருந்தது தண்ணீர் மலை. கருங்கல் குன்றின் உச்சியில் சிறு குளம் மணலாற்று அன்னைக்கு வந்தனம் சொல்லி தண்ணீர் எடுத்துக் கொள்கின்றோம்.

இருள் பரவும் வேளை எமது வேகம் மந்தமாகின்றது. இலக்கை அடைந்து விட்டதால் மிக எச்சரிக்கையாக முன்னேறுகின்றோம். குனிந்து நடந்தபடி முட்பற்றைகளை விலக்கிப் பார்க்க தூரத்தே வானத்தை தொடும் அளவிற்கு வெளிச்சத்துடன் விரிகின்றது முந்திரிகைக்குள இராணுவ முகாம்.

மின்சாரம் வழங்கும் இயந்திரங்களின் இரையும் சத்தமும் மனிதர்கள் இரைந்து கதைக்கும் சப்தங்களும் மங்கலாக கேட்கின்றன. முகாமை சுற்றிவர எரிக்கப்பட்டு, தளமாக்கப்பட்ட முன்னை நாளைய வயல்கள். இருளின் அரவணைப்பில் ஊர்ந்து முன்னேறி வயலின் சிறு மேடுகளின் பின் பதுங்கிக் கொள்கின்றோம். நெஞ்சில் பாரமான கல்லொன்றை யாரோ வைத்தது போல கனமாக இருந்தது. ஓடிச் சென்று "வயலை ஏன் எரித்தாய்? மண்ணின் மைந்தர்களை ஏன் விரட்டினாய்?" என்று கேட்க வேண்டும் போல் இருந்தது.

நேரம் ஆமை வேகத்தில் நகர கறுப்பு வயல் சுட்டது. மெல்ல நாசியால் முன்னை நாள் வயலின் தரையைத் தொட சோறு மணந்தது.

முகாமிலிருந்து எம் திசையை நோக்கி ஒரு வெளிச்சப் பொட்டு நகர நாம் உஷாராகின்றோம். வெளிச்சப் பொட்டு அணைந்து மீண்டும் தென் படுகையில் இரு திசைகளில் இரு வெளிச்சப் பொட்டுகள். அவை மீண்டும் அணைய துப்பாக்கிகள் சடசடக்கின்றன. துப்பாக்கிகள் வெடிக்க ஆங்காங்கே சிவப்பு மின்னல்கள். சீராக அழகாகச் செல்லும் அவற்றை எழுந்து நின்று பார்க்க வேண்டும் போலிருந்தது. மூச்செல்லாம் வெடி மருந்து மணத்துடன் நாம் பின் வாங்குகின்றோம்.

காட்டின் நுழைவாயிலை சுட்டுக் கொண்டே அடைய "ஓடு ஓடு" என மூளை கட்டளை பிறப்பிக்கின்றது. ஐம்புலன்களும் உஷாராகி ஓடுகின்றோம். எம் பின்னே காடு அதிர்கின்றது. நம் ஆயுதக்கிடங்கை காலியாக்கிவிடும் நோக்கத்துடன் இராணுவத்தினர் கனரக ஆயுதங்களை காட்டின் மேல் பிரயோகித்துக் கொண்டிருந்தார்கள்.

நாம் ஓடினோம் மீண்டும் ஓடினோம். மூச்சு வாங்க சிரமமாக இருந்தது. முட்கள் கிழித்து ஆங்காங்கே குருதி வழியும் காயங்கள் சீருடைகள் வியர்வையால் தொப்பலாக நனைந்து கல்லாக கனத்தன. பாதுகாப்பான ஒரு இடத்தை அடைந்து பச்சை இலைகளைப் பறித்து மெத்தையாக்கி உறங்கச் செல்கின்றோம்.

நள்ளிரவு காவற் கடமைக்கு எழுப்பப்பட்டபோது கால்களுக்கு யாரோ நங்கூரமிட்டதுபோல் இருந்தது. முட் கிழித்து காயங்களில் இப்போது இரத்தம் உறைந்து கட்டியாகி இருந்தது. முகத்தில் இரத்தக் கறைகளுடன், கண நேர கனவின் விளைவால் வியர்வை. "இதென்ன விசித்திர ஐந்து" என ஒரு சிறு வண்டொன்று முகத்தில் வந்தமர கலைக்க முடியாத அளவிற்கு கைகள் கனத்தன.

சில வண்டுகள் உறவினர்களுடன் சேர்ந்து ரீங்காரம் பாடி "பாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள எமக்கும் உரிமையுண்டு" என்பதை வெளிப்படுத்தும் காட்டின் பன்குடி மக்கள். "ம... ண... ல்... ஆ... று.. " என்று எழுத்துக் கூட்டினேன், பெருமூச்சு விட்டேன். மறுகணம் சில்லென்ற தென்றல் என்னைத் தழுவிச் சென்றது. ஒரு கணம் காடே மௌனமாகிவிட்டது போன்ற உணர்வு. "அன்னையே மணலாற்று அன்னையே! இது நீ தானா?" உவகை பெருக்கெடுக்க சுற்றும் முற்றும் நோக்கினேன். கைகளை உதறி, உத்வேகத்துடன் எழுந்து நின்றேன். என் கை துப்பாக்கியை இறுகப் பற்றுகின்றது.

அதிகாலை ஈரம் ஒன்று நெற்றியில் விழ விழித்தெழுகின்றேன். மேலிருந்த மரத்தின் இலையொன்று அடுத்த பனித்துளியை என் பள்ளியெழுச்சிக்கு தாரை வளங்கத் தயாராகிக் கொண்டிருந்தது. ஒற்றைக் கண்ணால் பார்க்க மார்பின் மேல் எறும்பு படையணி ஒன்று சீராக அணிவகுத்துச் சென்று கொண்டிருக்கின்றது. என் உதடுகள் மெல்ல "சென்று போய் திரண்டு வருவோம்" என முணு முணுக்கின்றன. பிந்தைய இரண்டு வார வேலைகளை முடித்து திரும்பிச் செல்லத் தயாராகின்றோம். ஒரு திங்கள் மணலாற்று வாழ்க்கை முடிவிற்கு வரப் போகின்றதை எண்ண நெஞ்சு கனக்கின்றது.

நாம் நடக்க ஆரம்பிக்க, இயலாமையுடன் கற்பனையில் பறக்கின்றேன். ஆவேசத்துடன் அத்தனை மரங்கள், அருவிகள், வெளிகள், குன்றுகளை அரவணைக்க முற்படுகின்றேன். எனது உதடுகள் "சென்று போய் திரண்டு வருவோம்" என ஓயாமல் முணுமுணுக்கின்றன.

குமுழமுனையையும் மணலாற்றையும் பிரிக்கும் நாயாற்று வெளியை அடைகின்றோம். வெளியில் காற்று வேகமாக வீச நாணல்கள் "போகாதே போகாதே" என ஓலமிடுகின்றன. இதய பூமியை விட்டு, என் இதயத்தை விட்டு கனத்த மனதோடு நடக்கின்றேன். கால்கள் தள்ளாட, தூரத்தே கும்மிருட்டில் குமுழனை, திரும்பிப் பார்க்கும் போது கண்களில் நீர் தழும்பி முல்லை மண்ணை நனைக்கிறது.

★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தைப்பொங்கல்**

# தமிழர் பண்பாட்டின் உயிர்நாடி

அறுவடைத் திருநாள் என்பது உலகில் எல்லா இனங்களிடையேயும் தொன்று தொட்டே கொண்டாடப்பட்டு வருவதாகும். ஆற்றங்கரை ஓரங்களைத் தெரிவு செய்து அதனண்டையில் வாழ முற்பட்ட போது மனிதன் முதன்முதலாக விலங்கிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டான். அன்று முதல் இன்றுவரை விதைப்பும்; உழைப்பும்; அறுவடையுமாகச் சுழன்று வந்து நிற்பதே மனிதனது நாகரிக வாழ்வு. ஆதிமுதலே தம்மிடையே போற்றப்பட்ட பழம் பெரும் விழாக்களை இன்றும் முதன்மையுடன் கடைப்பிடிப்பதன் மூலமே ஒவ்வொரு இனமும் தனது மூத்த வரலாற்றையும்; நாகரிக மேம்பாட்டையும் உலக அரங்கில் நிறுத்திக் கொள்வது வழமை. உலகப்பந்தில் மனிதன் எத்தனையாயிரம் ஆண்டுகளைத் தாண்டி வந்தாலும்; தன்னுள் எத்தனை மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டாலும்; உலகம் முழுமைக்கும் பொதுமைப்பட்டு நிற்கும் ஓர்விழா அறுவடை நாளாகும். நாகரிகத்தின் விழாவென்று கூறக்கூடிய இத்திருநாளே தமிழர் தம் பொங்கல் பண்டிகையாகும்.

ஆரம்பத்தில் மனிதன் இயற்கை மீதான தனது வழிபாட்டை அச்சத்தால் நிகழ்த்தினான் என்றும்; பின்னர் அன்பாலும்; அடுத்து நன்றியாலும் இயற்கை மீது வழிபாடு கொண்டிருந்தான் என்றும் கூறுவர். இவ்விதம் வழிபாட்டில் ஏற்பட்ட படிமுறையான வளர்ச்சியில் மூன்றாவது கட்டத்தில் வாழ்க்கைக்கு அவசியமானதும்; நன்றி செலுத்தும் நாகரிகப் பண்பினடியாகவும் உருப்பெற்ற விழாவே பொங்கல். இவ்விதம் இயற்கையோடு கலந்திருந்த வாழ்வில் பிற்காலத்தில் சமயங்கள் பிரவேசிக்க பல மாறுதல்கள் நடைபெற்றன.

அன்று முதல் மனிதன் மெல்ல மெல்ல தனது காரியங்களுக்கெல்லாம் இறைமை கற்பித்துக் கொள்ள முற்பட்டான். இத்தகைய மாற்றங்களால் பல புதிய புதிய வழிபாட்டு முறைமைகள் உருவெடுத்தன. முன்னர் மாரிகாலமெனப் பெயர் கொண்ட மழை வழிபாடே பின்னர் மாரியம்மன் வழிபாடாக மாற்றமடைந்தது போல; இயற்கைக்கான வழிபாடுகளில் பல இறைவழிபாடுகளாகத் திரிபடைந்தன. எனவே தான் பண்டைத் தமிழர் வாழ்வில் நிகழ்ந்த சமயங்களின் பிரவேசத்திற்கு முன்னரே அவர்தம் ஆதி விழாவாகத் தோற்றம் பெற்று, இன்றுவரை தமிழர் நாகரீகத்தின் சின்னமாக வெளிப்பட்டு நிற்பது பொங்கல் பண்டிகை ஆகிறது.

தமிழ்க் குடியின் தொன்மையையும்; பண்பாட்டையும் அடையாளம் காட்டும் இத்திருநாள் கார் உலாவும் வானமும்; நீர் உலாவும் ஏரியும் கருணை காட்டும் காலத்தில் நடக்கும். இயற்கை பசுமையான ஆடைகட்டி, பன்னிறப் பூக்களைச் சூடி, இனிய காயும், கனியும், கரும்பும் அணிந்து, இன்பக் காட்சி தரும் காலத்தில் தமிழர் "பூவும், புகையும், பொங்கலும்" கொண்டு இயற்கையை வழிபட்டு வந்ததாகக் கூறுவர். அதேவேளை பழையன கழிந்து புதியன தேடும் மாண்பு, உழைப்பால் உயர்வு தேடும் மேன்மை, அப்பழுக்கற்ற வீரம், நன்றி கொல்லா நேரிய வாழ்வென நெல்லின் குதிர் போல எண்ணற்ற அர்த்தங்களும் இவ் விழாவோடு கலந்திருந்தமை குறிப்பிடத் தக்கது.



உடம்பிற்கு எப்படி உணவு ஆதாரமாக அமைகிறதோ அதுபோல உயிருக்கு ஊதியமாகவும் அதை வளர்க்கும் சக்தியாகவும் அமைவதே உழைப்பு. அந்த உழைப்பே சமுதாயத்தின் தூண் என்றனர் தமிழர். உழுவதனால் துன்புறும் பூமியால்தான் பயிரையும், அதன் மூலம் தானியத்தையும் தர முடிகிறது அதுபோல தன் இன்பம் விளையாது, உடல் வருத்தி, உழைத்து துன்பத்தை வரவேற்று தொழில் புரியும் ஒருவனே மாற்றார் துன்பத்தை நீக்கும் தூணாக எழுகிறான். எனவேதான் உயிர் செழிக்கும் உழைப்பை போற்றுவதற்குரிய திருநாள் என்று பொங்கல் பண்டிகையைக் கூறுவர்.

தமிழ் இலக்கியங்களும் தமது வரலாற்றில் பொங்கல் பண்டிகை பற்றி நிறையவே பேசியுள்ளன. தமிழ் நாட்டார் மேகங்களை இந்திரனாக்கி, விளை நிலங்களை கடவுளாகக் கண்டு; இப் பொங்கல் பண்டிகையை இருபத்தெட்டு நாட்களுக்குரிய இந்திர விழாவாகக் கொண்டாடியதாகத் தெரிவிக்கின்றன. இப்பொழுது இது காலத்தின் தீவிரத்திற்கேற்ப குறுகிப் போயுள்ளது. கடவுள் வாழ்த்து முடிந்த கையோடு திருக்குறள் வான் சிறப்புப் பற்றியே பாட முனைந்தது. அது முதற்கொண்டு, "மாமழை

www.tamilarangam.net



போற்றுதும், மாமழை போற்றுதும்!" என்னும் சிலப்பதிகப் பாடலீறாக, பண்டைய இலக்கியமெல்லாம் உழவுத் தொழிலையும், இயற்கையையும் ஒன்றாகவே இணைத்துப் பாடி மகிழ்ந்தன. முன்னோர் மழை நீரையும், ஆற்று நீரையும், குளம் குட்டைகளையும் நிரல்பட அறிந்திருந்த போதும்; வரட்சிக்கும் வளத்திற்கும் அடிப்படை வானமே! என்பதில் என்றுமே குழப்பமடையவில்லை. ஆகவேதான் தமிழர் வழிபாடெல்லாம் வான் நோக்கி அமைந்தன. சமயங்கடந்த இயற்கையின் நேசிப்போடு மலர்ந்தன. எத்தனையோ பண்டிகைகளைக் கொண்டாடினாலும் அவை அனைத்தும் பெறத் தவறிய முக்கியத்துவத்தைப் பொங்கல் பண்டிகை பெற்றுக்கொள்ள இவையே காரணமுமானது. தொன்றுதொட்டே ஏரும், கலப்பையுமே பண்டைத் தமிழரின் புனிதப் பொருட்களாயிருந்தன. இவ்விரண்டையுமே சுதந்திரத்தின் உண்மைச் சின்னங்களாகவும்; மதிப்பையும் அறத்தையும் நல்குவனவாகவும் போற்றி மகிழ்ந்தனர்.

பொங்கலுக்கு முதல் நாள் வீட்டிலும், நாட்டிலும் உள்ள மாசுகளைப் போக்கி, பழையன போய் வாழ்வைப் புதுப்பித்துக் கொள்வதால் அதைப் போகிப் பண்டிகை என்பர். இதை மழைப் பண்டிகை என்றும் குறிப்பிடுவர். எனினும் சூரியப் பொங்கலே ஆண்டு முழுவதும் உழைத்த உழைப்பின் பயனை அறுவடை செய்த மகிழ்ச்சியோடு, உழைப்பின் சிறப்பிற்கும்; உணவின் விளைவிற்கும் ஆதாரமான கதிரவனுக்கு நன்றி கூறும் பொங்கலாகும். பொங்கலுக்கு அடுத்த நாள் வருவது மாட்டுப் பொங்கல். நாட்டுப் புறங்களில் அது மிக உற்சாகமாக நடைபெறும். மாடு என்ற சொல் செல்வம் என்ற பொருள் கொண்டது. மனிதர்களுக்காக உழைக்கும் வாயில்லா உயிர்களில் முதன்மையானது. ஏர் இழுப்பது, பரம்பு அடிப்பது, அறுவடையின் போது சூடடிப்பது, களத்து நெல்லை களஞ்சியத்தில் சேர்ப்பது மாடு. அது போல அமைதியும் அன்பும் பொறுமையும் உடையது பசு. தன் கன்றுக்குரிய பாலைக் கவர்ந்து செல்வோருக்கும் கரவாது பால் கொடுப்பது. எனவேதான் காளையும், கறவை மாடும் நோயின்றிச் செழித்தோங்க மாட்டுப் பொங்கலை நடாத்துவார்கள். இன்றும் மலையகத்தின் மாட்டுப் பொங்கலே மிகமுக்கியமானதாக நடைபெற்றுவரக் காணலாம். மாடுகள் இறந்துவிட்டால் ஒப்பாரியிட்டு அழுது

# பொங்கலோ பொங்கல்!

— சன்னதமாடி

தோழா!
போர் உழவர் பூமியில்
பொங்கல் நடக்கும்:
போவோமா புதுவண்டி
பூட்டி...
இங்கென்ன வேலை உனக்கு?
ஆளுக்கு ஆள்
கொம்புகள் சீவி:
ஆங்காங்கு கூடி
வம்புக்கு வழக்கெடுத்து
வீண்பொழுது கழிப்பாரிடை
பொங்கிடுமோ பொங்கல்.
ஐரோப்பா வந்தா அறிவழிந்தாய்
அடுத்தவன்
படலைக்குள் கண் தொலைத்தாய்?
வேள்விக்கு நேர்ந்தவை சில
வீட்டில் பூச்சிகளாய் போயின சில
பட்டில் குஞ்சம் சுத்தி:
பகட்டில் மாண்டன சில.
ஏவுகணை நாட்டிலும்
ஏவல் பேய்களும்
கூரை பிடுங்கலும்.
கண்டிவிட்டால் போதும்!
மூளைதிரண்டு வானில் பறக்கும்.
மூக்கினிலே ஸ்பானிய
மாடெழுந்து மூசும்.
குழுமாடுகள் பிடித்து,
தொழுவம் கொண்டு சேர்ப்பதிலே
மாய்ந்தே போனது
புலம் பெயர் உழவு.

இனி –
கழன்றோடும் "நட்" பூட்டி
புது மனிதராக்கி
வண்டி கட்டி
ஒரு வழி நடத்தி;
ஊர்போய் உழுது பயிரிட முன்
பொங்கிடுமோ பொங்கல்.
உயிர் காற்றாகி; உடல் வித்தாகி;
பயிர் முனையில் பூவாகி
நிற்பர்.
எங்கள் பாலகர் பூமியில்
பாலெடுத்துப் புதுப்பானை வைத்து
கரும்பிளநீர் சூழ வைத்து
பொங்கலிடப் போய் வருவோம்.
போர்ப்பொங்கல் பொங்கிச் சரிக்கும்.
புலிமறவர் வெற்றிக் கொடி பறக்கும்.
அது கண்டு
பொக்கை வாயிலும்
புதுச் சிரிப்பு வெடிக்கும்.
அன்று
அக்கை ஆத்தை சூழவர
எங்கள்
தம்பி வீரர் துணையிருக்க;
விலங்குடைத்த
தமிழீழத்தாய் மண்ணில்
அடுப்பேற்றிப் பொங்கலிட
எங்களுக்கும் நாள்வரும்.
அதுவரை....
பொங்கிடுமோ பொங்கல்.



ஓவியம்: 'செஞ்சோலை' சிறுவர்கள்

உறவினர் வந்து, துக்கம் விசாரித்துச் செல்லும் வழமை அங்கு இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதிலிருந்தே மாட்டுப் பொங்கலின் முக்கியத்துவத்தை அறியலாம்.

மாட்டுப் பொங்கலன்று மாலை காளை மாட்டை அடக்கும் ஜல்லிக் கட்டு, அல்லது மஞ்சனக்கட்டு என்னும் வீரவிளையாட்டு நடைபெறும். அறிவின் திறனும், உடலின் திண்மையும் கலந்து விளைந்ததே தமிழர் வீரம். இதுவே சங்க காலத்தில் காளையை அடக்கிக் கன்னியை மணமுடிப்பதற்குரிய, "ஏறுதழுவுதல்" என்னும் நிகழ்வாக நடைபெற்றது. ஆடவரும் மகளிரும் பல்வகை விளையாட்டுக்களில் ஈடுபட்டு மகிழ்வதும்; பெரியோரிடம் ஆசிபெறுவதுமாக வரும் நான்காவது நாளுக்குரியது கன்னிப் பொங்கல் என்று குறிப்பிடுவர்.

இவ்விதம் உழைப்பாலும்; உயரிய வீரத்தாலும்; களங்கமற்ற இயற்கையோடு கலந்த வழிபாட்டாலும் முதிர்ந்த இனமாக தமிழரை அடையாளங் காட்டி நின்றது பொங்கல் பண்டிகையாகும். உழவு என்பது உருவாக்குதலாகும். ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் ஏதோ ஒன்றை உருவாக்கும் நோக்கில் உழைத்தபடியே வாழ்கிறான். எனவே தான் பொங்கல் பண்டிகை உழைப்போர் எல்லோருக்கும் உரிய திருநாளாகவும்; தமிழர் எல்லாவகையிலும் ஒன்றுபடும் நாளாகவும் இருக்கிறது. மேலும் தமிழர் தேசத்தை விடுவிக்கும் பணியும்; பண்டைத் தமிழர் பண்பாடுகளை மீட்டெடுக்கும் காரியமும் ஒன்றையொன்று தழுவி வருவனவாகும். ஆகவேதான் சமீபகாலமாக பொங்கல் பண்டிகை குறித்து தமிழரிடையே புதிய பார்வை ஒன்றும் தோன்றிவரக் காண்கிறோம்.

— கி. செ. துரை

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கரையொதுங்கும் சடலங்கள்

முல்லைத்தீவு கரையோரத்தில் பல சடலங்கள் கரையொதுங்குகின்றன. இதேசமயம் பல சடலங்கள் கடல் பரப்பில் மிதப்பதைக் கண்டதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு மிதக்கும் சடலங்கள் பெரும்பாலும் இளைஞர் யுவதிகள் உடையவையாக இருக்கின்றன. இம்மர்மச் சடலங்கள் யாருடையவை என அடையாளம் காணப்படவில்லை. ஆயினும் இச்சடலங்கள் யாழ் குடாநாட்டு மக்களுடையவை எனப் பெருமளவில் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன. குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு கடலில் வீசப்பட்ட இளைஞர்கள், யுவதிகள் உடையவை என்றே கருதப்படுகின்றது. யாழ்குடாநாட்டில் கைதுசெய்யப்படுபவர்கள் பற்றிய தகவல்களை இராணுவம் வெளியிடுவதில்லை. ஆனால் இதுவரையில் சுமார் 500 பேர் வரையில் காணாமல் போயுள்ளதாக மனித உரிமை அமைப்புக்களின் தகவல்கள் உறுதி செய்கின்றன.

ஆனால் இவ்வாறு கைதுசெய்யப்படுபவர்கள் சித்திரவதையின் போது மரணம் அடைந்தாலோ அல்லது கொல்லப்பட்டாலோ அதனையும் மூடிமறைத்து விடுகின்றது இராணுவம். ஏனெனில் அவை வெளிவரும் பட்சத்தில், இராணுவத்தினருக்கும் அரசாங்கத்தினருக்கும் பெரும் சங்கடங்களை ஏற்படுத்துபவையாக மாறி விடுவதும் உண்டு. ஏற்கனவே இதற்கான உதாரணங்களும் இருக்கின்றன. சுண்டுக்குழி மாணவி கிரிசாந்தியினதும் அவரது உறவினர்களதும் மரணங்களை மூடிமறைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வி கண்டதையடுத்து, அது இராணுவத்திற்கும் அரசிற்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தியது. இந்த நிலையில் தான் தற்போது கொலைசெய்யப்படுவோர் சடலங்களை நிலத்தில் புதைப்பதற்குப்பதில் கடலில் வீசுவதை படையினர் செய்யத் தொடங்கி இருக்கின்றனர். இதன் மூலம் கொலைக்கு எவரும் பொறுப்பேற்கத் தேவையில்லை. அத்தோடு சகல சடலங்களும் ஒரே இடத்தில் கரை ஒதுங்கும் என்றோ வீசப்படும் சடலங்கள் எல்லாம் கரைவந்து சேரும் என்றோ எதிர்பார்க்க முடியாது. ஆகையினால் சடலங்களைக் கடலில் வீசுவது என்பது அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டிய தேவையை இல்லாமல் செய்வதோடு சடலங்கள் பல மறைக்கப்படுவதற்கு காரணமில்லாமல் போகின்றது. இதனால் இம்முறையானது சந்திரிகா அரசுக்கும் அதன் ஆயுதப்படைக்கும் எதிர்கால நெருக்கடிகளைத் தவிர்க்கும் ஒரு மார்க்கமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் முல்லைத்தீவு கரையோரத்தில் ஒதுங்கும் சடலங்கள் தமிழருடையவை என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய காற்றோட்ட ஒழுங்கில் யாழ் குடாநாட்டின் கிழக்கு கடற்பரப்பில் வீசப்படும் சடலங்களே முல்லைத்தீவு கரையோரத்தில் ஒதுங்க முடியும். இதே வேளை முல்லைக் கரைக்கு வடக்கே உள்ள கரைப்பகுதியும் சிறிலங்கா கடற்படையின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. ஆகையினால் அப்பகுதியில் இருந்து மிதந்து வரும் சடலங்கள் படையினரால் கடலில் வீசப்பட்டிருக்காமல் வேறு யாரால் வீசப்பட்டவையாக இருக்கும்?

இதேவேளை இந்த நடவடிக்கை நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் ஒரு இன அழிப்பு நடவடிக்கையாகவே இருக்க முடியும். ஏனெனில் இதனைத் தனியாக சில படையினரோ அன்றி ஒரு படைப்பிரிவோ மேற்கொள்ள முடியாது. அதாவது இராணுவமோ பொலிசாரோ கைது செய்பவர்களைக் கடலில் வீசுவதற்கு அதற்கு விமானப்படையோ அன்றி கடற்படையோ உதவியாக வேண்டும். ஆகையினால் இப்படுகொலைகளை ஆயுதப்படையின் உயர்பீடத்தில் இருந்து அரசியல் தலைமைப்பீடம் வரை சம்பந்தப்பட்டதாகவே நிச்சயம் இருக்க முடியும். இல்லாவிடில் இதற்கு ஏற்ற வகையில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்பதில் மட்டுமல்ல அதனை உடன் வெளியில் வராமல் தடுத்து விடவும் முடியாது. ஆனால் எதுவாக இருந்தாலும், காலம் சென்றாலும் உண்மைகள் வெளி வருவதை ஒருவராலும் தடுத்து விட முடியாது.

---

## கொழும்பில் இருந்து வெளி வரும் 'சண்டே லீடர்' எனும் பத்திரிகையில் காமினி விக்னரட்ன எழுதிய கட்டுரையில் இருந்து சில பகுதிகள்:

**தமிழீழ எல்லைகளைப் பற்றிப் பேசுகின்ற காலம் வந்து விட்டது**

எனது கணிப்பின் படி 30,000 முதல் 50,000 பேர் வரை தமிழீழப் போரில் தங்களது உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். இத்தகைய நிலையில் அவர்கள், மாகாணசபைகளையோ, பிராந்திய அதிகாரங்களோடு கூடிய சபைகளையோ ஏற்பார்கள் என நாம் நம்புவது முட்டாள்தனமானது.

எவ்வளவு கடினமான பாதையாக இருந்தாலும் தமிழீழம் ஒன்றே அவர்களது இலக்கு ஆகவே பேச்சுவார்த்தை என்று ஒன்று ஆரம்பிக்குமாயின் அது தமிழீழத்தின் எல்லைகளைப் பற்றியே தொடர வேண்டும்.

**புலம் பெயர்ந்த தமிழர்கள் பற்றி**

எட்டு லட்சம் தமிழர்கள் மேல் நாடுகளில் வாழுகின்றார்கள்; அவர்களுக்கு போதிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. மேற்கத்தைய நாடுகளில் உள்ள பல நல்ல விடயங்களைக் கற்றுக் கொள்ளுகின்றார்கள். நல்ல ஆளுமை மிக்கவர்களாக உருவாகி வருகின்றார்கள். இவர்கள் சிறிலங்காவிற்கு நிச்சயமாக திரும்பி வருவதில்லை வந்தால் அவர்கள் தமிழீழத்திற்கே வருவார்கள்; வரும்போது வெறும் கையோடு வரப்போவதில்லை இரண்டு லட்சம் தமிழர் ஒவ்வொரு வரும் 50,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பணம்கொண்டு வந்தால் பெரிய முதல் சேரும் அந்தப் பணம் சிறிலங்காவின் கடனைக் கூட தீர்க்கக்கூடியதாய் இருக்கும்.

**தமிழ்க்குழுக்கள் பற்றி**

தமிழ்க்குழுக்கள் சிங்கள ஆயுத பலத்தோடு போய் 94–ல் தமிழ்ப் பகுதிகளில் இருந்து ஒரு கையளவு வாக்குகளோடு வந்தார்கள். அவர்களுக்கு இப்போது கொழும்பில் பஜரோவில் பவனிவரத்தான் முடிகிறது. யாழ்ப்பாணத்தை நினைத்துப் பார்க்க முடியாது. பிரபாகரன் அவர்களைப் பிடிக்காவிட்டாலும் பொதுமக்கள் அவர்களை அடித்துக் கொண்டு விடுவார்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பள்ளியெழுச்சி



பஸ்ஸினுள் பயணிகள் வெளியேறும் வாசலுக்கு அருகில் உட்கார்ந்திருந்த எனக்குப் பக்கத்தில், இறங்குவதற்காக இப்போது எழுந்து வந்து நின்ற யுவதியைக் கவனித்தேன். அவளும் ஆலயத்துக்கு வந்திருந்ததை இப்போது என்னால் உணர முடிந்தது. நத்தார் ஆராதனைக்கு அவள் தனியாகத்தான் வந்திருந்தாள். அவளுக்குப் பதினேழு பதினெட்டு வயதிருக்கும் போல் தோன்றியது. அவளுடைய பெற்றோரோ அல்லது நண்பர்களோ அவளுடன் கூட வந்திருக்கவில்லை.

கிறிஸ்து பிறந்த நாள் நத்தார் என் பதையும்விட, அத்தினத்தையொட்டி வரும் விடுமுறைகள், விருந்துகள், பரிசுப்பொருட்கள், கொண்டாட்டங்கள் என்பன மட்டுமே பிரதான இடத்தை வகிக்கும் டென்மார்க சமுதாயத்தில், நத்தார் நாளன்று, காலையிலேயே சிரத்தையுடன் ஆலயத்துக்கு வந்து நற்கருணை விருந்திலும் பயபக்தியுடன் பங்குபற்றிய இந்த டெனிஸ் பெண்ணை நான் ஒரு அசாதாரணப் பிறவியாகவே கண்டேன். அவளையே நான் உற்றுப் பார்ப்பதை உணர்ந்த அப் பெண் என்னைப் பார்த்து புன்னகை செய்தபோதுதான் அது நடந்தது.

திடீரென அவளுடைய மூக்கிலிருந்து இரத்தம் கொட்ட ஆரம்பித்து விட்டது. அவள் தன்னிடமிருந்த காகிதக் கைகுட்டையினால் மூக்கை அவசரமாகப் பொத்திப் பிடித்துங்கூட இரத்தப் பெருக்கு நிற்கவில்லை. ஒரு கையினால் மூக்கைப் பொத்திப் பிடித்த வாறே மறுகையினால் ஜக்கற் பைகளுக்குள் அவசரமாக கைக்குட்டைகளைத் தேடினாள்.

கடுங்குளிர் காலங்களில் சிலசமயம் எனக்கும் இதைப்போன்று நேர்வதினால், எப்போதுமே நான் கைவசம் வைத்திருக்கும் கைக்குட்டைகளை சட்டென எடுத்து அவளிடம் நீட்டினேன். விழிகளில் நன்றியுணர்வு பொங்க அவள் அவற்றை வாங்கி மூக்கைப் பொத்திப் பிடித்த போது பஸ்தரிப்பில் பஸ் நிற்கவே அவள் இறங்கிக் கொண்டாள். நான் செய்த அச்சிறு உதவியை மிகவும் பெரிதாகக் கருதி, இரத்தம் சிந்தும் தனது மூக்கையும் பொருட்படுத்தாது அவள் தனது கையை அசைத்து நன்றி தெரிவித்த போது நானும் கையை அசைத்து விடை பெற்றுக் கொண்டேன்.

அப்போது தான், எனக்கருகில் சன்னல் பக்கமாக அமர்ந்திருந்த எனது கணவர் எனது சேலையைச் சுட்டிக் காட்டினார். கனதியான கறுத்த குளிர் காலக் கோட்டுக்குக் கீழே, உறைபனி போல் வெண்மையான எனது சேலையில், முழங்காற் பகுதிக்குச் சற்றுக் கீழே, ஒரு சொட்டு இரத்தம் ஒரு பெரிய வட்டப் பொட்டுப் போன்று சிந்தியிருந்தது. வெள்ளைநிறச் சேலையில் அப் புது இரத்தம் எடுப்பாகத் தெரிந்தது.

அது எனக்கு எமது ஊரில் மாரி காலத்தில் வரும் தம்பளப்பூச்சிகளின் ஞாபகத்தை ஏற்படுத்தியது. நானும் இந்தப் பெண்ணின் வயதாக இருந்த காலத்தில் எனது பள்ளிச் சீருடையில் ஒன்றிரண்டு தம்பளப் பூச்சிகளை தவழவிடுவதும் நினைவுக்கு வந்தது.

சீரான கதியில் ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸின் சன்னலூடாக பார்வையைச் செலுத்தினேன். நாலைந்து நாட்களாகவே கொட்டிய வெண்பனி, வயல்கள், வீடுகள், மரங்கள் யாவற்றையுமே போர்த்தியிருந்தது. பளிச்சென்று எறித்த வெய்யிலில் ஓரோர் சமயம் வெண்பனித் திட்டுக்கள் பளீரென்று ஒளிர்ந்தன. ஆங்காங்கே வீடுகளிலும், வேறு இடங்களிலும் காணப்பட்ட டென்மார்க் தேசியக் கொடிகளின் சிவப்பு நிறம் மட்டுமே தூக்கலாகத் தெரிந்து மீண்டும் இரத்தத்தையே நினைவுக்கு கொண்டு வந்தது.

... "உனக்காகச் சிந்தப்பட்ட இரத்தம்!".... ஆலயத்தில், நற்கருணையின் போது போதகர் திராட்சை ரசத்தைத் தந்து சொல்லியது இப்போது செவிக்குள் ஒலித்தது.

இயேசு தாம் காட்டிக் கொடுக்கப் பட்ட அன்று இராத்திரியிலே, தனது

www.tamilarangam.net

சீடர்களுக்கு திராட்சை ரசத்தை ஒரு கோப்பையில் விட்டு, 'இதைப் பானம் பண்ணுங்கள்.... இது உங்களுக்காகச் சிந்தப்படுகின்ற என்னுடைய இரத்தம்! இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூருங்கள்!' என்று சொல்லிக் கொடுத்தார்.

எமது பாவங்களைக் கழுவுவதற்காக இயேசு தனது குற்றமற்ற இரத்தத்தைப் பலியாகக் கொடுத்து உலக மக்களை இரட்சித்தார். இயேசுவின் உன்னத தியாகத்தையோ அல்லது அவருடைய போதனைகளையோ கவனத்துக்கு எடுக்காது, அவர் பிறந்தநாளையும் வெறும் கேளிக்கைகளில் மட்டுமே கழிக்கும் டென்மார்க்கின் பெரும்பாலான மக்களை எண்ணுகையில் எனக்கு ஒரு புறம் வேதனையாகவும் மறு புறம் வேடிக்கையாகவும் இருந்தது.

இங்கு பிறக்கும் குழந்தைகள் யாவருமே, கிறிஸ்த்தவர்களாகவே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு, டென்மார்க் தேசிய திருச்சபையில் அங்கத்தவர்கள் ஆகுகின்றனர். அதை விரும்பாதவர்கள் இச் சட்டத்திலிருந்து விலக்குப் பெறலாம். அதன் பின் இளம்பராயத்தை அடைகையில் இப் பிள்ளைகள், திடப்படுத்தல் அல்லது உறுதிபூசுதல் எனும் ஒரு சடங்கில் பங்குபற்றி, திருச்சபையில் முழுமையான அங்கத்தவர்களாகின்றனர். இது கூட அந்தச் சடங்கு சம்பந்தமாகக் கிடைக்கும் பரிசுகள், விருந்துகள் என்பனவற்றுக்காகவே முக்கால் வீதமான பிள்ளைகள் அதில் பங்குபற்றுகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது. இந்தச் சடங்கின் போதுதான் முதன் முதலில் அவர்களுக்கு இயேசுவின் திரு இரத்தமாக திராட்சை ரசம் வழங்கப்படுகின்றது. இது உனக்காகச் சிந்தப்படும் இரத்தம் என்ற வார்த்தைகளும் ஓதப்படுகின்றன. இந்த இளம் சமுதாயத்தினர் பலர் மீண்டும் ஆலயத்துக்கு வருவதேயில்லை. மத ஆசாரப்படி திருமணம் செய்ய விரும்பினால் அவர்களில் ஒரு சிலர் மீண்டும் ஆலயத்துக்கு வரக்கூடும். அதுவும் கூட பக்தியினால் உந்தப்பட்டல்ல என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே!

என்ன மனிதர்கள்!.. இப்படியும் ஒரு வாழ்க்கையா? பேரளவில் எல்லோரும் கிறிஸ்த்தவர்கள் தான்! ... ஆனால் நிஜவாழ்க்கையில்?.. என நான் எனக்குள்ளாகவே டெனிஸ் மக்களை விமர்சித்துக் கொண்ட போது எனது விழிகள் மறுபடியும் எனது சேலையில் இரத்தத் துளி விழுந்த இடத்தை ஏதேச்சையாக நாடின.

மறுபடியும் அந்த இளம் யுவதியின் முகமும், சிரிப்பும் என் மனதுக்குள் தெரிந்தது மட்டுமல்லாது, கூடவே இன்னுமோர் இளம் பெண்ணின் முகம் தோன்றியது.

அகிலா! ... ஆம். அவளுக்கும் இந்த டெனிஸ் யுவதியின் வயது தான்



இருக்கும்! அகிலாவின் நிறந்தான் என் போல் மாநிறமேயொழிய, இவளுடைய விழிகளைப் போலவே அவளுக்கும் எடுப்பான நாசி, அகன்ற விழிகள், களையான முகம். போராளிகளுக்கான சீருடையில் அவள்தான் எத்தனை கம்பீரமாக இருந்தாள்! அன்று அந்தக் கம்பீரத்திலும் ஒரு அசாதாரணக் கனிவு இருந்ததல்லவா! அவளுடைய தாயும் நானும் ஒன்றாகப் படித்தவர்கள் என்ற உணர்வினால் அவள் அன்று என்னில் தன் தாயைக் கண்டாளா?

94ம் ஆண்டு ஜூலை மாதம் 7ம் திகதியன்று தான் நான் அவளைக் கடைசியாகக் கண்டேன். அதற்கு முன், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், நானும் எனது கணவரும் டென்மார்க்குக்கு வரும் நாட்களில், ஆறுவயதுச் சிறுமியாகத் தன் தாயுடன் என் வீட்டுக்கு வந்திருந்தாள். மிக மிக அமைதி யான சுபாவம் கொண்ட அவள் எப்படி ஒரு போராளியாக மாறினாள், மாற நேர்ந்தது என்பன எனக்கு எப்போதுமே விளங்காத விஷயமாகவே இருந்தது.

கொழும்பிலிருந்து தாண்டிக்குளம் சென்று அங்கு தடைமுகாமில் அதிகாலையிலிருந்து நண்பகல் வரையில், கொளுத்தும் வெயிலில் கால்கடுக்க நான் நின்றிருந்தேன். பத்து வருடங்கள் டென்மார்க்கின் பாதுகாப்பு மிக்க, ஒழுங்கு முறைகள் கச்சிதமாகப் பேணப்படும் ஒரு சமுதாயத்தில் வாழ்ந்திருந்து விட்டு, அந்தத் தடைமுகாமின் கெடுபிடிகளும், திகிலும் நிலவிய சூழலில் நான் காலையிலிருந்து திக்குத்திக்கென அடிக்கும் நெஞ்சுடன் நின்றிருந்தேன்.

பத்து வருடங்கள் நான் காணாதிருந்த எனது உடன் பிறந்தோரைக் காண வேண்டும், இக் காலகட்டத்தினுள் ஒரு முறையேனும் எனது முகத்தைக் காணமலே மறைந்து போன எமது பெற்றோரின் பிரிவுத்துயர் தீர அவர்களுடன் கட்டியழ வேண்டும் என்றதோர் மூர்க்கமான ஏக்கமே என்னைத் தனியாகத் தாண்டிக்குளம் தடைமுகாமில் அன்று நிற்க வைத்திருந்தது.

சகோதரங்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்குமென இரண்டு பெரிய பெட்டிகளில் இங்கிருந்து நிறையவே பொருட்களை எடுத்துச் சென்றிருந்தேன். என்னால் தனியே தூக்க இயலாத அளவு பாரமான இரண்டு பெரிய பெட்டிகள்! குண்டுங்குழியும் நிறைந்த நிலத்தில் அவற்றில் ஒன்றை இழுத்துச் சென்று வரிசையில் சற்று முன்னே வைத்து விட்டு, பின் ஓடிவந்து மற்றப் பெட்டியை இழுத்துச் செல்லவேண்டும். இதற்கிடையில் இராணுவத்தானின் அதிகாரத்திமிர் நிறைந்த அதட்டல்கள். பெட்டிகளைத் திறந்து, பரிசோதனை என்ற பெயரில், துவேஷத்துடன் துணிகளும், சிறுபரிசுப் பொருட்களும் சிதறடிக்கப்பட்ட விதமும், அவற்றை நான் மறுபடியும் பெட்டிகளுள் அள்ளிப்போட்டுத் திணித்து பெட்டிகளை சரியாக மூட முடியாமல் திணறிய போது 'இக்மன்ட், இக்மன்ட்' எனச் சிங்களச் சிப்பாய் அதட்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டியதனால் ஏற்பட்ட கோபத்தை விழுங்கிக் கொண்டு, அவமானத்தால் விரல்கள் பதற நான் பட்ட பாடும், இப்போது நினைத்தாற்கூட நெஞ்சு படபடத்து இரத்தம் கொதிக்கின்றது.

எப்படியோ ஒருவாறு அந்த இரண்டு பெரிய பெட்டிகளுடன் நான் நடந்தும், ஓடியும், சைக்கிளில் தொத்தியும், எவருக்குமே சொந்தமற்ற நிலம் என்று அழைக்கப்படும் பரப்பைக் கடந்து, புலிகளின் கட்டுப்பாட்டு முகாமை அடைந்த போது எனக்குப் போதுமென்றாகிவிட்டது.

ஒருவாறு என்னைச் சுதாரித்துக் கொள்வதற்குள்தான் எத்தனை குளிர்ந்த வார்த்தைகள். அதுவும் தமிழ் வார்த்தைகள்!.. 'அக்கா! முதலிலை இதிலை இருந்து இந்தத் தண்ணியைக் குடியுங்கோ!... எந்த நாட்டிலை இருந்து வாறியள் அக்கா?' .. என அங்கிருந்த இயக்க யுவதிகள் என்னை உபசரித்த போது என் வயிற்றில் பாலை வார்த்தது போலிருந்தது.

அப்போதுதான் அங்கு அகிலா வந்தாள். அவள் மோட்டார் சைக்கிளில், முதுகில் இயந்திரத் துப்பாக்கி தொங்க வந்து இறங்கிய போது அவளை எனக்கு யாரென்று அடையாளம் தெரியவில்லை. அவள் தான் என்னை அடையாளம் கண்டு கொண்டு ஓடி வந்து 'மாமி! என்னைத் தெரியுமா? எனச் சிரித்தபடி கேட்டாள்.

ஒரு பத்து நிமிடங்கள்தான் அவள் என்னுடன் பேசியிருப்பாள். அதற்குள் தனக்கு அவசரமான வேலை இருப்பதாகக் கூறிவிட்டுப் போய் விட்டாள்.

அதற்கு அடுத்த நாள் தண்ணீரூற்று ஊற்றங்கரைப் பிள்ளையார் கோயிலின் அருகிலே அகிலாவின் தாயை நான் காண நேர்ந்தது. கிணற்றடி வாழைபோல் முன்பு எவ்வளவு செழுமையாக இருந்தவள் இப்போது மிகவும் இளைத்திருந்தாள். ஆயினும், பத்துவருட இடைவெளியின் பின்னர் என்னைக் கண்ட மகிழ்ச்சியில் கண்களில் நீர் பொங்க என்னைக் கட்டிக் கொண்டாள்.

அகிலாவை நான் ஓமந்தையில் கண்டதை அவளுக்குக் கூறியபோது, என்னை ஒருபுறமாக கூட்டிச் சென்று, கேணிச் சுவரில் இருத்தி, மகளைப் பற்றி ஆவலோடு விசாரித்தாள். தான் அவளைக் கண்டு மூன்று வருடங்களாகின்றனவாம் எனக் கண்ணீர் சொரிந்தவளுக்கு என்ன ஆறுதல் சொல்வதென்றே அன்று எனக்குத் தெரியவில்லை.

# இடம்பெயர்ந்து ஓடும் அவலம் இனியும் எமக்கு வேண்டாம்!

"நீ படிக்கக்கூடியவன், ஏன் இயக்கத்தில் இணைந்து அநியாயமாகச் சாகவேண்டும்?" என எனது நண்பர்கள் சிலர் கேட்டார்கள். அதற்கு நான், "இது வாழ்வதற்கான போராட்டம், இதில் இணைந்துகொண்டு வீரச்சாவெய்தியவர்களெல்லாம் அர்த்தமுள்ள வாழ்வுதான் வாழ்ந்திருக்கிறார்கள், கொழும்புக்கோ வேறு இடத்திற்கோ சென்று கூனிக்குறுகி படிப்பைத் தொடரும் மன நிலை எனக்கில்லை. எங்களைவிட படித்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எல்லாம் போராட்டத்தில் இணைந்துகொண்டுள்ளார்கள். அவர்களுடன் ஒப்பிடுகையில் நான் ஒரு தூசு".

இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டுள்ள சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவனான பதினைந்து வயதுடைய அமலதாஸ் எல்விஸ் பிறெஸ்லி.

இவர் தொடர்ந்து கூறுகையில், "சூரியக்கதிர் நடவடிக்கையைத் தொடர்ந்து தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்த நாம் இரண்டரை மாத காலம் சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு அருகாமையில் இருந்தோம். கிளிநொச்சி மீதான எதிரியின் தாக்குதல் ஆரம்பித்தவுடனேயே நான் போராட்டத்தில் இணைந்துகொண்டேன். ஏனெனில் கிளிநொச்சி ஆக்கிரமிக்கப்படுமானால் நான் வீணாகப் பிடிபட்டு அவமானப்படவோ, உயிரிழக்கவோ கூடும். அதற்கு நான் தயாரில்லை" எனத் தெரிவித்தார்.

"போராட்டத்தில் முழுமையாக இணையும் வரை எவ்விதமான பங்களிப்புக்களை வழங்கினீர்கள்?" என அவரிடம் கேட்டதற்கு "யாழ்ப்பாணத்தில் மாணவர் அமைப்பு செயலகத்தில் என்னாலான பங்களிப்புகளை வழங்கினேன். உலர் உணவு சேகரித்தல், இரத்ததானம் செய்பவர்களைத் திரட்டுதல், எதிரியின் தாக்குதலில் காயமுறும் பொதுமக்களை பராமரித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வந்தேன். சாவகச்சேரியில் நிகழ்ந்த தவறுதலான வெடிவிபத்தில் காயமுற்ற பொதுமக்களை பராமரிக்கும் பணியிலும் ஈடுபட்டேன். பரப்புரைப் பிரிவினருடனும் இணைந்து செயற்பட்டேன்" எனத் தெரிவித்தார்.

"உங்கள் எதிர்கால ஆசை என்ன?" என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், "எமது மக்கள் இனியும் இடம்பெயரக்கூடாது, அவர்கள் நிம்மதியாக வாழ வேண்டும். அந்நிலை உருவாகுவதற்கு தமிழீழம் விரைவில் கிடைக்கவேண்டும். பந்தெறிந்து விளையாடவேண்டிய எமது சந்ததி குண்டெறிந்து விளையாடக் கூடாது. இதற்காக நாம் அனைவரும் போராட்டத்தில் இணைய வேண்டும். இந்தப் போராட்டத்தை அடுத்த சந்ததியிடம் கையளிக்காமல் நாமே நடத்தி வெல்ல வேண்டும்" எனத் தெரிவித்தார் அமலதாஸ் எல்விஸ் பிறெஸ்லி.



www.tamilarangam.net

அப்போது மட்டுமல்ல, பின்னர் நான் டென்மார்க்குக்கு வந்தபின் அவளுக்கு எழுதிச் சொல்லவேண்டிய ஆறுதல் வார்த்தைகளைக்கூட நான் எழுதாமல் விட்டது இப்போது என் மனதை வாள்கொண்டு அரிவது போலிருந்தது.

நான் ஊரில் தங்கியிருந்த பதினைந்து நாட்களும் எப்படி ஓடிக் கழிந்தன என்பது இப்போது நினைத்தாலும் வியப்பாக இருக்கின்றது. இரவு பகலென்று பாராது உறவுகளுடனும், ஊருடனும் பேசிக்கொண்டதும், உறவுக்குள் முளைத்துள்ள புதிய புதிய முகங்களைக் கண்டு வியப்பதும், மறைந்தவர்களை நினைந்து அழுவதுமாக அந்தப் பதினைந்து நாட்களும் ஓடி மறைந்தன. அந்த அனுபவங்கள் யாவும் இப்போது நினைக்கையில் கனவில் நடந்த சம்பவங்கள் போலல்லவா இருக்கின்றன!

ஆனால், அவற்றில் மிகவும் ஆழமாக என்னைப் பாதித்தது அகிலாவின் தாயின் வேண்டுகோளை என்னால் நிறைவேற்ற முடியாமற்போன எனது துர்ப்பாக்கிய நிலையேதான்!

நான் ஊரைவிட்டுப் புறப்படுவதற்கு முதல்நாள் இரவு என்னிடம் வந்து ஒரு பொட்டலத்தைத் தந்து, "அகிலாவுக்குத் தொதல் எண்டால் சரியான விருப்பம்! ஓமந்தையில அவளைக் கண்டால் குடு!.. இல்லாட்டி அங்கே நிக்கிற பிள்ளையளிட்டைக் குடு.. அதுகள் குடுக்குங்கள்!" என்று சொல்லிய அந்த பாசம் நிறைந்த தாயை நினைக்கையில் இப்போதும் நெஞ்சு உருகுகின்றது!

ஓமந்தைக்கு அடுத்த நாள் நான் வந்தபோது அகிலாவை என்னால் காணமுடியவில்லை. அவளுடைய உடலைக்கூட காணும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. அந்த உடல் கிடந்த இடத்தை மட்டுமே என்னால் காண முடிந்தது. அகிலாவினுடைய குருதி தோய்ந்திருந்த அந்த இடத்தைப் பார்க்கையில் எனக்கு நெஞ்சே வெடித்து விடும் போலிருந்தது.!

முதல் நாள் இரவில் எதிரிகள் ஊடுருவி நுழைந்து புலிகளின் கட்டுப்பாட்டு நிலையத்துக்கும் தீவைத்து விட்டார்கள். ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்த காரியாலயக் கொட்டில்கள் எரிந்து விட்டிருந்தன. எதிரிகளைத் தேடியழிக்கும் முயற்சியில்தான் அகிலா தன் உயிரைக் கொடுத்திருந்தாள் என்பதை அங்குள்ள பிள்ளைகள் சொல்லி அறிந்தேன். பிள்ளைகள் இல்லாத எனக்குக் கூட அகிலாவின் தாயை நினைக்கையில் அடிவயிறு பற்றியெரிந்தது. தொதல் பொட்டலத்தை அந்தப் பிள்ளைகளிடம் கொடுத்து விட்டு வந்தேன்.

டென்மார்க் வந்ததுமே அகிலாவின் தாய்க்குக் கடிதம் எழுத உட்கார்ந்த போது, என்னால் அது முடியவில்லை. தான் கொடுத்தனுப்பிய தொதலை தனது மகள் உண்ணாமலே போய் விட்ட செய்தி அந்தத் தாய்க்குத் தெரியத்தான் வேண்டுமா? எழுதும் கடிதத்தில் அதைக் குறிப்பிடாமல் தான் விட முடியுமா? என்ற தவிப்பில் நான் கடிதத்தை எழுதாமலே இருந்து விட்டேன். இப்போது, அகிலாவின் முகத்தை நினைவுபடுத்தும் வகையில் இருந்த டெனிஸ் பெண்ணின் முகமும், அவள் மூக்கிலிருந்து கொட்டிய பச்சை இரத்தமும் என் மனதில், நான் அன்று அந்த ஆறுதல் கடிதத்தை எழுதாது விட்டது சரிதானா என உறுத்திக் கொண்டே இருந்தது.

இதற்கிடையில், நாம் இறங்கி வேறொரு பஸ் எடுக்க வேண்டிய பஸ் தரிப்பு நிலையம் வந்து விடவே, நானும் கணவரும் இறங்கி, எமது பஸ் எடுக்கும் இடத்தை நோக்கி நடந்தோம்.

ஒவ்வொரு தடவையும் காலை முன் வைத்து நடக்கையில், எனது சேலையில் இருந்த அந்த இரத்தப் பொட்டு கண்ணில் படுவதும் மறைவதுமாக இருந்தது. அது இன்னமும் நிறம் மங்கிக் கறையாக மாறிவிடாது இப்போதும் பளிச்சென்று தெரிந்தது.

மறுபடியும், மாரிகாலத்தில் எமது நாட்டின் சில பகுதிகளில், திடீரென்று ஓர்நாள் எல்லா இடமும் காணப்படும்

# ஆயுதப் போராட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாத நடவடிக்கை எனவும் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டாலேயே சமாதானப் பேச்சுவார்த்தை எனவும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா கூறிவருகின்றார். மாறாக விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டம் என்பதையும் அரசின் நிபந்தனைகள் ஏற்கக்கூடிவை அல்ல என்றும், அரசின் நிபந்தனைகள் ஒரு சரணாகதியாக அமையுமே ஒழிய சமாதானப் பேச்சுவார்த்தை நடப்பதற்கு அடிப்படையாக அமையப்போவதில்லை எனவும் விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் இந்நிலைப்பாடு நியாயமானது என்பதையும் இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்கள், ஒடுக்குமுறைகள் என்பனவற்றை அவதானித்த எவருமே ஏற்றுக் கொள்ளாமல் இருக்க மாட்டார்ர்கள். இந்த வகையில் தேசிய சமாதானப் பேரவையின் அமைப்பாளர் அஜித் ரூபசிங்கவும் இதனை ஒப்புக் கொண்டுள்ளார். அண்மையில் கொழும்பு வாரப் பத்திரிகை ஒன்றிற்கு பேட்டி அளித்துள்ள அவர் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படாத இடத்து சமூகத்தில் உள்ள எந்தவொரு குழுவுக்கும் அரசுக்கும் எதிராக ஆயுதம் ஏந்தும் தார்மீக உரிமை உண்டு என்று கூறியுள்ளதோடு, ஓர் அரசாங்கம் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடும்போது அந்த மக்களுக்கு ஆயுதமேந்தும் உரிமையுள்ளது. அவ்வாறே புலிகளும் ஆயுதம் ஏந்தினர் எனவும் சுட்டிக் காட்டினர்.

ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியாக உருவானதே என்பது ஒருசிலர் ஆயுதங்கள் மீது கொண்டுள்ள விருப்பினாலோ அன்றி வன்முறைமீது கொண்டுள்ள ஆவலினாலோ அல்ல. அவ்வாறு உருவாகுபவையும் உருவாக்கப்படுபவையும் கிருமினல் குற்றங்களுக்காகவே மக்கள் மத்தியில் செயற்படும் அல்லது வெறுக்கப்படும். அவை மக்களின் உணர்வுபூர்வ ஆதரவு பெற்றவையாகவும் மக்களின் அங்கீகாரம் பெற்றவையாகவும் ஒருபோதும் இருந்துவிடுபவையல்ல. தேசிய இனவிடுதலைப் போராட்டம் என்பதற்கு மக்களின் உணர்வுபூர்வ ஆதரவும் தார்மீக ரீதியிலான பலமும் இருத்தல் அவசியம். அவ்வாறு இருக்கும் பட்சத்திலேயே போராட்டத்தை எவரும் நடத்திச் செல்ல முடியும். அவ்வாறானதொரு சூழ்நிலை உருவாவதானது மக்கள் தமது உரிமைகளைச் சாத்வீக ரீதியிலான முறையில் வென்றெடுக்கமுடியாத என்ற நிலை ஒன்று உருவாகும் போதே சாத்தியமானதாகும். அவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே ஆயுதப்போராட்டம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இரத்தாம்பர நிறத் தம்பளப்பூச்சிகள் என் கண்ணுக்குள் தோன்றின.

சிறியதொரு புளியங்கொட்டை அளவிலும், அதனிலும் சிறியதாகவும் மெத்தென்று வெல்வெற் போன்றிருக்கும் தம்பளப்பூச்சிகளை நானும் எனது நண்பிகளும் எடுத்து உள்ளங்கையிலே வைத்து, அவற்றின் அற்புதமான அழகை அந்த இளங் குமரப்பருவகால வாழ்வில் மிகவும் ரசிப்பதுண்டு. எமது கைபட்டதுமே, கண்ணுக்கு இலகுவில் தெரியாத துளித்துளிக் கால்களை தமது உடலின் கீழ் பதுக்கிக் கொண்டு, சற்றுநேரம் சலனமெதுவுமே இன்றி இருந்து விட்டு, பின் ஆபத்து அகன்று விட்டதென நினைத்துக் கொண்டு மெல்ல ஊர ஆரம்பிக்கும் அந்த அழகான சின்னஞ்சிறு உயிர்கள் இந்த உலகத்தில் எதற்காகத் திடீரென்று மாரி காலத்தில் மட்டும் தோன்றுகின்றன. அவை எங்கிருந்து வருகின்றன? திடீரென தோன்றியது போலவே இரண்டொரு நாட்களில் திடீரென மறைந்து போகும் அந்த அற்புதப் பிறவிகள் எங்கே போகின்றன? ஏதாவது பட்சிகள், மிருகங்கள் அவற்றைத் தமக்கு இரையாக்கிக் கொள்கின்றனவா? என்ற கேள்விகள் என் இளம் மனதிலே ஓரோர் சமயம் தோன்றிய போதும் அவற்றுக்கு விடை காணவேண்டும் என்ற ஆவலோ அன்றி ஆர்வமோ அன்று என்னிடம் ஏற்படாததை இப்போது நினைக்கையில் வியப்பாக இருந்தது.

மறுபடியும் அகிலாவின் கம்பீரமான தோற்றமும், கனிவான சிரிப்பும் மனத்திரையில் தோன்றின. இதுவரையில் இல்லாத வகையில் இன்று நான் அகிலாவைப்பற்றி அதிகமாகவே சிந்திக்கத் தலைப்பட்டேன்.

ஆலயத்தில் திராட்சைரசம் பருகுகையில் காதோரம் ஒலித்த 'உனக்காகச் சிந்தப்படும் இரத்தம்' என்ற வார்த்தைகளும், எனது வெள்ளைச் சேலையில் இன்னமும் பளிச்சென்றிருந்த இரத்தப் பொட்டும், மெத்தென்ற இரத்தாம்பரத் தம்பளப்பூச்சிகளும், இவற்றுடன் கூடவே அகிலாவின் முகமும் மாறி மாறி நினைவை அலைக்கழித்தன. கால்கள் சோரவே நான் அங்கிருந்த வாங்கில் அமர்ந்து கொண்டேன்.

எனது நிலையை உணர்ந்த எனது கணவர் 'என்ன தலையைச் சுத்துதா?.... காலையிலிருந்து ஒண்டுஞ் சாப்பிடேல்லை..... அதுதான்! நான் உதிலை ஸ்டேசன் கன்ரீனிலை ஏதாவது வாங்கி வாறன்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

எமக்குச் சற்று அப்பால் நின்ற ஒரு நடுத்தர வயதான டெனிஸ் மாது எனது நிலையைக் கவனித்துப் புரிந்து கொண்டவராய் விரைந்து வந்து, என்னருகில் அமர்ந்துகொண்டு தன்னிடமிருந்த ஒரு 'பெப்பர்மின்ற்' போன்றதொரு இனிப்பைத் தந்தார்.

நாவின்மேல் விருவிரெனக் கரைந்த அந்த இனிப்பின் தன்மை இரண்டொரு நிமிடங்களுக்குள் எனது தளர்வைப் போக்கி ஆசுவாசப்படுத்தியது. அவருக்கு நான் நன்றி கூறியதுமே அவர் என்னிடம் வினவியது 'நீங்கள் தமிழர் அல்லவா?' என்பது தான். 'எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?' என நான் வியப்புடன் கேட்டபோது 'நான் வசிக்கும் நகரத்தில் தமிழர்கள் பலர் உண்டு!.... அத்துடன் நான் வளர்ந்தவர்களுக்கான மொழிப் பாடசாலையொன்றில் ஆசிரியராக இருக்கின்றேன்... என்னிடம் இப்போதுங் கூட சில தமிழர்கள் டெனிஸ் மொழி கற்கின்றனர்' என அவர் கூறியதைத் தொடர்ந்து நாம் பேசிக்கொண்டோம்.

முதியோர் இல்லத்தில் இருக்கும் தனது வயதான தாயாரைப் பார்த்துச் செல்வதற்காக அவர் இந்த நகருக்கு வந்திருந்தார் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். நானும் எனது கணவரும் அடுத்த நகரிலிருக்கும் தேவாலயத்திற்கு கிறிஸ்மஸ் ஆராதனைக்குச் சென்று வருவதாக நான் கூறியபோது அந்த ஆசிரியை சிரித்துக் கொண்டே 'பெயரளவில் நானும் ஓர் கிறிஸ்த்தவன் தான்! ஆனால் நான் ஆலயத்துக்குச் சென்று பல ஆண்டுகளாகின்றன!' என்றபோது எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

---

வளரமுடியும். ஏனெனில் மக்கள் எப்பொழுதும் சமாதானத்துடனும், சுபீட்சத்துடனுமான நிம்மதியான ஒரு வாழ்வையே விரும்புவர். அவர்கள் ஆயுதங்களையும் வன்முறையையும் வரவேற்பவர்களாக இருக்கமாட்டார்கள். அவ்வாறான மக்களின் பொதுப் பண்பிற்கு மாறான வகையில் ஆயுதப் போராட்டம் ஒன்று வளர்ச்சியடைந்து செல்கின்றதென்றால் மக்கள் தமக்கு நியாயம் கிடைக்கவில்லை, ஆயுதமும் இரத்தமும் அன்றி தமது நியாயங்கள் பெறப்பட முடியாது என்ற ரீதியிலேயே ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கவும் அதில் பங்கு கொள்ளவும் முனைகின்றனர் என்பதே யதார்த்தமாய் இருத்தல் வேண்டும். அதனால் இவ்வாறான முடிவொன்றிற்கு வந்துவிட்ட மக்களை மிரட்டியோ அன்றி துன்புறுத்தியோ அவர்களை அப்போராட்டத்திலிருந்து விலகச் செய்து விடலாம் அன்றி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடலாம் எனக் கருதினால் அது வெற்றியளிக்கமாட்டாது. ஏனெனில் மக்கள் இவையெல்லாம் ஏற்படும் எனத் தெரியாமல் இப்போராட்டங்களை ஆரம்பிப்பது இல்லை. சிலசமயம் அவர்கள் எதிர்பார்த்ததைவிட சற்று அதிகமாக நெருக்குதல்கள், துன்பங்கள் ஏற்படுவதாகவும் இருக்கலாம். அதற்காக அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு விடமாட்டார்கள். ஏனெனில் அது ஒரு தனிநபரின் முடிவல்ல. அது ஒரு சமூகத்தின் முடிவாகும்.

ஆனால் இதனை அரசாங்கம், பயங்கரவாதம் என்றோ அன்றி இராணுவ ரீதியில் தீர்வு கண்டு விடலாமென்றோ எண்ணுவதும், செயற்படுவதும் மடமைத்தனம் ஆகும். உள்நாட்டு யுத்தத்தினால் பல பிரச்சனைகள் ஏற்பட்ட போதும் சரியான முடிவுகளைத் தைரியத்துடன் மேற்கொண்டு இனப் பிரச்சனையைத் தீர்த்துவைக்க அரசாங்கம் திடசங்கல்பம் பூண்டுள்ளது என ஜனாதிபதி சந்திரிகா கூறிக்கொண்டு யுத்தத்தை நடாத்திக் கொண்டு செல்வது இனப் பிரச்சனைத் தீர்வுக்கு உதவப் போவதில்லை.

★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆலயத்துக்குள் வருடக்கணக்காகப் போகாமலிருக்கட்டும், பரவாயில்லை, ஆனால் அதற்காகச் சிறிதேனும் குற்றவுணர்வு இன்றி, சிரித்துக்கொண்டே சொல்கின்றாரே!... இந்த அழகில் இவர் ஒரு ஆசிரியையாம்.

எனது உள்ளப் பொருமலை எந்த வகையிலாவது, நாசூக்காக வெளிப்படுத்த வேண்டும் போலிருந்தது. நானும் சிரித்துக் கொண்டே கூறினேன், 'நான் டென்மார்க்குக்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன! ஆனால் இத்தனை வருடங்களிலும் நான் ஆலயத்துக்கு ஆராதனைக்குச் செல்லாத ஞாயிற்றுக் கிழமைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம்!' அதைக் கேட்டு அந்த டெனிஸ் ஆசிரியை 'அப்படியா! நம்ப முடியவில்லையே!' என வியந்து கொண்டாரேயொழிய. எனது குத்தலான பேச்சு அவரைச் சிறிதேனும் பாதித்ததாகத் தெரிவில்லை.!

இதற்குள் எனது கணவர் வந்துவிடவே அவரை நான் ஆசிரியைக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன்.

அப்போது தான் அந்த ஆசிரியை, தான் கேட்க நினைத்தது எதுவோ மறுபடியும் ஞாபகத்துக்கு வந்தது போல் எம்மிடம் ஒரு விஷயத்தையிட்டுக் கேட்டார். 'கடந்த சனிக்கிழமை எம்முடைய நகரத்தில் வாழும் தமிழர்கள் ஒரு கவனஈர்ப்பு ஊர்வலத்தை நடத்தியிருந்தார்களே... அதற்கு நீங்களும் வந்திருந்தீர்களா? நானும் போயிருந்தேன்!' அதற்கு எனது கணவர் தான் பதில் சொன்னார். 'நாங்கள் வசிப்பது ஒரு சிறிய கிராமத்தில்தான்!.. அங்கு எம்மைத் தவிர வேறு தமிழர்கள் கிடையாது. அதனால் தமிழர்கள் சம்பந்தமான எல்லா விஷயங்களுமே எமக்குத் தெரியாது... அத்துடன் எந்த விதமான அரசியல் விஷயங்களிலும் நாம் ஈடுபடுவது கிடையாது.. நாமும் எமது வேலையும், ஆலயமும் என அமைதியாக வாழ்கின்றோம்!... அது சரி! எதற்காகக் கவனஈர்ப்பு ஊர்வலம் நடத்தினார்கள்?' என எனது கணவர் கூறியதை நம்ப முடியாதது போலவும், அதேசமயம் 'இதைக் கூடத் தெரியாமலா இருக்கிறீர்கள்!' என ஆச்சரியப்படுவது போலவும் இருந்தது அந்த ஆசிரியையின் முகத்தோற்றம்.

ஆயினும் அவர் தொடர்ந்து கூறினார், 'உங்களுடைய நாட்டிலே, வன்னியிலே, கிட்டத்தட்ட மூன்று இலட்சம் மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக இருக்கின்றனர் அல்லவா! சிறீலங்கா அரசாங்கம் அவர்களுக்கு உணவு, மருந்து முதலிய அத்தியாவசியப் பொருட்கள் கூட கிடைக்காமல் பொருளாதாரத் தடையைப் போட்டிருப்பதுமன்றி, அவர்கள் மேல் குண்டுகளையும், ஷெல்களையும் தினமும் போட்டுக் கொல்கின்றதே! இந்த அநியாயங்கள் ஒன்றும் வெளியுலகுக்குத் தெரியாமல் இருப்பதற்காக அங்கு வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள் எவரும் போகக்கூடாதென்ற தடையையும் அல்லவா போட்டிருக்கின்றது சிறீலங்கா அரசு! இது மட்டுமா? சிங்கள இராணுவம் இப்போது ஆக்கிரமித்துள்ள யாழ்ப்பாணப் பிரதேசத்தில் எத்தனை அப்பாவிப் பொதுமக்கள் தினமும் கொல்லப்படுகின்றனர் தெரியுமா?.. இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமலே போய்விட்ட இளம் வாலிபர்களும், யுவதிகளும் எத்தனை பேர் எனத் தெரியுமா? கிருஷாந்தி என்ற பதினெட்டு வயதுப் பாடசாலை மாணவி, பதினொரு இராணுவ மிருகங்களால் கூட்டாகப் பலாத்காரம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்டது தெரியுமா? அவள் எங்கே எனத் தேடிச் சென்ற அவளது தாயையும், தம்பியையும், பக்கத்து வீட்டுக்காரரையும் அந்த இராணுவம் கொன்றது தெரியுமா? இந்த விஷயங்களெல்லாம் உலக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்! உலக மக்கள், சிறீலங்கா அரசாங்கத்தை, இந்த அநியாயங்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என வற்புறுத்த வேண்டும். அதற்காக இங்குள்ள எம் போன்ற டெனிஸ் மக்களின் கவனத்தையும், ஆதரவையும் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி ஆங்காங்கே கவனஈர்ப்புக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்துகின்றனர்!.. இதற்குப் பெயர் அரசியல் இல்லை! இதற்குப் பெயர் மனிதனை மனிதன் நேசிப்பது! மனிதாபிமானம் என்பது இதுதான்!' என சற்றுப் படபடத்து அவர் கூறிக்கொண்டிருக்கையில் எமது பஸ் வந்துவிடவே, நாம் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு பஸ்ஸினுள் ஏறிக் கொண்டோம்.

**இதுவரை யாருடைய பசியையாவது, தாகத்தையாவது தீர்த்திருக்கின்றோமா? யாருக்காவது உடைகளைக் கொடுத்திருக்கின்றோமா? யாராவது அந்நியருக்கு ஆதரவு வழங்கியிருக்கின்றோமா? நோயாளரை வைத்திய சாலையிலும், கைதிகளைச் சிறையிலும் என்றாவது ஒரு நாள் பார்த்து ஆறுதல் சொல்லியிருக்கின்றோமா?**

நான் வீடுவந்து சேரும் வரை அந்த ஆசிரியையின் குரல் என் மனதுக்குள் ஒலித்தவாறே இருந்தது. வீட்டிற்கு வந்து சேலையைக் களைந்து போட்ட போது, அதிலிருந்த இரத்தப்பொட்டு எமது நாட்டில் சிந்தப்படும் குருதிக் கெல்லாம் ஒரு அடையாளச் சின்னம் போல் எனக்குத் தோன்றியது!

மத்தியான உணவருந்திய பின்னர் எனது கணவர் இறுகப் போர்த்திக் கொண்டு படுத்து விட்டார். விடுமுறை நாட்களில் மட்டுமே கிடைக்கக் கூடிய இந்த சுகத்தை நாம் அனுபவிக்கத் தவறுவதில்லை. ஆனால் எனக்கோ, படுக்கையில் படுத்த போதும் மனம் அமைதியடையவில்லை. நத்தார் தினத்துக்கான தயாரித்த பிரியாணி கூடச் சரிவரத் தொண்டைக்குள் இறங்கவில்லை. காலையில் நடந்த நிகழ்ச்சிகளும், அவை தொடர்பான சில விஷயங்களும் என் மனதை சதா அலைக்கழித்த வண்ணமே இருந்தன.

மன அமைதியை நாடி அடுத்த அறையினுள் இயேசுநாதர் படம் வைக்கப்பட்டிருந்த மூலைக்குச் சென்று அங்கிருந்த மெழுவர்த்தியை ஏற்றிவிட்டு, கண்களை மூடிப் பிராத்திக்க ஆரம்பித்தேன்.

எவ்வளவுதான் முயன்ற போதும் மனதை ஒருமுகப்படுத்தி தியானிக்க முடியவில்லை. வேதாகமத்தை வாசித்தாலாவது அமைதி ஏற்படுமா என ஒரு எண்ணம் தோன்றவே, வேதாகமப் புத்தகத்தை எடுத்து விரித்தேன்.

திறக்கப்பட்ட பக்கத்தில் எனது கண்களில் பட்ட வசனத்தைப் படிக்க ஆரம்பித்தேன்.

..... 'பசியாய் இருந்தேன் நீங்கள் எனக்குப் போஜனங் கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை. அந்நியனாயிருந்தேன் நீங்கள் எனக்கு என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை. வஸ்திரமில்லாதவனாயிருந்தேன் நீங்கள் வஸ்திரம் கொடுக்கவில்லை. வியாதியுள்ளவனாயும், காவலில் அடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை' என்பார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அப்போது அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக, ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலில் அடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள்.

அப்பொழுது அவர், அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, 'மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே சொல்லுகின்றேன்' என்பார்...

இயேசு மறுபடியும் இந்த உலகில் மகிமை பொருந்திய இராஜாவாக வருவார். அப்போது அவர் எம்மை நியாயந்தீர்த்து, நல்லவர்களுக்கு மோட்சத்தையும், தீயவர்களுக்கு நரகத்தையும் அளிப்பார். அந்த நியாயத் தீர்ப்பு நாளிலேதான் அவர் இவ்வாறு கூறுவார் என்ற இந்த வேதவசனம், இன்று என் மனதுக்கு, நான் இதுவரை உணராத அதன் உண்மையை உணர்த்துவது போலிருந்தது.

நானும் எனது கணவரும் இதுவரை யாருடைய பசியையாவது, தாகத்தையாவது தீர்த்திருக்கின்றோமா? யாருக்காவது உடைகளைக் கொடுத்திருக்கின்றோமா? யாராவது அந்நியருக்கு ஆதரவு வழங்கியிருக்கின்றோமா? நோயாளரை வைத்தியசாலையிலும், கைதிகளைச் சிறையிலும் என்றாவது ஒரு நாள் பார்த்து ஆறுதல் சொல்லியிருக்கின்றோமா? இவற்றையெல்லாம் செய்யாதிருக்கும் நாம் எந்த வகையில் உண்மைக் கிறிஸ்தவர்களாவோம்?

பெயரளவில் மட்டும் கிறிஸ்தவர்களாக இன்று வாழ்வது, நான் இதுவரை எண்ணியது போன்று, டெனிஸ் மக்கள் மட்டுந்தானா? இடர்படும் மக்களுக்கு எந்தவகையிலும் உதவாமல், ஆலயத்துக்கு மட்டும் தவறாமல் சென்று, சடங்குகளை மட்டும் சரியான முறையில் நிறைவேற்றிவரும் நானும் எனது கணவரும் உண்மைக் கிறிஸ்தவர்கள்தானா!

உலகில் துன்பப்படும் மக்களுக்கு உதவ எத்தனை டெனிஸ் அமைப்புக்களும், அவற்றில் பலன் கருதாது உழைக்கும் டெனிஸ் மக்கள் எத்தனையோ பேர் உள்ளனரே! அந்த அளவுக்கு எமது மனங்கள் விசாலித்தவையாக இருக்காது போனாலும் கூட, எமது உறவுகள், ஊரவர், இனம் என எமக்கு நெருங்கியோரின் துயர்துடைக்க நாமிருவரும் இதுவரை ஏதாவது செய்துள்ளோமா? துயரப்படுகிறவர்கள் வேறு யாருமில்லை, தானேதான் என இயேசு எவ்வளவு தெளிவாக வேதத்தில் கூறியிருக்கின்றார்! நாம் ஏன் இந்த உண்மையை உணரத் தவறினோம்?

இதைமட்டுமா நாம் உணரத்தவறினோம்? இந்த நாட்டிற்கு நாம் கையில் பணம் எதுவுமின்றி அகதிகளாக வந்தபோது, எமக்கு உணவு, உடை, இருக்க இடம், நோய்க்கு மருந்து என அன்புடன் தந்து, அந்நியரான எம்மைத் தம் மத்தியில் ஓர் மக்களாக மதித்து ஏற்றுக் கொண்டது யார்? இன்று நாம் சுயமாகத் தொழில் செய்து எம்மை நாமே பராமரித்துக் கொண்டாலும் கூட, இந்த சுகவாழ்க்கைக்கு அத்திவாரமிட்டது டெனிஸ் மக்களல்லவா! அவர்கள் பெயரளவில்தான் கிறிஸ்தவர்கள் என்று கிண்டலாக அந்த ஆசிரியையிடம் நான் பேசியது எத்தனை வஞ்சகத்தனம்!

அதேசமயம் அவர் திருப்பி என்னிடம் 'நீங்களெல்லாம் பெயரளவில் தான் தமிழர்கள்! பெயரளவில் தான் மனிதர்கள்!' எனச் சொல்லியிருந்தால் என்னால் அவருக்கு என்ன பதிலைச் சொல்லியிருக்க முடியும்?

இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றும் என்னைச் சாட்டையால் அடிப்பது போல் மனதுள் எழுந்தன. அதேநேரம், மூக்கிலிருந்து இரத்தம் சிந்தச் சிரித்த டெனிஸ் பெண்ணின் கனிவான முகமும், அகிலாவின் கம்பீரமான முகமும், எனது சேலையில் இருக்கும் இரத்தப் பொட்டும், தம்பளப்பூச்சிகளும், நற்கருணையின்போது சொல்லப்பட்ட 'உனக்காகச் சிந்தப்பட்ட இரத்தம்!' என்ற வார்த்தைகளும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து என் மனதில் தோன்றிக் கொண்டேயிருந்தன.

நான் நிமிர்ந்து இயேசுவின் முகத்தை நோக்கினேன். எப்போதும் அன்பும், கனிவும், இரக்கமும் ததும்பும் அந்த தெய்வீக வதனத்தில் இப்போது ஒரு இளநகை மலர்வது போல் எனக்குத் தெரிந்தது.

சிறிது நேரம் அங்கேயே கைகூப்பி நின்று வணங்கிவிட்டு, படுத்திருந்த எனது கணவரை எழுப்புவதற்கு அவசரமாக ஓடினேன். இதுவரை நாம் தூங்கியது போதும் எனச் சொல்லத்தான் அவரை எழுப்பப் போகின்றேன்!

**— அ. பாலமனோகரன்**

# புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு நவீன ஆயுதங்கள் எவையும் ஈடாகா!

'எந்தவொரு நவீன ஆயுதங்களும் விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாததாகவே உள்ளன' என கொழும்பில் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தைப் பொறுத்தவரை டாங்கிகள், ஆட்லறிகள், நீண்டதூரம் சென்று தாக்கும் மோட்டார்கள், கவசவாகனங்கள் உட்பட இன்னும் பல நவீன ஆயுதங்களை பயன்படுத்தி யுத்தம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஆயினும், இராணுவத்தினரின் இழப்புக்கள் மிக மோசமாகவே இருந்து வருகின்றன. குறிப்பாக, விடுதலைப் புலிகளால் 1993 கடைசிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பூநகரி முகாம் மீதான தாக்குதலில் 750–க்கும் மேற்பட்ட இராணுவத்தினரும், 1996 நடுப்பகுதியில் முல்லைத்தீவு முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 1000–க்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் நாளாந்தம் வடக்கு – கிழக்குப் பகுதிகளில் நடைபெற்று வரும் மோதல்களைக் கருத்தில் கொண்டு பார்க்கின்றபோது, இலங்கையில் பலமான இரண்டு இராணுவங்கள் உள்ளதையே காட்டுகின்றது. சிறீலங்கா இராணுவத்தினரின் வளர்ச்சியையும், ஆயுத விஸ்தரிப்பையும் பார்த்தால் அது விடுதலைப் புலிகளினது வளர்ச்சியையே புலப்படுத்துகிறது.

இரு தரப்பினரும் நவீன ஆயுதங்களை பயன்படுத்துகின்றபோதும், எந்தவொரு நவீன ஆயுதங்களும் விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாததாகவேயுள்ளன எனவும் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏன் பிரெஞ்சுநாட்டவர் மாமிசபோசனத்தை வெறுக்கிறார்கள்?



பிரான்ஸ் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மாமிச உணவை உண்ணுவோர் தொகை குறைந்து கொண்டே வருகின்றமைக்கு அண்மையில் பரவிய 'மாட்டுப் பைத்திய' நோயும் ஒரு மறைமுகமான காரணமாக இருக்கலாமா என்ற கேள்விகளும் எழாமலில்லை. இருந்தும் இறைச்சியில் தேவைக்கதிகமான கலோரிகள் இருப்பதாலும், உயிர்க்கொல்லுதலை தற்கால சமூகம் வெறுப்பதாலும் மற்றும் இயற்கையான ஒரு வாழ்க்கை மீதான விரும்பும் மாமிச உணவு உண்போர் தொகையைக் குறைக்க காரணங்களாக அமைகின்றன.

இந்த மாற்றம் குறித்து 'Le nouvel Observateur' என்னும் பிரெஞ்சு சஞ்சிகை, 'இந்த மாற்றம் நாகரீக மாற்றங்களிலும் பார்க்க வேறுபட்டதாகவும் அதிகூடிய ஓர் வளர்ச்சியாகாவும் இருக்கிறது' என்கிறது.

மேலும் தொடரும் ஆய்வில் 'மாட்டுப் பைத்தியம்' நோய் தான் மரக்கறி வகைகளை விரும்பி உண்பதற்கு காரணமாக இருக்குமா? என்ற கேள்வியே வலுத்துக் காணப் படுகிறது. இது குறித்து பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளின் போது பிரான்சிலும் பல அபிவிருத்தி நாடுகளிலும் மாட்டு இறைச்சியை உண்ண விரும்பாமை இப்போது ஆரம்பித்த ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை என்பதையே தெளிவாகக் காட்டுகிறது. இந் நிலைமை 15 வருடங்களுக்கு மேலாகவே இருந்து வருகிறது. குதிரை இறைச்சியைப் பற்றி சொல்லவே தேவையில்லை. அதுவும் விரும்பப் படாத உணவாக மாறி வருகிறது. முயல் இறைச்சியையும் மக்களில் மிக அதிகமானோர் விரும்பி உண்பதில்லை. செம்மறியாட்டு இறைச்சி விற்பனையில் இன்னும் மாற்றமேதும் நிகழவில்லை என்ற போதிலும் அதிலும் மாற்றம் ஏற்படலாம் என எதிர் பார்க்கிறார்கள். தற்போது பன்றி இறைச்சி, பறவைகள் இறைச்சி, மீன் வகைகளும் மக்களால் பெரிதும் விரும்பி உண்ணப்படும் உணவு வகைகளில் உயர் நிலையில் உள்ளன. ஆனால் அதுவும் எவ்வளவு காலத்துக்கு தொடரும் என்பது கேள்விக் குறியாகி வருகிறது.

இதே சமயம் மக்களின் மரக்கறி வகைகளின் கொள்வனவு மிக அதிகமாகி வருகிறது. அனேகமானோர் மத்தியில் மரக்கறி வகைகள் விரும்பப் படுவனவாய் இருப்பதோடு குறிப்பாக இளைய சமூகத்தினர் மத்தியிலும், வாழ்க்கைத்தர அடிப் படையில் உயர்நிலையிலும், மத்திய நிலையிலும் உள்ளவர்களுமே இம்மாற்றத்தில் அதி தீவிர ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இம்மக்களில் பெரும்பாலானோர் மதுபானம், சிகரட், ரின் உணவு வகைகளை வெறுப்பதைப் போல இறைச்சியையும் வெறுக்கிறார்கள். அத்துடன் அவர்கள் இயற்கையாக வாழ்வதை உயிராய் கொண்டு. அதன் மேல் ஆர்வத்தையும் விரும்பத்தையும் வளர்த்து வருகிறார்கள்.

இறைச்சி கொழுப்பு நிறைந்த உணவாக இருப்பதனாலும் தோல் வியாதிகள், இரத்தோட்டக் குழாய்களில் ஏற்படும் பிரச்சினைகள் என்பவற்றோடு, மாட்டுப் பைத்திய நோயையும் இணைத்துப் பார்த்தே இறைச்சி உண்பது தவிர்க்கப்படுவதாக கூறலாம்.

ஒரு ஆய்வாளர் கருத்துப்படி,




இறைச்சி சாப்பிடாமலே உடலுக்கு தேவையான ஊட்டச் சத்துக்களை மரக்கறி, முட்டை, பால் வகைகளை உண்பதன் மூலம் ஆரோக்கியமாக சமநிலையில் மனிதன் வாழலாம் என உணவு ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

உதாரணமாக சோயாவையும், இறைச்சியையும் நாம் எடுத்து ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கையில் சோயாவானது மிகுந்த ஊட்டச்சக்திகளை கொண்டு, அதாவது இறைச்சி கொண்டிருக்கும் அதே ஊட்டச்சத்துக்களை அதிகளவில் கொண்டு, ஒரு பரிபூரண உணவாக விளங்குகின்றது. அத்தோடு சோறு, பருப்பு வகைகளில் செய்யப்பட்ட பாண், அவரை வகைகளை இணைத்துச் சாப்பிடுவதன் மூலமும், பழவகைகள், சலாத் வகைகளைச் சாப்பிடுவதன் மூலம் இறைச்சியின் தேவை இல்லாமல் செய்யப்படுகிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறைச்சி வகைகளை தொடர்ந்து சாப்பிடுவதால் சமிபாட்டுத் தொழிற்பாடுகளில் மிகுந்த சிரமம் ஏற்படுகின்றது. அத்துடன் தற்கால மேலைத்தேய நாட்டு மக்களின் வேலைப்பளுக்களின் கடினம் குறைந்து கொண்டு வருவதானால் மக்களுக்குத் தேவையான கலோரிகளின் தேவை குறைகின்றது. ஆகவே இது இறைச்சியின் நுகர்வையும் கணிசமாகக் குறைப்பதற்கான காரணியாக இருக்கின்றது.

சிறப்புப் பெண் மருத்துவரான கெலன் கொகன் (Helen Cohen) சொல்கிறார், 'மாட்டுப் பைத்தியம்' நோய் சர்வதேச ரீதியில் சகல மக்கள் தொடர்புச் சாதனங்களிலும் பெரும் சர்ச்சையை கிளப்பியதையிட்டு மக்கள் மத்தியில் பச்சை இறைச்சிகளை சாப்பிடும் பழக்கத்தில் சடுதியான மாற்றம் நிகழ்ந்தது. இதனால் கொழுப்பால் ஏற்படும்பல இருதய நோய்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைவதைப் பார்க்கலாம்.'

நாகரீக மாற்றமும், அழகியல் தொடர்பான சிந்தனைகளுமே உடலில் ஏற்படும் நோய்களைப் பற்றிய அச்சத்தை உளத்தில் ஏற்படுத்தி, இறைச்சி உண்பதைத் தவிர்க்க வைக்கிறது. அத்தோடு சமயம், கலாச்சார உணர்வுகளும் காரணமாக இருக்கின்றன.

1847 ம் ஆண்டு சைவ உணவு உண்பவர்களுக்காக ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. மிருகங்களை காப்பாற்றுவதற்கும், மனிதர்களின் ஆரோக்கியமான உடற்பேணலுக்கும், சூழலைப் பாதுகாப்பதற்கும், இயற்கைவளங்களைப் பேணுவதுமே இந்த அமைப்பின் நோக்கங்களாகும். இந்த அமைப்பினுடைய நூற்றியம்பதாவது ஆண்டு






நிறைவு விழா 1997ஐ ஒட்டி வருகிறது. இதற்காக ஒரு மாபெரும் தகவல் பிரச்சாரத்தை இவ்வமைப்பு இணைவலயத் தூடாக (இன்டர்நெட்) மேற்கொண்டுள்ளது.

- நிருபா

# கடலில் சந்தித்த பயங்கரங்களே என்னைப் போராடத் தூண்டின

விடுதலைப் போராட்டத்துடன் தன்னை இணைத்துக்கொண்ட கடற்றொழிலாளரான (கிளிநொச்சியைச் சேர்ந்த) கறுப்பையா மகேந்திரம் அவர்கள் 'ஈழநாதம்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் இருந்து:

"நான் கடற்றொழில் செய்பவன் வயிறுற்றுப்பிழைப்புக்காக தொழிலுக்கு சென்ற இடத்தில் நாளும் மரணபயத்துடன் செத்துப் பிழைக்க வேண்டியிருக்கிறது. பல தடவை மரணத்தின் வாசல் வரை சென்று திரும்பியுள்ளேன்.

ஒரு தடவை என்னுடன் படகில் தொழில் புரிந்து கொண்டிருந்த உதயகுமார் கடற்படையினரின் தாக்குதலில் தலையை இழந்து மரணமானார்.. இச்சம்பவத்தை நேரில் கண்ட எனது மன உணர்வுகளை என்னால் விபரிக்க முடியாதிருக்கிறது. இவ்வாறான அனுபவங்கள் எமது பரம்பரைக்கு இனிமேலும் நேரக்கூடாது.

கடலில் தொழில் செய்யும் உரிமையை பறிக்க முயலும் சிறிலங்கா படைகள் இப்போது எனது சொந்த இடத்தில் வாழும் உரிமையையும் பறித்து என்னை இடம்பெயர வைத்துள்ளது.

கடலில் எனக்கு கிடைத்த அனுபவங்கள் பயங்கரமானவை. பொக்கணைக் கடலில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் உதயகுமாரின் தலை துண்டிக்கப்பட்டது. இச்சம்பவம் என்னை அதிர வைத்தது. அச்சமயம் எனக்கு ஏற்பட்ட மன உணர்வை எப்படி விபரிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. நான் உயிரோடு திரும்புவேன் என்பதை நம்பமுடியாத நிலையில் வலையில் பிணைத்திருந்த கோசாவை பிடித்துக் கொண்டு நீந்தத் தொடங்கினேன். அச்சமயம் கோசாவின் மீதும் வேட்டுக்கள் விழுந்தன. இதில் நான் காயமடையாததும் அதிசயமே. இச் சமயத்தில் எண்ணெய்கான் எனது கையில் தட்டுப்படவே அதனை பிடித்துக் கொண்டு நீந்தத் தொடங்கினேன். ஒருவாறு மாத்தளன் வரை நீந்தி உயிர் தப்பினேன். அடுத்த நாள் உதயகுமாரின் உடல் கரையொதுங்கியதைக் காண முடிந்தது. அவரது சடலத்தை எடுத்து வந்து பொக்கணையில் இறுதிச் சடங்குளைச் செய்தோம்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் குடத்தனை கடலில் கட்டுமரத்தில் தொழில் செய்து கொண்டிருந்த போதும் இவ்வாறான அனுபவம் நேர்ந்தது. கடற்படையினரின் படகு நெருங்கும் சத்தத்துடன் வேட்டொலிகளும் கேட்டன. எம்மைவிட உயர தொலைவில் தொழில் செய்து கொண்டிருந்த சுமார் இருபது கட்டுமரங்களை நோக்கி படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அச்சமயத்தில் அதிஸ்டவசமாக எவரும் காயமடையவோ, உயிரிழக்கவோ இல்லை. அடுத்த நாள் எஞ்சின் பூட்டிய படகில் சென்று எமது கட்டுமரத்தை மீட்டு வந்தோம். இவ்வாறாக பல அநுபவங்களை கடலில் சந்தித்து விட்டேன்.

கடலில் எமது உரிமையை பறித்த படையினர் இன்று நான் பிறந்த கிளிநொச்சி மண்ணில் வாழும் உரிமையையும் பறித்து விட்டனர். தொடர்ந்து நாம் போகுமிடமெல்லாம் இராணுவ நடவடிக்கை தொடரலாம் என்ற செய்திகளே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கடலில் கிடைத்த அனுபவங்களின் போதே நான் எனது மரணத்துக்கு ஒரு பெறுமதியை உண்டாக்க வேண்டுமென தீர்மானித்தேன். கிளிநொச்சி மண்ணை இழந்த நிலையில் இது வாழ்வதற்கான போராட்டம் என்ற கருத்து என்னுள் வேரூன்றி விட்டது.

எனது மண்ணில் நான் சுதந்திரமாக கைவீசி நடக்கவும் எனது கடலில் நான் அச்சமின்றி தொழில் செய்யவும் நான் போராட வேண்டியது காலத்தின் நியதி.

www.tamilarangam.net

# அடிமைகளைக் காவுகொண்ட கிரேக்கக் கடல் அகதிகளையும் காவுகொள்கிறது

*24.12.1996 – இரவு 1.30 மணி*

உலகம் இருண்டு போய்க் கிடந்தது.

கிறிஸ்த்து கிரேக்கக் கடலில் சிலுவைகளில் ஆணியடிக்கப்பட்டு, முள்முடி தரிக்கப்பட்டு உறைபனி நிறைந்த கடுங்குளிரில் கடலுக்குள் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் உலகம் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடியிருக்கின்றது.

கொடும்புயலுக்குள் சிக்கிய மக்கள்; அவர்களின் துன்பியல் நிறைந்த வாழ்வில் 'விடிவெள்ளியைக்' காட்டுகின்றோம் வாருங்கள் என பயணமுகவர்கள் அழைத்து வந்திருக்கிறார்கள்.

கானல்நீரைக் கண்டு ஓடி மாய்கின்ற மான் கூட்டம் போல் ஆகிவிட்டவர்களின் புலம் பெயர் துயரக்கதைகள் தொடர்கதைகளாகவே விரிந்து கொண்டிருக்கின்றன.

ஆறு விழுங்குவதும், பனிப்புயல் அடித்து மூடுவதும், அடைபட்டு திறபடாத லொறிகளுக்குள் மாண்டு போவதும், காடுகளுக்குள் திசைகெட்டு வீழ்ந்து சாவதும், கடும் காற்றும், பனியும் வீசும் கடலில் இரத்தம் உறைய வைக்கும் வண்ணமாய் சாவதுமாய் புலம்பெயர்ந்த பட்சிகளின் வாழ்வு நீளுகின்றது.

உயரினுமினிய தாய் நிலத்தைப் பிரிந்து உறைபனி நிறைந்த கடலுக்குள் சிலுவை சுமந்த மக்களில் சிலர் அள்ளுண்டு போக கிரேக்கக் கடல் உறைந்தது.

வெளியில் தெரியாது மறைக்கப்பட்ட இந்த துயரின் கதையை தப்பியவர்கள் சொல்லிய போது 'ஐயோ எங்கள் நண்பர்கள் மூழ்குகிறார்களே காப்பாற்றுங்கள் என்று மாலுமியைக் கையெடுத்துக் கும்பிட்டிருக்கின்றார்கள். சந்திரிகா ஒருபுறம் கடலில் தமிழர் சடலங்களை தடயமே இன்றி வீசி மறைத்துக் கொண்டிருக்கையில், விடிவெள்ளியைக் காட்டுவதாக கூட்டி வந்த பயண முகவர் மறைந்து விட்டார். மாலுமி மது போதையில் கிரேக்கக் கடலின் சீற்றத்தை எதிர்கொள்ள முடியாதவனாய் பணிந்து போகின்றான். ஆபத்துக்களை எதிர்கொண்டு மேற்கொள்ளப்படும் எந்த விதமான முன்னேற்பாடும் இல்லாத அந்தக் கப்பலின் பயண ஒழுங்குகள் சரியானதாக இருக்கவில்லை, இது ஒரு ஆட்கடத்தலாக, வருவாய் தரும் கறுப்பு வியாபாரமான முறையில் நடந்து கொண்டமையால்தான் கடலில் அத்தகைய ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. மனித உயிர்களோடு உறவற்ற ஒரு கூட்டத்தினர் நடந்து கொண்டதைப் போன்ற இக் கொடூர நிகழ்வு சகல அசட்டையீனங்களின் பிரதிபலிப்பே; ஆடு மாடுகளை, செம்மறிக்கூட்டத்தை அடைத்து ஏற்றிச் செல்வது போல புலம்பெயரும் அகதிகளையும் பயணமுகவர்கள் ஏற்றி வந்திருக்கிறார்கள். ஆசிய நாட்டு அகதிகள் பலர் அக்கப்பலுக்குள் இருந்திருக்கிறார்கள்.

பசுமையும், செழிப்பும், வனப்பும், அழகும் நிறைந்த சொர்க்கத்தின் மனிதர்கள் சொர்க்கத்தை தேடிப் புறப்படுகின்ற இந்த துயரம் என்றுதான் சாகுமோ? தாயவள் பூமி அள்ளித் தருகின்ற ஆனந்த வாழ்வை அறியாது ஓடி தீயில் வீழ்ந்து மாயும் துயர் என்றுதான் சாகுமோ?

இந்தியக் கடற்படை வேறு அகதியாய் படகில் செல்லும் மக்களை கடலில் தாழ விட்டு விடுவதும், அகதிகளின் படகுகளை பறிப்பதும் ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்கையில், மார்கழி மாதம் பனியும் புகாருமாய் இருக்கும் காலநிலையையும் கருத்தில் எடுக்காது, 9ம் திகதி இரவு 10 மணியளவில் எகிப்தின் துறைமுக நகரான அலேஸ் சாந்தியாவிலிருந்து பல்வேறு ஆசிய நாட்டவர்களையும் சேர்ந்த 454 பேருடன் பனாமாவில் பதிவு செய்யப்பட்ட 'பிரெண்ட்ஷிப்' என்ற கப்பல் இத்தாலியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. பின்னர், 10ம் திகதி இரவு 10 மணியளவில் நடுக்கடற் பகுதியில் MDE Sealines என்ற கப்பலுக்கு அனைவரும் மாற்றப்பட்டு இருக்கின்றார்கள்.

அகதிகளான பயணிகள் ஏராளமான நம்பிக்கைகளுடனும், கனவுகளுடனும் விரிந்த வானத்தின் கீழே கொந்தளிக்கும் கடலில் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கையில் 11–ஆம் திகதி மாலை மூன்று மணியளவில் ஜியோன்கான் என்ற கப்பலுக்கு மாற்றப்பட்டு இத்தாலியை நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டிருந்தனர்.

24–ஆம் திகதி இரவு இந்த மூன்றாவது கப்பலில் இருந்து 290 பேர் றோலர் ஒன்றில் ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டனர்.

றோலர் பயண ஒழுங்குகளுக்கு உதவாததாக இருந்திருக்கிறது. புறப்பட்டு சில நிமிடங்களிலேயே தீராத தாகம் கொண்ட ஒரு கடலரக்கனைப் போல கடல் நீரைக் குடிக்கத் தொடங்கியதும் ஒரு அழகிய அமைதிப் பூங்காக்களில் விளையாடும் ஆசையில் இருந்த சிறுவர்களைப் போன்ற உளநிலை கெட்டுப் போகின்றது. இறுதியாக யார் யாரையெல்லாம் வேண்ட முடியுமோ அவர்களையெல்லாம் வேண்டினார்கள். திக்கெல்லாம் சிதறிய அபயம் கேட்டு அழுத குரல் அன்று யாருடைய செவிகளிலும் கேட்கவில்லை. யாருடைய கருணைக் கண்களும் பார்க்கவில்லை. சபிக்கப்பட்ட மக்களின் கடல் பயணம் கடலுள் கட்டப்பட்ட சமாதிக்குள் முடிவடையப் போகின்றது.

அந்த றோலர் திரும்பி கப்பலை நோக்கி எதிர்நீச்சலிடுகின்றது. சடுதியாக நிறுத்தி அதனை சீர் செய்யமுடியாத மாலுமி கப்பலோடு மோதவிடுகின்றான். பாறையில் குழந்தைகளை மோதியது போன்று சிதறிய றோலர் இரண்டாகப் பிழக்க அகதி யுகத்தின் மனிதர்கள் கடலில் தத்தளிக்கின்றார்கள்.

கப்பலுக்குள் இருந்த இரத்த உறவுகள் துடித்தன; மாலுமியிடம் ஓடிப் போய் மன்றாடின; ஏக்கத்தோடு ஒப்பாரித்தன; முடியவில்லை. தாங்களே மீட்புப் பணிகளில் இறங்கி ஆறு பேரை மட்டும் காப்பாற்றியிருக்கின்றார்கள். மிகுதிப் பேர் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்படுவதைக் காணச் சகியாத உறவுகள் மாரடித்து அழுதன.

உயிர் தப்பியவர்களில் சிலர் கிரேக்க ரிப்போலி நகரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பனிப்புயலடித்துக் கொண்டிருந்த வேளையில் 140–க்கும் அதிகமான ஈழத்தமிழர்களை கிரேக்கக் கடல் சுமந்து உறைந்து ஊமையாய் கிடக்கின்றது. புலம் பெயர்ந்த தமிழீழ மக்களே மீண்டும் மீண்டும் தொடர் கதையாய் இக்கதைகள் நீள நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா?

**-வாசன்**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொங்கலே வாழி !!

பூட்டிய விலங்கைப் பொடிப்பொடியாக்கி
போர்த்திய இருளின் பொய்மைகள் போக்கி
சூரியப் புதல்வரின் தீக்கரம்பட்டிட
எழுவான்கரையில் எழுந்தனன் கதிரோன்
இனிய பொங்கலே என்றென்றும் வாழி

பேய்வலம் வந்திடச் சிதைந்தது பூமி
வானம் இருண்டது. வழியது மறைந்தது.
நோய்பிடித்ததாய் நொடிந்தது தேகம்
துயர்கவ்விடத் துடித்தது உள்ளம்
சூரியப்புதல்வரின் தீக்கரம்பட்டு
எழுவான் கரையில் எழுந்தனன் கதிரோன்
இனிய பொங்கலே என்றென்றும் வாழி

துன்பம் அகன்று துயர்ப்பாடல்தான் மறைய
இன்பம் நுகருகின்ற இனிய வேளைதான் புலர
விடுதலை! விடுதலை!! விடுதலையை உளம் சுவைக்க
தாய் நிலம் மலரத் தமிழ் மகள் சிரிப்பாள்
சூரியப் புதல்வரின் தீக்கரம்பட்டு
எழுவான்கரையில் எழுந்தனன் கதிரோன்
இனிய பொங்கலே என்றென்றும் வாழி!

– ஜெயா

www.tamilarangam.net




Printed by: Vasan printer U.K. Tel:0181 646 2885